Registeredta the G. P. O: as a Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 15

சுதந்திரன்

SUTANTIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO—12.

Office of the Registrar of Books & Newspapers, 2 JAN 1956

USHA உஷா

கை மெஷின் ரூ. 225-00
டிரெடல் ரூ. 315-00
போல்டிங் ரூ. 340-00

சோல் ஏஜண்ட்: G. H. REIMOO.
17, புதிய சோனகத் தெரு, கொழும்பு.
டெலிபோன்: 6060

அதிகம் 9 மனமத வரு மாத 9 திகதி 22-1-56 சுபகிருது தமிழ் ஐ ஆதிர் பிறை 8 இதழ் 34

கொத்தலாவலை ஆட்சியை வெளியேற்றுங்கள்!

திரு டட்லி இலங்கை மக்களை அறை கூவி அழைப்பார்

ஓய்வு பெறும் முன்னாள் பிரதமரின் இறுதி வேண்டுகோள்

(நமது நிருபர்)

யு. என். பியிலிருந்தும், அரசியலிலிருந்தும் விலகுவதாக அறிக்கை வெளியிட்ட முன்னாள் பிரதமர் திரு டட்லி சேனநாயகா அடுத்த பொதுத்தேர்தலில் கொத்தலாவலை அரசாங்கத்தை வெளியேற்றுமாறு மக்களை கேட்டுக் கொள்வார் என்று நம்பகமான வட்டாரங்களிலிருந்து சுதந்திரனுக்கு செய்தி கிடைத்துள்ளது.

திரு டட்லி சேனநாயகா அரசியலிலிருந்து விலகுவதை தடுப்பதற்கு முயன்று தோல்வி கண்ட அவரது நண்பர்கள், மேற் கண்ட வேண்டுகோளையாவது அவர் பொது மக்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனராம். தமது இல்லமான 'வூட்லண்ட்' ஸில் ஒய்வெடுத்த போதிலும்கூட அங்கிருந்த படியே நாட்டிற்கு அவர் தலைமை வகிக்க வேண்டும் என்பதே திரு டட்லியின் நண்பர்களது விருப்பம் என்று தெரிகிறது.

தீவிரமான அரசியலுக்கு மீண்டும் வரப்போவதில்லை என்று இரகசிய சம்பாஷணைகளின் போது தெளிவாக்கிய திரு டட்லி சேனநாயகா, கொத்தலாவலை அரசாங்கத்தை நீக்குவதன் அவசர அவசியத்தை எடுத்துக் கூறினராம்.

மேற் காணும் பிரச்னைகளில் இறுதி ான ஒருமைப்பாட்டிற்த வர முடிந்தால் கீழ்காணும் கோஷ்டியினருக்கு பொதுத் தேர்தலில் ஆதரவளிக்த மாறு திரு டட்லி சேனநாயகா பொது மக்களை கேட்டுக் கொள்வார் என்றுநம்பப்படுகிறது:

1. ஆர் ஜி சேனநாயகாவுடன் தொடர்புள்ள கோயக்கள். (திரு ஆர். ஜி. தனது பாராளுமன்ற குழுவை நிறுவ எண்ணியுள்ளார் என்று தெரிகிறது: இந்த கோஷ்டி பண்டாரநாயகாவின் கட்சியுடன் தேர்தல் கூட்டு செய்து கொள்ளும்)

2. ஆர். ஜி யின் ஆதரவாளர்கள் போட்டியிடாத தொகுதிகளில் பண்டாரநாயகாவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அபேட்சகர்கள்.

கீழ்காணும் முக்கிய பிரச்னைகளில் திரு டட்லி சேனநாயகா, திரு எஸ். டப்ளியு. டப்ளியு ஆர். டி. பண்டாரநாயகாவுடன் கருத் தொருமைப்பாடு கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

1. தனிச் சிங்களம். (2) புத்த மதம் (3) இலங்கை இந்தியர் பிரச்னை.

மேலும் மேற் கூறிய கோஷ்டியினர் கருதுகிறார்கள்.

தனிச் சிங்களத் தீர்மானத்தை களனியில் நிறைவேற்றி, அதை அமுல் கொண்டுவர ஆரம்ப நடவடிக்கைகள் எடுத்த பின்தான் தேர்தலில் போட்டியிடவேண்டும் என்றும், இல்லையென்றால் அரசியல் எதிரிகள் களனி தீர்மானம் வெறும் ஏமாற்றம் என்ற கோஷத்தை கிளப்பி மக்கள் அனுதாபத்தை பெறுவதற்கு முடியும் என்றும் இவர்கள் வாதித்துள்ளார்கள்.

அடுத்த பொதுத் தேர்தலை எப்பிரலில் நடத்தப்படாதென்றும் காலரை றையின்றி ஒத்திப்போட வேண்டுமென்றும் இவர்கள் யு. என். பி மேலிடத்தை நிர்ப்பந்திப்பதாகத் தெரிகிறது.

ஏப்ரலிலேயே தேர்தலை நடத்துவதுதான் இடதுசாரிக் கட்சிகளையும், மற்

(9-ம் பக்கம் பார்க்க)

உள்ளும் புறமும்!

தேர்தல் ஊழலுக்கு சட்டரீதியான கவசம்

எதிர்க் கட்சிகளின் நல்ல யோசனைகள் மறுக்கப்பட்டன

(நமது நிருபர்)

தேர்தலில் ஊழல்களுக்கும், சீர்கேட்டிற்கும் சட்டரீதியான முகமூடியளிக்க யு. என். பி. தீர்மானித்துள்ளது.

பாராளுமன்றத் தேர்தல் சட்டத்திலும், தேர்தல் முறையிலும் பெரும் மாற்றத்தை சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட தேர்தல் சட்ட திருத்த மசோதா ஏற்படுத்தியுள்ளது.

தேர்தல் ஊழலுக்காக போட்டியிடும் உரிமை இழந்தவர்களுக்கு இந்த திருத்தம் நல்ல பதிரமளித்து போட்டியிட வசதிசெய்து கொடுக்கிறது. தேர்தல் ஊழலுக்காக ஆசனத்தை இழந்த இ. எல். சேனநாயகாபோன்றவர்கள் இந்த சட்டத்தின் கீழ் போட்டியிடும் உரிமையைப் பெறுவார்கள்.

1955 ஜூன் மாதத்தில் தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு ஆலோசனை கூறுவதற்காக அரசாங்க, எதிர் கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு கமிட்டி நிறுவப்பட்டது.

எதிர்கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர்கள் பல முக்கியமான ஆலோசனைகளை சமர்ப்பித்திருந்தார்கள். ஆனால் இந்த ஆலோசனைகளை இவ் வருட ஆரம்பத்தில் நடந்த மந்திரிசபைக் கூட்டம் ஒரேயடியாக புறக்கணித்தது.

தினசரிப்பத்திரிகைகளால் இருட்டடிப்புச் செய்யப்பட்ட எதிர்கட்சி அங்கத்தவர்களின் ஆலோசனைகளில் முக்கியமானவற்றை நாம் இங்கு தருகிறோம்:

(1) ஒவ்வொரு வாக்காளருக்கும் பிரத்தியேக அறிமுகச்சிட்டைகள் கொடுப்பது அல்லது பெருவிரலில் மை பூசுவது.

2) ஒரே நாளில் தேர்தலை நடத்துவது.

(3) 18 வயதடைந்த சகலருக்கும் வாக்குரிமை அளிப்பது.

(4) வேலை செய்யும் மக்கள் நேரத்தோடேயே வாக்களிப்பதற்கு ஏற்றவாறு வாக்களிக்கும் நேரத்தை கூட்டுவது.

(5) இன, ஜாதி, அடிப்படையில் தேர்தலில் வாக்குப்பெற முயல்வதை சட்ட விரோதமாக்குவது

தேர்தலை ஒத்திப்போட பகீரதப் பிரயத்தனம்

இந்த வருடம் ஏப்ரல் மாதம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் பொதுத் தேர்தலை ஒத்திப் போடவேண்டும் என்று ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒரு பலம்பொருந்திய பகுதியினர் பகீரத முயற்சி செய்து வருவதாக நம்பகமான செய்தி ஒன்று கிடைத்திருக்கிறது.

இன்றுள்ள நிலையில் தேர்தலில் போட்டியிடுவது தமக்கு ஆபத்தாக முடியலாம் என்று யு. என். பியைச் சேர்ந்த இவர்கள் கருதுவதாகச் சொல்லப்படுகிறது.

தனிச்சிங்கள கொள்கையை யு. என். பி. ஏற்றுக் கொண்டாலும் நிலைமையை இலகுவில் சமாளித்துவிட முடியாதென்றும், தேர்தலில் ஏராளமான புத்த பிக்குகள் போட்டியிடவிருப்பது நிலைமையை மேலும் மோசமாக்கலாம் என்றும் இவர்கள் வாதித்துள்ளார்கள்.

சிங்களம் மட்டுமே அரசாங்க மொழியாக்கப்படும் என்று யு. என் பி. தீர்மானம் நிறைவேற்றிவிட்டு நடைமுறையில் ஆங்கிலத்தையே வைத்திருக்கும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இப்போதே பிரச்சாரம் செய்து வருவதாகவும் இந்த பிரச்சாரத்தை சமாளித்து ஒரு மொழி இயக்கத்தவர்களிடமுள்ள சிங்கள மக்களின் அனுதாபத்தை யு என். பியின் பக்கம் உடனடியாக திருப்பி எடுப்பது கஷ்ட

மூலம்

சகலவித மூலநோய் சங்காரி

மூல நோய்களுக்கு ஓர் வரப்பிரசாதம். ஒரே போத்தலில் குணம் தெரியும். தவிர, சகலவித வாதங்கள், ஊறல், படை, (Eczema) இரந்தி, மற மறப்பு, முதலானவைகளுக்கும் அதியற்புத குணமளிக்கும்.

கடைசிக் கடத்தாமல்

உடனே வாங்கிக் சாப்பிடுங்கள்

ரிச்லெட் ப்ளட் பில்ஸ்

கேட்லாக் இலவம்!

வெஸ்டன் ஏஜென்ஸீஸ்,
170, ஆட்டுப்பட்டித்தெரு,
கொழும்பு. போன்: 2805

தேர்தல் ஊழலுக்காக ஆசனத்தை இழந்தவர்களுக்கு இந்த திருத்தம் நல்ல பதிரமளித்து போட்டியிட வசதிசெய்து கொடுக்கிறது.

இ. எல். சேனநாயகாபோன்றவர்கள் இந்த சட்டத்தின் கீழ் போட்டியிடும் உரிமையைப் பெறுவார்கள்.

1955 ஜூன் மாதத்தில் தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு ஆலோசனை கூறுவதற்காக அரசாங்க, எதிர் கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு கமிட்டி நிறுவப்பட்டது.

எதிர்கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர்கள் பல முக்கியமான ஆலோசனைகளை சமர்ப்பித்திருந்தார்கள். ஆனால் இந்த ஆலோசனைகளை இவ் வருட ஆரம்பத்தில் நடந்த மந்திரிசபைக் கூட்டம் ஒரேயடியாக புறக்கணித்தது.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன் பிரிவினால் கதறிக் கலங்கும் மனைவி

சிறகொடிந்து திசை தெரியாது தவிக்கிறேன் என புலம்புகிறாள்

கிராமியக் கவிதை தரும் அகத்துறைக் காட்சி

எம். வை. எம். முஸ்லிம்

ஹஜ்ஜிப் பெருநாள் மாதம். அந்தக் கிராமத்தில் அனேக இடங்களில் விவாகச் சடங்குகள் பல நிறைவேறின. கோடி வீட்டுக் கொஸ்தாப்பரி மகளுக்கும், பிரபல போடியார் பக்கீர்த்தம்பியின் மகனுக்கும் பிறை பதினொன்கில் 'நிக்காஹ்' நடத்துவதாகப் பேசிக் கொண்டனர். பருவத்தின் எழிலிலே பூத்துக் குலுங்கும் ஒரு இளமொட்டு அவள். அதற்கேற்ற உடற்கட்டு நிறைந்த இளங்காளை அவன். மாறிக் கட்டிய சோமனுடன் வேப்பர நிழலில் நின்று நெற் குத்தும் போது அவள் அழகே தனி அலாதி. சிவப்புச் 'சிறுவாலு'டனும், முண்டாசுக் கட்டுடனும் வயலுள் நின்று அவன் வரம்பு கட்டுகையிற் தான் எவ்வளவு அழகு! உண்மையில் இருவரும் மிக மிக நெருங்கிய பொருத்தமுள்ளவர்கள் என்பது சொல்லாமலே விளங்கும். அறுபது பவுண் கைக்காசும், பதினொரு ஏக்கர் நிலமும் கைக்கூலி சீதனமாகத் தந்து விடுவதாக பெண்ணின் தந்தையார் கூறினார். விவாகம் முடிந்து ஒரு மாத கால எல்லையுள் கைக்கூலிப் பணத்தை தருவதாகவும் வாக்குறுதிபண்ணினர் அவர். ஹஜ்ஜி மாதம் பிறை பதினெட்டில் ஊர்ப் பெரியார்கள் மத்தியில் இருவருக்கும் நிக்காஹ் நடந்தேறியது.

மணமக்கள் தம் இன்ப மான வாழ்க்கை நிலையை இன்பமாகவே கழித்தனர். தம்பதிகளின் மனமொப்பிய வாழ்க்கை மாதமொன்றை யுதிர்த்துவிட்டது. புதுத் தம்பதிகளும் பழைய தம்பதிகளாயினர். ஒரு மாதம் சென்றதும் தருவதாகக் கூறிய கைக்கூலிப் பணம் கிடையாமையினால் தன் மனைவியை அனுப்பினார் போடியார், கொஸ்தாப்பர் வீட்டுக்கு. பாவம்! கொஸ்தாப்பர் தயாராயில்லை. இன்னும் இரண்டு நாளில் தந்து விடுவதாகக் கூறினார். இரண்டு நாட்களும் சென்றன. காசுக்கு ஆள்விடப் பட்டது. காணியொன்றை விற்று இன்னும் நான்கு நாட்களுக்குள் தந்துவிடுவதாகக் கூறியனுப்பினார் கொஸ்தாப்பர். நாலு நாட்களும்சென்றன. காணியோ, கிணியோ ஒன்றும் விற்கவுமில்லை; வாங்கவுமில்லை. போடியாருக்குக் கோபம் கோபமாகவந்தது. கொஸ்தாப்பர் வாய்மை தவறியமைக்காகக் கொழுந்துவிட் டெரித்தது அவருள்ளம். கொஸ்தாப்பர் தன்னை ஏய்த்துக் கலியாணம் செய்து கொண்டதாகக் கறிபண்ணினார் அவர். ''கொஸ்தாப்பர் மகளுக்கு கொடுக்கிறேன் பாரு புருஷன்'' என்று கோபமாகவே கூறிக் கொண்டார். இன்னும் இரண்டு நாள் மனத்தன்மைக்காக விட்டுப் பார்த்தார். ஒன்றுமே முடியவில்லை. தனது மகனை - தான் வளர்த்து மனிதனுக்கிய குலக்கொழுந்தைத் திருப்பி வீட்டிற்கனுப்புக் கொள்வதென்று முடிவு செய்தார். முடிவும் பிரசித்தமாயிற்று.

செய்தியைக் கேட்ட தம்பதிகள் சித்தங்கலங்கினர். ஒரே கல்லியில் ஒன்றுக அருந்திய இரு சிட்டுக்கள் பிரிக்கப்படப் போகிறதே என்று எண்ணி வருத்தமுற்றனர் பல நன்னலவாதிகள். இவற்றையெல்லாம் கொஞ்சமேனும் பொருட்படுத்தவில்லை போடியார். தன் பணப்பையைத் திறந்து கொண்டே பணமேறினால் மகன் திரும்பி வருவான் மணப் பெண்ணிடம் என்ற கொள்கையில் இருந்தார். மண முடித்து இரு மாதம் கூட ஆகவில்லை; இப்படியா ஆகணும். மணமக்கள் இருவரும் மனம் வெதும்பினர். என்ன செய்யலாம். தந்தையின் கட்டளையைத் தட்டி நடக்க மகனுக்குச் சக்தியில்லை; சக்தியில்லாமலாக்கப் பட்டான். பெண்ணுக்கா பஞ்சம்; அதுவும் போடியாரின் மகனுக்கு. இன்றைக்கு இறையின் விருப்பும் அவசியமென்பது அவன் நினைவு. அவன்,

ஆண்டவனும் நாடி
அவர் மனசைத் தான்
திருப்பி
சோடாக்கி வைப்பான்
அல்லாஹ்
சோகந்தவிர் போய்வாறேன்

என்ற பாட்டைப் பாடி பிரியாவிடை கூறுகின்றான். போடியாரின் மனதை இறைவன் நல்வழிப்படுத்தினால் தம்பதிகள் சோடாகலாம். ''அப்படியே ஆக்குவான் இறைவன்; அது மட்டும் உனக்குச் சோகம் வேண்டாம்'' என்று கூறுகின்றான் அவன். தம்பதிகளிருவரும் பிரிய மனமின்றிப் பிரிகின்றனர். ஒரே கூட்டில் வளர்ந்த இரு சிட்டுகளில் ஒன்றை வலுக்கட்டாயப்படுத்தி யாரோ கொண்டு சென்றனர். மற்றச் சிட்டுக் கலங்கி கதறிக் கண்ணீர்விட்டது; வேறென்னதான் அதாற் செய்ய முடியும்.....

நாட்கள் பல சென்று மறைந்தன. தன் கணவனைப் பிரிந்த துன்பத்தால் ஏங்கித் திரிந்தாள் அப்பெண் பேதை. தன் சங்கடங்களையும், சுகதுக்கங்களையும் யாருடனே சொல்லியழ வேண்டுமென்றிருந்தது அவளுக்கு. கணவனின் எண்ணமாக உட்கார்ந்திருக்கையில் அவள் மூத்தம்மா அந்தப் பக்கம் வந்தாள். 'தன்னை விட அனுபவத்திற் கூடியவர்கள் அனைத்தையும் ஆராய்ந்தறியும் பண்புமிக்கவர்கள்' என்ற வாழ்க்கைதத்துவத்திற்கினங்க அவள் மூத்தம்மாவிடம்,

பறக்கும் பறவையென்றுல்
பறந்திடுவேன் வடகரைக்கு
—என்ர
சிறகு முறிந்ததினுல்-எனக்கு
திசை தெரியா மூத்தம்மா

என்று பாடுகிறுள் தனது இரு சிறகுகளுமிருப்பின் எப்படியாயினும் எதையும் சமாளித்துவிட முடியும். ஆனுல் சிறகுகள் ஒடிந்த நிலையில் பறக்க முடியாது. திசையும் தெரியாது. தன் கணவனைப் பிரிந்தபடியால் சிறகொடிந்த பறவையான அப்பெண்ணரங்கின் நிலைமைதான் எத்துணைத்து. 'எல்லாம் தலை நஸீபும்பா' சுவலைப்படாதே! இறைவன் துணைபுரிவான்'' இதைவிட வேறென்ன கூறுவாள் கிழவி. பாவம்! இதைப் போல எத்தனைவகையான துன்பங்களைக் கண்டு சகித்து முற்றியவள் கிழவி.

அன்று படுக்கைக்குப் போனவள் பாயிற் புரண்டு புரண்டு அழுதாள். விம்மி விம்மிப் புரண்டாள். ஏதோ கனாக்கண்டவள் போலானுள். இதையறிந்த அவளது சகோதரி வினவினுள். வினவிய தன் சகோதரிக்கு,

சிரித்த முகமும் தாத்தா
செல்லக்கதையழகும்
நித்திரைக் கண்ணிலேயும்-
அவர்ர
நினைவு வந்து தோணுதுகா

என்று பாட்டின் மூலம் தெளிவு படுத்துகின்றுள். சிரித்துச் சிரித்து அழகொழுகப் பேசும் அவனது அன்பு முகமும், கொஞ்சும் தன்மைதான கிளிப்பிள்ளைக் கதையும் அவளது நித்திரைக் கண்ணில் உண்டாகி, நினைவுக்கு வந்து அவரை எண்ணச் செய்வதாக அவள் கூறுந்தன்மை உண்மையிலேயே உணரத்தக்கதாகும்; மீண்டுமவள்

கிராமிய இலக்கியம்

முடியாத வேதனை. பாழும் கைக்கூலிப் பணம் படுத்திய பாட்டை என்னென்று கூறுவது. அவனைவிட்டுப் பிரிவதென்றுல் அவனுல் முடியாதுதான். கடமைக்காக அவனை விட்டுப் பிரிந்தாலும் அவனை மறக்க முடியாது. மறக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டாலும்கூட அவளுடைய அங்க இலட்சணங்களை மறக்கவே முடியாது. சிறப்பான ஒருசில என்றும் நினைப்பிலிருந்து கொண்டேயிருக்கும். அழகுக்கு அழகு செய்யும் அவள் சாற்தண்டை. அதற்கேற்ற பூட்டுக்காப்பு. அள்ளிவிட்ட பிடவைக் குசகம். அவன் ஏதோ நினைத்தவண்ணம் பாடுகின்றுன்:

கொண்டை யழகும்
கூர்விழுந்த மொக்காடும்
நெற்றியிளம் பிறையும்
—என்ர
நெஞ்சைவிட்டு மாறுது...

என்று பாடுகிறுன் அவளை அவன் மறக்கலாம்; ஆனுல் அவளது கொண்டையையும் கூர்போன்று அமைந்த அழகுக்கு அழகுசெய்யும் 'மொக்காட்டை'யும் இளம்பிறை போன்ற நெற்றியையும் அவனுடைய நெஞ்சிலிருந்து பிரிக்க முடியாதென்று கூறும் தன்மை நோக்கத் தக்கதாகும்.

அவளும் என்னசும்மாவா? அவள் அவனை மறந்துவிடுவதென்றுல் உலகில்உயிருடன் இருக்கு மட்டும் நடவாது. உயிர் பிரிந்தபின் மறந்துவிட முடியும். இந்த கருத்தையுட்புகுத்தி,

உன்னை மறப்பதென்றுல்
உசிரோட நடவா மச்சான்
செத்து மடிவதுதான்
சிறந்த வழி போய்வாரும்

என்று பாடுகிறுள். பாடிவிடை கொடுக்கிறுள். தான் உயிருடன் இருக்கு மட்டும் எவ்வகையினும் அவனை மறக்க முடியாதென்று அவள் கூறுந்தன்மை நோக்கத்தக்கதன்றே! அவனை மறப்பதைவிட மாண்டு மடிவதே புத்தி என்று அவள் கூறும்போது அவ்விடம் பெரிதும் நயத்தற்குரியதாகும். அவன்தான் என்ன செய்ய முடியும். தலையெழுத்து மாறும்

காட்டுக் கிளிகளெல்லாம்
எந்தக்
காட்டிலேயும் தங்கிவிடும்-
என்ர
கூடு கலஞ்ச கிளி எந்தக்
கொப்பிலேயோ நானறியேன்

என்று பாடுகிறுள்: காட்டிலே வாழும் கிளிகளெல்லாம் ஒரு நாளும் விட்டில் தங்காது; காட்டுக்கே சென்றுவிடும். ஆனுல் வீட்டில் கூடு கட்டி வளர்த்த கிளி காட்டில் தங்குவதாயின் கஷ்டம்; தன்னுடன் கூடி வாழ்ந்த தன் கணவன் எங்கெங்கிருந்து என்ன என்ன யோசிக்கின்றுரோ; எப்படி எப்படி இருக்கின்றுரோ என்று எண்ணுகின்றுள். தாராட்டுவது போல் அவருக்கு வேறு யாருட்டப் போகிறுர்கள் என்பதும் இவன் நோக்கத்தக்கது. அவளது உவமான உவமேயம்தான் எத்துணை சிறந்தது. இன்னும் ஏதோ கூற நினைத்தவள்,

வாழைப் பழத்தைத் தாத்தா
வயிறு நிறையத் தின்று
லும்
தேனெரு வாய் தின்னுமல்
திகட்டுதில்லை என் நபுஸி

என்று அழகொழுகப் பாடி வைக்கிறுள். எப்படித்தான் அறுசுவை உண்டியுடன் அழகாகச் சாப்பிட்டாலும் கணவனின் கைப்பிசைந்த ஒரு பிடிசோறு எங்ஙனும் ஈடாகாது என்பது அவள் நோக்கம்; அப்படிசாப்பிடாவிட்டால் அது ஒரு குறையாகவும், மனம் ஒருப்படாததாகவுமிருக்கிறதாகக் கூறுகிறுள். பாவம் இதிலிருந்தே எத்தகைய நிலையில் அத்தம்பதிகள் இருந்திருக்கிறுர்கள். புதுமணத்தம்பதிகளல்லவா? 'இத்தகைய ஒரு சோடியைப் பிரித்து வைத்த படுபாவியாரடா?' என்றுகூட எம்மனம் வினவுகின்றது; அந்தநிலைதான் அவளுக்கும்;

இத்தனையையும் கூறக் கேட்ட சகோதரி என்னதான் கூறமுடியும். நடந்தது நடந்து விட்டது. இனிமேற் கொண்டு நடப்பவற்றைக் கவனிக்க வேண்டும். கணவன் பிரிந்த துக்கத்தைத் தாளாத தங்கச்சிக்கு அவள்,

நாயன் விதிப்படியே
நானிலத்தில் எல்லா
முண்டும்
கல்பிலுள்ள கக்கிசத்தை
விட்டெறிகா வந்திடுவார்

என்று ஆறுதல் கூறுகின்றுள். இன்பமும் துன்பமும் இறைவன் விதிப்படியே என்பது சகோதரியின் எண்ணம்; சகோதரியின் ஆறுதல் மொழிகளால் தேறுதலடைந்த அப்பெண், மீண்டும் எதையோ நினைத்துக் கொண்டு தன்னைத் தயார் படுத்திக் கொண்டாள். கண்ணீர் வடிவதையும் முந்தானையால் துடைத்துக்கொண்டாள்; விழுந்து கிடந்த மொக்காட்டைச் சரிசெய்து கொண்டாள். தொழுது முடிந்த பின் 'துஆ' ஓத இருக்குமாப் போலிருந்து கொண்டு தன்னிரு கைகளையுமேந்தி,

கோட்டைமுனை அவுலியாவே
குழந்தையும்மா
நாச்சியாரே—என்ர
தங்கமுடி இராசாட
சதிர சுகம் எப்படியோ

என்று பாடுகின்றுள்; கணவனைப் பிரிந்து நிர்க்கதியான அச்சந்தர்ப்பத்திலும் கணவனின் சேகுசுகம் விரும்புகிறுள் அப்பெண்மணி; கோட்டைமுனையில் அடங்கப்பட்டிருக்கும் அவுலியாவிடமும், காத்தான்குடியில் கபுறுகொண்டிருக்கும் குழந்தையும்மா நாச்சியாரிடத்திலும் தனது கணவனின் நிரேக சுகத்தை வினவும் அம்மாதின் மனநினைதான் என்னே! இந்தவகையிலாவது அவளது மனம் சற்று நிம்மதியடைந்தது; தன்னைத் தயார்படுத்திக் கொண்டு படுக்கையிற்புரள்

(13-ம் பக்கம் பார்க்க)

சிறந்த அச்சு வேலைகளுக்கு அழகான எழுத்துக்கள் அவசியம்

நவீன முறைப்படி அச்செழுத்துக்களை வார்க்கும் உயர்தரமான இயந்திர சாதனத்தை நாம் புதிதாக நிறுவியுள்ளோம் என்பதை நமது நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

8, 10, 12, 14, 16, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

நாம் இப்பத்திரிகையில் உபயோகிக்கும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. இவ்வெழுத்துக்கள் உயர்தரமான உலோகத்திலும், தரம் சற்று குறைந்த உலோகத்திலும் விலைக்குத் தக்கபடி கிடைக்கும். வேண்டியவர்கள் விவரத்திற்கும் விலைப் பட்டியலுக்கும் எழுதவும்.

10 பொயிண்ட் ரோமன்
10 பொயிண்ட் போல்ட்
12 பொயிண்ட் ரோமன்
12 பொயிண்ட் போல்ட்
14 பொயிண்ட் போல்ட்
18 பொயிண்ட் போல்ட்

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக்கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக்கொள்ளலாம்.

சுதந்திரன் ரைப் பௌண்டரி,
194 ஏ, தட்டா தெரு. கொழும்பு-12

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காதலும்-சாதலும்

"நீங்கள் இருவரும் இரு துருவங்கள் என்று நான் முன்னர் கூறினேன். நீங்கள் தமிழர்; இந்து; சீதனம் பெறலாம். நான் யாவற்றிற்கும் எதிர்மறை. ஆயினும் தடைகள் யாவற்றையும் மறந்து காதலித்தீர்கள். நான் பெற்றோரை மறந்து, மதத்தைவிட்டுத் துணிந்தேன். நீங்கள் திருமணத்திற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்தீர்கள். இப்போது "தாயார் மறுக்கிறார்! அவரை மறந்து திருமணம் செய்ய முடியாது" என்று கூறுகிறீர்கள். அதை நான் ஒப்புகிறேன். ஆனால் இதைப் பற்றி முன்னர் நீங்கள் ஏன் சிந்திக்கவில்லை.....?

"இனிமேலும் உங்கள் தாயார், நீங்கள் காதலிக்கப்போகும் ஏழைப் பெண் ஒருத்தியின் உள்ளத்தை உடைக்காது காப்பாற்றிக் கொள்ளுங்கள்....."

மிஸ் கிலேற்றன் என்ற இளம் பெண் சென்ற வாரம் தனது காதலனுக்கு இப்படியான ஒரு உருக்கமான கடிதம் எழுதிவைத்துவிட்டு அலுவலகத்திலேயே தற்கொலை செய்து கொண்டாள். "தற்கொலை செய்து விடுவேன்" என்று மிரட்டும் தாயாரின் பக்கம் நிற்கும் காதலர்கட்கெல்லாம் சவுக்கடி கொடுத்துவிட்டு அவள் மறைந்துவிட்டாள்;

உலகிலே ஒரு மனிதன் இறுதியாகச் தியாகம் செய்யக்கூடிய ஒரே ஒரு பொருள் கிடைத்தற்கரிய இந்த உயிர் ஒன்றேதான். அதற்கு மேல் மனிதன் எதையும் தியாகம் பண்ணித்துவிட முடியாது. உலக வரலாற்றிலே. பிறந்த நாட்டிற்காக—வாழ்ந்த நாட்டு மக்களின் வாழ்விற்காக உயிரைத் தியாகம் செய்தவர்கள் பலர். அவர்களெல்லாம் வரலாற்றிலே இடம்பெற்றுள்ளார்கள். தவறினலும் அவர்கள் சிந்திய இரத்தம் என்றுமே வீண் போனதில்லை. அவர்களது இரத்தத்தினுல் தான் இன்றோர் புத்துலகச் சமுதாயத்தில் இன்னல் மறந்து கோடிக்கணக்கான மக்கள் வாழ முடிகிறது.

உலகத்திலே மனித இனம் தோன்றிய அன்றுதொட்டே வேறும் பலர் பல்வேறு காரணங்களுக்காக தமது உயிரை நீத்துள்ளனர். அவற்றுள் ஒன்று காதல். அதற்காக உயிர் நீத்தவர்களில் காதல் வெற்றிபெறுவதற்காகப் போராடி நீத்தவர் சிலர். எதிர்ப்பைத் தாங்க வலிவற்றவர்களாகத் தற்கொலை செய்தோர் பலர். இவர்களது செயல்களையெல்லாம் நாம் வரவேற்க முடியாது; அதனுல் (கா) தற்கொலைகளை உலகிலேயே ஒழித்துவிடலாம் என்றும் நாம் கூறுவதற்கில்லை.

உலகிலேயே காதல் இலக்கியங்கள் மலிந்த ஒருமொழி உண்டென்றுல் அது தமிழே தான். சங்க இலக்கியங்களெல்லாம் காதலும் வீரமும்செறிந்தவையே. தோல்வியடைந்த காதலைப் பற்றி பண்டைத் தமிழ் இலக்கியங்கள் இல்லை என்று கூடச் சொல்லலாம். உண்மைக் காதலுக்கு எதிர்ப்பு ஏற்படுவதையும், ஊரார் பலர் தூற்றுவதையும் காதலர் கூடிக்கொண்டு ஒடிச் சென்று இன்பமாக வாழ்வதையும் பற்றியே சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. தாயின் எச்சரிக்கைக்கு அஞ்சி காதலியை கைவிடும் சிவசுப்பிரமணியங்களையும், அதற்காக உயிர்விடும் மிஸ் கிளேற்றன்களையும் அங்கே காண முடியாது.

உலகிலே காதலை வளர்த்த பெருமை கவிஞர்க்குத்தான் உண்டு காதலை ஆதரிக்காத இலக்கியங்களை எந்த மொழியிலும் காணமுடியாது. காதலுக்காகத் தற்கொலை செய்ததாக இலக்கியம் படைத்தல் மரபு அல்ல என்பதும் தமிழ் நெறியேயாம்; காதலர்கள் ஒருபோதும் தோல்வியடையப் படாது என்பது புலவர் கருத்து. அதேபோது காதலுக்காகத் தற்கொலை செய்பவர்களும் உயர்ந்த காதலர்களல்ல என்பதும் அவர்கள் கருத்தாயிருக்கலாம்;

காதல் மட்டுமே வாழ்வல்ல. காதலுக்காகத் தற்கொலை செய்வது கோழைத்தனம் என்ற கருத்தையே எமது கருத்துமேடையில் பெரும்பான்மையோர் வாதித்துள்ளனர். அது உண்மையே. சமுதாயம் என்பது ஒரு மலை. அதிலே தனிப்பட்ட காதலர்கள் மண்டையை நொருக்கி இரத்தம் சிந்தி உயிர் விடுவதனுல் அம்மலையை அசைத்துவிட முடியாது. ஒரு சிறு பகுதியை இரத்தத்தால் நனைத்துவிட முடியும். அதுவும் சில நாளில் காய்ந்துவிடும். சமுதாயம் அக்காயத்தைச் சில நாட்களிலே மறந்து விடுகிறது.

காதலர்களும் அதைப் போலவே (கா) தற்கொலை செய்வதனுல் மக்களின் இரக்கத்தை மட்டும் ஒரு சில நாள் பெறமுடிகிறது. பின்னர் "சுடலை ஞானம் முடிந்ததும் மீண்டும் சமுதாயமலை அசையாது அப்படியே நிற்கிறது. இறுதியில் காதலர் பெற்ற இரக்கத்தினுல் எவ்வித பலன் ஏற்படுகிறது? மீண்டஉயிர் திரும்பி வந்து விடுகிறதா?

கட்டுப்பாட்டினுலே காதலை வென்று விடலாம் என்று எண்ணுவதும் முழுத்தவறே. சினிமாவில், நாடகத்தில், நாவலில் காதல் என்றதும் போற்றிப்படித்து விட்டு வீட்டிலே காதல் என்றதும் தாய்தந்தையர் சீறிப் பாய்வது எம் நாட்டில் மிக விசித்திரமான செய்தியேயாம்

'கீரன்"

தாய்தந்தையர் தமது குடும்பப் பகையை பிள்ளைகளது காதலின்மேல் தீர்க்க முயன்று தோல்வியடைந்த ஒரு மாபெரும் இலக்கியத்தைச் சேக்ஸ்பியர் படைத்தார். ரோமியோ—யூலியட் இன்றும் உலகத்தவர் உள்ளங்களெல்லாம் வாழ்கின்றனர். உண்மைக் காதலைக் கட்டுப்பாட்டினுல் தீய்த்துவிடலாம் என்று எண்ணுவது முற்றும் தவறு; கட்டுப்பாடு செய்வோர் என்றும் வென்றுவிட முடியாது இக் கருத்தைக் கொண்டு நம் கவி பாரதிதாசனும் ஓர் அற்புதமான கவிதை ஆக்கியுள்ளார்.

கருக்குமேடை

"சிராளன் தாவினுன்!
வீழ்ந்தான்! —வீழ்ந்தான்!
தேம்பிற்றுப் பெண்ணுலகு!
இருவர் தீர்ந்தார்!
ஊரார்கள் பார்த்திருந்தார்
கரையில் நின்றே
உளம் துடித்தார்; எனினும்
அவர் உயிர்வாழ்கின்றார்"

அப்பாடலின் இறுதி வரிகளே இவைகளாகும். "எனினும் அவர் உயிர் வாழ்கின்றார்" என்ற இறுதி அடி உலக மக்கள் அனைவருக்கும் சாட்டையடியாக அமைந்துள்ளது. காதலுக்காக உலகிலே உயிர்விடவல்லவர்கள் இருவரே. மற்றவர்கள் பார்த்து உயிர் துடிப்பார்கள்! அவ்வளவுந்தான். அவர்களால் உயிர்விட முடியுமா என்பதுபோல் கவிஞர் கேட்கிறார்.

இதைப் படித்துவிட்டுக் கவிஞர்கூட (கா) தற்கொலைகளை ஆதரிக்கிறார் என்று கொள்ளுதல் தவறு. "காதலே எதிர்த்தால், உலகே, நீ வென்றுவிடமாட்டாய். தோல்வியே அடைவாய்" என்று எச்சரிப்பதே கவிஞரின் நோக்கு.

இன்று காதலர்களின் கற்பனைகளில் மிளிரும் ரோமியோ யூலியெட், லைலா—மஜ்னு. அனர்கலி—சலீம் ஆகியவர்கள் பற்றிய வரலாறுகள் எவையும் கிடையாது. சேக்ஸ்பியராலும் மற்றக் கவிஞர்களாலும் "காதலே எதிர்ப்பவர்களை என்றும் வெற்றிபெறமாட்டார்கள்" என்பதை எச்சரிப்பதற்காக எழுதப்பட்ட காவியங்களே இவையாகும். 'காதல்—இன்றேல் சாதல்' என்று புலவர்கள் பாடியுள்ளார்கள் என்ற தற்கவாதத்தைக் கொண்டு உயிர்மாய்ப்பவர்களும் அவசர புத்திக்காரர்களே;

உயர்வு நவிர்ச்சி என்ற புலவர் வாய்பாடின்படியே 'காதல்—இன்றேல் சாதல்' என்பதையும் கொள்ளவேண்டும்.

காதல் உயிரிலும் சிறந்தது. காதலே எவராலும் வென்றுவிட முடியாது என்பதை மிகச் சிறந்த வழியாகவே முடியுமானால் [illegible]

நேல் சாதல்" என்றுதான் கூறமுடியும்.

காதல் என்பது மிக நுண்மையான உணர்ச்சி. மனித சாதியின் உள்ளத்திலே ஒராளவு இன்பத்தை எழுப்பக் கூடியது என்றிருக்குமானுல் அது காதல் உணர்ச்சி ஒன்றே ஒன்றுதான். இனம், மொழி, மதம், வயது அனைத்தையும் கடந்தது காதல். அதனுலேதான் மதகுருவர் தொடக்கம் புலவர்கள் ஈருக அனைவரும் காதலைப் பற்றியே பாடியுள்ளார்கள். காவியமாக்கி வெற்றி பெற்றுள்ளார்கள்.

இந்த நுண்மையான காதல் கலியாணத்தின் முன்னர்தான் ஏற்படவேண்டும் என்பதில்லை. தாய் தந்தையர் பேசிச் செய்யும் திருமணங்கள் அனைத்தும் காதல் அற்றவை என்று எவராலும் கூறிவிட முடியுமா? எமது சமூகத்திலே 99 வீதமான திருமணங்கள் அப்படியேதான் நடைபெறுகின்றன; அவற்றில் தோல்வியடைந்தவை மிகச் சில என்றுதான் கூறமுடியும். காதல் திருமணம் என்று நடைபெறுபவற்றிலும் இப்படியான தோல்விகள் ஏற்படுவதைக் காண்கிறோம்.

மேல்நாடுகளிலே 30, 40 வீதமான காதல் திருமணங்கள் நடைபெறுகின்றன. ஆனுல் அவையே மீண்டும் மீண்டும் விவாகரத்தில் அகப்பட்டு இரண்டாங் காதல், மூன்றும் காதல், நாலாங்காதல் என்று வளர்ந்து திருமணங்கள் நடைபெறுகின்றன.

இதனுல் திருமணத்தின் முன்னர் காதல் சிறந்தன்று என்ற வாதஞ் செய்வதாகக் கொள்ளாதீர்கள். திருமணத்தின் முன்னர் மனமொத்த காதல் ஏற்படுதல் மிக உயர்ந்தது. ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் நன்கு உணர்ந்து தமது விருப்பு வெறுப்புகளுடன் ஒப்பிட்டுப் பார்த்துத் திருமணம் செய்தல் சிறந்ததே ஆனுல், இப்படியான காதல் எத்தனை பேருக்குக் கிடைக்கிறது?

பருவமடைந்து சில ஆண்டுகளின் பின்னரே எம் நாட்டில் பெரும்பான்மையான திருமணங்கள் நடைபெறுகின்றன ஆகவே அந்த இடைக்காலத்தில் அதிகமாக ஒவ்வொருவரது உள்ளத்திலும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் காதல் ஏற்படத்தான் செய்கிறது. ஆனுல் 75 வீதமானவர்களிடைதோன்றும் காதல் (?) ஒருதலைக் காமமாக முடிந்துவிடுகிறது. 15 வீதமானவர்களிடை காதல் என்பதை உணரும் வயதுவர முன்னரே (பருவமடைந்ததும்) தாய் தந்தையர் திருமணத்தை முடித்து விடுகின்றனர். மீதியான 10 வீதத்தில் 5 வீதமானவர்களது காதல் பாடசாலைப் படிப்போடு முடிந்துவிடுகிறது. சமுதாய ஏற்றத் தாழ்வுகளினுல் மற்றைய 4 விகிதத்தினர் முதல் காதலை ஒருவாறு மறந்து மீண்டும் யாரையாவது மணந்து காதல் வாழ்வு நடாத்துகின்றனர். ஒரு வீதமானவர்களே காதல் திருமணத்தில் வெற்றி பெறுகின்றனர். இந்த விகிதங்களோடு ஒப்பிடும்போது (கா) தற்கொலை செய்யும் லட்சத்தில் ஒருவர் மிக மிகக் குறைவே. அவர்களைப் பற்றிய ஆராய்ச்சியிலேயே நாம் இறங்கியிருந்தோம். மகேஸ்—மீரா போன்ற (கா) தற்கொலைகள் நம் சமூகத்தில் ஏற்படப் படாது என்பதே இதில் பங்குபற்றிய எல்லோரது லட்சியமுயாக இருந்தது. பல்வேறு கோணங்களிலெல்லாம் சிந்தித்துப் பலரும் இப்பிரச்னையை ஆராய்ந்தனர். அதனுல் ஒரளவு தெளிவு பெற்றுள்ளோம். அதற்காகச் "சுதந்திரன்" தந்த சுதந்திரத்தை நாம் மறக்கமுடியாது.

புதிய தமிழ்ப் பாடசாலை

பொலநறுவைப் பகுதியில் உள்ள கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையொன்று சென்ற 4-1-56ல் மாணிக்கம்பிட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலைத் தலைமையாசிரியர் திரு சி. இராமநாதர் அவர்களால் சைவ ஆசாரப்படி குத்துவிளக்கேற்றி திறந்து வைக்கப்பட்டது. மேற்படி திரு இராமநாதர் தலைமையில் நடந்த கூட்டத்தில் கரும்பு ஆராச்சி நிலைய அதிபர் பேசும்போது பாடசாலைகளே தேசத்தின் தீபங்களென்றும் பாடசாலைகளின் மூலம்தான் நற்பிரசைகளை உற்பத்தி செய்யலாம் என்றும் குறிப்பிட்டார். திரு வி. ஆர். குமாரசாமி. திரு எம். சிவலிங்கம் முதலிய வேறு பலரும் பேசினர். ஈற்றில் புதிய பாடசாலைத் தலைமையாசிரியர் திரு க. சபாபதியின் நன்றி உரையுடனும் நூற்றுக்கதிகமான மாணவர்களுக்கு அன்னதானம் வித்தலுடனும் விழா இனிது நிறைவெய்தியது.

சுதந்திரதின பகிஷ்கரிப்பு இயக்கம் பரவுகிறது

அடுத்த மாதம் 4ந் திகதி நடைபெறவிருக்கும் சுதந்திரதின விழாவை பகிஷ்கரிக்கும் முகமாக பல இடங்களில் பொதுக் கூட்டங்களையும் ஊர்வலத்தையும் நடத்தி வருகின்றனர். இம்முயற்சியில் பெருவாரியான மாணவர்கள் கலந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. சுதந்திரதின விழா எப்படியான முறையில் கொண்டாடப்பட வேண்டுமென்று அக்கரைப்பற்றில் நடைபெற்ற ஒரு ஆலோசனைக் கூட்டத்தில் பலத்த காரசாரமான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதோடு இரு மிஷன்பாடசாலை ஆசிரியர்கள் கூட்டத்தில் இருந்தும் வெளியேறினர்களென்றும் அவர்களின் பாடசாலைகள் சுதந்திரதின விழாவில் கலந்து கொள்ள மாட்டாதென்றும் அங்கிருந்து கிடைத்த செய்தி ஒன்று கூறுகிறது. பல இடங்களில் சுதந்திரதின விழா பஹிஷ்கரிக்கப்படவேண்டும். தமிழ் பேசும் மக்கள் ஒன்று கூடுங்கள்" என்ற வார்த்தைகள் பொறிக்கப்பட்ட அட்டைகள் சகிதம் கிழக்கு மாகாணத்தின் பல இடங்களில் ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. இந்த முயற்சியில் தற்போது சாதாரண பொது மக்களும் கலந்துள்ளார்கள் என்று சொல்லுல் இப்பகுதியில் எல்லளவு விழிப்புணர்ச்சி அடைந்திருக்கிறார்கள் தமிழ் பேசும் மக்கள் என்பது புலனாகும்.

அழகான புத்தக வேலைகள்

கதை - கட்டுரை நூல்கள், பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்கள், சஞ்சிகைகள் அச்சிட விரும்புவோருக்கு அரிய சந்தர்ப்பம்;

சுதந்திரன் ரைப் பவுண்டரியில் தயார் செய்யப்பட்ட அழகான புதிய 10 பொயிண்ட் 12 பொயிண்ட் எழுத்துக்களைக் கொண்டு புத்தகங்கள் அச்சிட விரும்புவோர் சுதந்திரன் ஜொப் டிபார்ட்மெண்டைக் கலந்தாலோசிக்கவும். ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு பாஷைகளிலும் புத்தக வேலைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

குறைந்த கட்டணத்தில், இறந்த வேலைப்பாடுகளுடன், குறிப்பிட்ட நேரத்தில் உங்கள் புத்தகங்களை அச்சேற்றித்தரவல்ல அச்சகம் சுதந்திரன் பிரஸ் ஒன்றுதான்.

இன்றே உங்கள் தேவைகளுக்கு எழுதுங்கள்;

194 A, தட்டா தெரு,
கொழும்பு-12;

மானேஜர்,
சுதந்திரன் பிரஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 23.

ரொக்கப் பரிசு-ரூ 1000.00

முதலாவது பரிசு ரூ. 600-00 | இரண்டாவது பரிசு ரூ. 300-00

அதிகப்படியான விடைகள் அனுப்புபவருக்கு விசேஷ பரிசு ரூ. 100-00

முடிவு திகதி 15-2-56 பி. ப. 5 மணி | சரியான விடை 19-2-56ல் பிரசுரிக்கப்படும்

பரிசு பெற்றோர் விபரம் 26-2-56ல் பிரசுரிக்கப்படும் | பரிசு பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை 6-3-56ல் செக்மூலம் அனுப்பப்படும்

இடமிருந்து வலம்

1. இது சமீபித்துவிட்டதால் அரசியல் கட்சிகளிடையே அதிக சுறுசுறுப்புக் காணப்படுகிறது.
5. ஆயுதம்
7. நிலத்தை ஐந்து.....யாகப் பிரித்திருக்கிறார்கள் பழந் தமிழ் மக்கள்
8. செயல் சூனியமாயிருந்தபோதிலும் இதனால் மக்களே ஏமாற்றி தேர்தலில் வெற்றிபெறத் துடிக்கிறார்கள் சில அரசியல் தலைவர்கள்
9. விளாமரம்
10. சுவலை
11. வயதுபோனவர்களுக்கு பல்.....இயற்கை.
13. தோகை விரித்தாடும் அழகிய பட்சி.
14. எந்த அரசாங்கத்திற்கும் இது அவசியம்
16. பாடகனுக்கு தெரிந்திருக்க வேண்டியது
17. சிந்துவெளி நாகரிகம் இவர்களுடைய நாகரிகம்தான் என்பதை நிலைநாட்டியவர் ஹீராஸ் பாதிரியார்.
18. எந்த நிலையிலும் இது இல்லாமல் வாழ்க்கையை ஓட்டக்கூடியவர்களும் இருக்கிறார்கள்
19. உரல் இருந்தால் இது வேண்டாமா?
20. "கு" சேர்ந்தால் வாத்தியெடு என்று பொருள்படும்
21. பிள்ளை
23. நாணம்
24. பண்டிகைக் காலங்களில் இது சுட்டு சில குழந்தைகள் ஆபத்துக்குள்ளாகிறார்கள்
25. .....மீனுக்கு பெயர் பெற்றது மட்டக்களப்பு

மேலிருந்து கீழ்

1. கழுதைக்கு இது சுமப்பதுதானே வேலை
2. மணவி
3. கடவுள்மீது கசிந்துருகிப் பாடும் பாட்டு.
4. "இது எடுத்தவன் தண்டுக்காரன்" என்று ஒரு பழமொழியுண்டு.
5. இந்துக்கள் விரதம் அனுஷ்டிக்கும் ஒரு திதி
6. பயத்தோடு கூடிய கலக்கம்
11. இது என்றால் ஒலிபெருக்கி வைப்பது இப்போது சகஜமாகிவிட்டது.
12. யுத்தம்
15. பல்லக்கு
16. எந்தக் காரியத்தையும் இது இல்லாமல் முடிக்கும் திறமை ஒரு சிலருக்குத்தான் உண்டு.
17. பொட்டு
18. வெளி வேஷம்
19. நத்தை
22. நாட்டு வைத்தியர்கள் இது பார்த்துத்தான் வைத்தியம் செய்வார்கள்.

பிரவேசக் கட்டணம் சதம் 50

இரண்டு கட்டங்களுக்கும் பிரவேசக் கட்டணம் ரூபா 1-00 செலுத்தினால் இந்த மூன்றாவது விடையை இலவசமாக அனுப்பலாம்.

பிரவேசக் கட்டணம் சதம் 50

பெயர்.....

விலாசம் .....

.....

அனுப்பும் மொத்த கூப்பன்களின் தொகை.....

கட்டணத்தின் தொகை ரூ..... சே.....

போஸ்டல் ஆடர் வவுச்சர் இலக்கங்கள்.....

போட்டி அனுப்பும் விலாசம்:

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 23,

த. பெ. இ. 1183, கொழும்பு-12

ஒரு கூப்பன் மட்டுமே நிரப்பியிருந்தாலும் ஒவ்வொரு போட்டியிலும் பத்திரமும் அனுப்பப்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஸ்பெயினில்.....

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

யோப்பம் இட்டுள்ள நான் சுபெயின் நாட்டிலிருந்து வந்த ஒரு திராவிடன் 14-3-42 எச். ஈராசு எசு. ஐச] என்பதாகும், அவர் எழுதித் தந்ததுதான் அப்படியே இங்கு வெளியிடப் பட்டிருக்கிறது.

இப்படியெல்லாம் திராவிட மக்கள் மறக்க முடியாத அரு நீ தொண்டுகள் பல ஆற்றிவந்த ஈராசுப் பாதிரியார் தமது 67-ம் வயதில் அண்மையில் 14-12-1955ல் இயற்கை எய்தினர் என்ற செய்தி நம்மையெல்லாம் துக்கத்திலும் துயரத்திலும் ஆழ்த்துகிறது. அவரது இழப்பு அவ்வளவு எளிதில் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவர் தம் இறுதிக் காலத்தில் பம்பாய் சேவியர் கல்லூரியில் "வரலாறு—பண்பாடு" துறைப் பேராசிரியராகப் பணியாற்றிவந்தார். "இந்திய வரலாற்று ஆராய்ச்சிக் கூடத்" தோடும் அவர் நீண்டகாலத் தொடர்பு கொண்டிருந்தார்.

அவர் எழுதிய நூல்களும் கட்டுரைகளும் பலப்பல. அவற்றில் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கது: 1953ம் ஆண்டில் வெளிவந்த "இந்திய—மத்தியதரைப் பகுதிப் பண்பாட்டின் அடிப்படைபற்றிய ஆராய்ச்சிகள்" (Studies in Proto-Indo-Mediterranean Culture) என்னும் நூலாகும். அதன் விலை ரூ 175-00 அந்த நூலைப் பலபடப் பாராட்டிப் பேரறிஞர்கள் பலர் இதழ்களில் எழுதியுள்ளார்கள்.

ஈராசுப் பாதிரியார் திராவிட மக்களுக்குச் செயற்கரிய பல செய்த பெரியாராவார். அப்பெரியாரின் தொண்டு திராவிட மக்களுக்குத் தொல்லை ஊக்கம் அளிப்பதாக! அவரது புகழ் என்றும் நின்று நிலவுவதாக!

—"மன்றம்" பொங்கல் மலர்

உழவர் விழா

உழவர் விழா-பூண்டுலோயா வாலிப முன்னணியின் சார்பில், பூண்டுலோயா அரசினர் கலாலூரித் திடலில் 14-1-56 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெற்றது.

தோழர் சி. கணகராசன் தலைமை வகித்தார். தோழர்கள்: இளங்கவி; எஸ். எம். தர்மலிங்கம் டி. பி. தென்னக்கூன், ஏ. இளஞ்செழியன் (செயலாளர் இ. தி. மு. க.) டி. எஸ். கே. வனசிங்க (செயலாளர் மத்திய மாகாண தமிழ் ஆசிரியர் சங்கம்.) இரா. பொன்முடி, கே. குலவீரசிங்கம், (தலைவர் இலங்கை டிரேட் யூனியன்) டி. என். நந்துங்க முதலியோர் விழாவில் சொற்பெருக்காற்றினர்.

பிரிவுபசாரம்

மண்முனை வடகிழக்கு வடபகுதி கிராமச் சங்கத்து மருத்துவப் பெண்ணுக்கட்டமையாற்றிய செல்வி ஜி. ஞானப்பிரகாசத்துக்கு கல்லடி உப்போடை நொச்சிமுனை சனசமூக நிலையத்தார் ஓர் பிரிவுபசாரம் (8-1-56) நடத்தினர்.

செல்வி செல்வராஜா மலர்ச்செண்டைக் கொடுத்தபின் திருமதி எம். கிருஷ்ணபிள்ளை பிரிவுபசாரப் பத்திரத்தை வாசித்தளித்தார். ஜனசமூக நிலையத் தலைவர் திரு கே ஒ. வி. கதிர்காமத்தம்பி, திருமதி எம். தங்கத்துரை, திருமதி எஸ். சந்திரசேகரம் ஆசிரியை, திரு வி. கணபதிப் பிள்ளை ஆசிரியர் ஆகியோர் செல்வி ஜி. ஞானப்பிரகாசத்தின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

தமிழரசா? தனியரசா? (9)

தனியாட்சி பொருளாதார பல மற்றதாகும்

(சுதந்திரன் அரசியல் விமர்சகர்)

இலங்கையில் பல்வேறு இனத்தவர்களும், பல்வேறு மதத்தவர்களும், பல்வேறு மொழியினர்களும் வாழ்கிறார்கள் இவர்களில் சிங்களவர்களும், தமிழர்களும் மொழியின் அடிப்படையில் இரு பெரும் இனங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த ஈரின மக்களும் பூர்வீகத்தில், ஓரினத்தின் கீழ் மற்றொரு இனம் கட்டுப்படாமல், தனித்தனி ஆட்சியமைத்து சுத்த சுதந்திரர்களாகவாழ்ந்து வந்திருக்கிறார்கள். இன்றும் அவர்கள் தனித்தனிப் பிரதேச ஆட்சியமைப்பின்கீழ் வாழக்கூடியதாகவும், தத்தம் வாழ்விடங்களைத் தொடர்பு படுத்தி தனித்தனி ஆட்சி நிர்வாகம் நடத்தக்கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். தனியாட்சி நடத்துவதற்கு போதிய மக்கள் கூட்டமும், நிலப் பிரதேசமும் ஏற்றதாக அமைந்திருக்கிறது. அத்தோடு இலங்கையில் வாழுகின்ற தமிழ்ப் பேசும் மக்கள், பெரும்பான்மையினரான சிங்கள மக்களுடைய கையில் சகல அரசியல் ஆதிக்கத்தையும் ஒப்படைத்துவிட்டதான சோல்பரி ஒற்றையாட்சியின்கீழ் கட்டுப்பட்டிருக்கமுடியாதென்றும் தங்களுக்கு சுயநிர்ணய உரிமையோடு கூடிய சுயாட்சி வேண்டும், தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ள வேண்டும் என்றும் கோரிவருகிறார்கள்.

மேற்கூறிய இத்தனை காரணங்களும் ஏற்றபடி அமைந்திருப்பதனால் இலங்கையில் இரண்டு பிரதேச ஆட்சிகளுக்கு இடமமைத்துக் கொடுப்பது பொருத்தமானது மட்டுமல்ல, தவிர்க்கமுடியாததுமாகும். எனவே மேற்கூறிய காரணங்களின் அடிப்படையிலும், இன்று ஏற்பட்டுள்ள இதர அரசியல் சூழநிலைகளின் அடிப்படையிலும் தனித் தனிப் பிரதேச ஆட்சியமைப்பது இன்றியமையாதது என்ற தவிர்க்க முடியாத முடிவுக்குத் தமிழ்ப் பேசும் மக்கள் வந்திருக்கிறார்கள்.

இதற்கு மேலுள்ள பிரச்னை என்னவென்றால், அப்படி ஏற்படும் பிரதேச ஆட்சிகள் ஒன்றோடு ஒன்று எதுவித தொடர்புமற்ற வேண்டும் என்று இலங் பல்லாயிரம் மக்கள் அகதி தனித்தனி ஆட்சிகளாகவைத் தமிழ் அரசுக் கள் ஆக்கப்படவும் இட இயங்குவதா, அன்றி இரண் கட்சியார் கருதுவதற்கு பல முண்டு. டாகவோ அல்லது அதற்கு காரணங்கள் உள்ளன. அக் மேற்பட்ட தொகையினவா காரணங்களில் முக்கிய கவோ அமையும் பிரதேச மானவை "தமிழரசா? தனி ஆட்சிகள் ஒன்றை விட யரசா?" என்ற இத்தொட டொன்று முற்றுகத் துண் ரின் இரண்டாவது மூன்று டித்துக்கொள்ளாமல் ஒரு வது கட்டுரையில் விரிவாக கூட்டாட்சியை அமைத்துக் ஆராயப்பட்டது நேயர் கொள்வதா என்பதுதான். களுக்கு ஞாபகமிருக்கலாம். சந்தர்ப்பத்தையொட்டி அக்காரணங்களை இங்கு சுருக்கமாகத் தொகுத்துக் கூறுவோம்.

சமஷ்டி ஆட்சியை வற்புறுத்துவதற்காக அரசியல் மேதாவிகளினால் வகுத்துக் கூறப்பட்ட எட்டுக் காரணங்களுள் ஆறாவது காரணம்:

(6) ஒரு பிரதேச ஆட்சி நடத்தும் மக்கள் கூட்டத்திற்கும், அவர்கள் பிரதேசத்திற்கும் அயலாக உள்ள மக்களோடும் பிரதேசத்தோடும் சேர்ந்து ஏதோ காரணங்களுக்காக கூட்டாட்சி அமைக்கும் ஆசை இருந்தால்; தனித் தனியாட்சியை விட சமஷ்டி ஆட்சியெனப்படும் கூட்டாட்சிதான் சாலச் சிறந்ததாகும் என்று கூறுகின்றது.

இலங்கையில் தமிழரசு, சிங்கள அரசு என்று இரு பிரதேச ஆட்சிகள் ஏற்படும் போது தமிழரசுக்கு அயலாக உள்ள மக்கள் சிங்கள மக்களாக இருப்பார்கள் அயல் பிரதேசம் சிங்களப் பிரதேசமாக இருக்கும். அயல் மக்களான சிங்கள மக்களோடும், அயல் பிரதேசமான சிங்களப் பிரதேசத்தோடும் தொடர்பை அறுத்துக்கொள்ளாமல் ஒரு சமஷ்டியாட்சியை அமைத்துக் கொள்வதுதான் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் திட்டம்.

இப்படி ஒரு சமஷ்டி ஆட்சியை அமைத்துக்கொள்ள

முதலாவது காரணம் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டது. தற்போது இலங்கையின் பொருளாதாரம் பெரும்பாலும் தேயிலையிலும், ரப்பரிலும் தங்கியிருக்கிறதென்ற உண்மையை யாரும் மறந்துவிடலாகாது. எதிர்காலத்தில் இந்த தேயிலை, ரப்பர் பொருளாதாரம் மங்கிப் போகலாம். உலகவங்கி அறிக்கையும் இதையேதான் சொல்லியிருக்கிறது. இலங்கையின் எதிர்காலப் பொருளாதாரம் அதன் சமபூமிப் பிரதேசங்களான கரையோரப் பிரதேசங்களில், பிரதானமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில்தான் தங்கியிருக்கிறது என்று உலகவங்கி அறிக்கை கூறுகிறது. ஆனால் அது எதிர்காலப் பொருளாதாரம் என்று எதிர் காலத்தைப் பற்றிக் கூறுவதை நாம் உன்னிப் பார்க்கவேண்டும். இதன் பொருளென்ன? பொருளாதார அபிவிருத்திக்கான வசதிகள் வடக்கு கிழக்கு மாகாணங்களில்தான் இருக்கின்றன ஆனால் அவை எதிர்காலத்தில் அபிவிருத்தித் திட்டங்களின் மூலம் விருத்தி செய்யப்பட வேண்டியவை, கட்டியெழுப்பப்பட வேண்டியவை என்பதுதான் உலகவங்கி அறிக்கை கூறுவதன் பொருளாகும். இந்த அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கி அவை செயல்பட்டு பலனளிக்கும் வரை வடக்கு கிழக்கு மாகாணங்கள் பொருளாதாரத்தில் பற்றுக்குறை மாகாணங்களாகவே இருக்கும். இந்த நிலைமையில் உடனடியாக "தனித் தமிழ்நாடு" என்று பிரிந்தால் மிகப் பெரியதொரு பொருளாதாரத் தாக்கத்துள் தனித் தமிழ்நாடு சிக்கி உருவழிந்து போக நேரிடலாம். சமஷ்டி ஆட்சியின்கீழ் அபிவிருத்தி வேலைகள் எல்லாம் முற்றுப் பெற்றபின், ஒரு ஸ்திரமான பொருளாதார அடிப்படையை உருவாக்கியபின் அவசியம் ஏற்பட்டால் தனியாகப் பிரிந்து போகலாம் இதுதான் புத்திசாலித்தனமானது. அதுவரை தேயிலை, ரப்பர் பொருளாதாரத்தினால் வரும் வருவாயின் பங்கைத் தமிழ்ப் பிரதேசமும் பகிர்ந்து பெற்றுக் கொள்ள வழிவகையளிப்பது சமஷ்டி ஆட்சமுறைதான் என்பதைத் தமிழ்ப் பேசும் மக்கள் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும்.

இரண்டாவது காரணம் சிங்களப் பிரதேசங்களில் சிறு சிறு தொகையினராக வாழும் தமிழ்ப் பேசும் மக்களைப் பற்றியது. சமஷ்டி ஆட்சியொன்றினால்தான் இவர்கள் பிரச்னையை கஷ்ட நஷ்டமின்றி சுமுகமாகவும் சாவதானமாகவும் தீர்க்கமுடியும். தனியரசு என்று பிரிக்க நேரிட்டால் எல்லைப் பிரிவினையிலும், பிரஜைப் [illegible] பல

மனிதாபிமானமும்

பேசும் மக்கள் சமாளித்து வெற்றிகண்டு கிட்டால் பிற்பு படிப்படியாகத் தங்கள் கையைப் பலப்படுத்திக் கொண்டே போகலாம் போதிய பலமும் உறுதியும் ஏற்பட்ட பின் அவசியமெனக் கண்டால் வேண்டும் போது தனியாகப் பிரிந்து போவதை யாரும் தடுக்கவும் மாட்டார்கள்; தடுக்கவும் முடியாது.

எனவே இன்றுள்ள அரசியல் சிக்கலிலிருந்து தமிழ் மக்கள் விமோசனமடைவதற்கு ஏற்றதும் புத்திசாலித்தனமானதுமான வழி அயல் பிரதேசமான சிங்களப் பிரதேசத்துடன் சேர்ந்த சமஷ்டியாட்சியின் கீழ் பிரதேச சுயாட்சியை கோரி நிற்பதுதான்.

தனியாட்சியை விட சமஷ்டி ஆட்சி வழங்குவதையே சிங்கள மக்களும் விரும்புவார்கள் என்பதை தக்க ஆதாரத்தோடு அடுத்த வாரம் எடுத்து விளக்குவோம்.

தேவை

கொழும்பு தொண்டர் வித்தியாலயத்துக்கு ஒரு பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர் தேவை. நல்ல சாரீரமும், பண்முறையாகப் பாடத் தெரிந்தவராயும், குறுகிய கால அறிவித்தலில் வேலை ஏற்கக்கூடியவராயும் இருந்தால் நன்று. 25-1-56-க்கு முன் விண்ணப்பஞ் செய்க.

தொண்டர் வித்தியாலய மனேச்சர், 471, தெமட்டகொடை ரோட்டு, கொழும்பு.

திருமண அழைப்பு

நிகழும் 1956ம் வருடம் தை மாதம் 23—ம் நாள் (23-1-56) காலையில் வரும் நல்ல தினத்தில்

பதுளைச் சேர்ந்த
தில்லையம்பலம் அன்னபூரணம்
அம்மாள் அவர்களை

பெற்று வளர்த்தவர்கள், பெரியவர்கள் சொற்படி

மட்டக்களப்பைச் சேர்ந்த
சா. மாணிக்கம் (டெயிலர்)
ஆகிய நான்

என் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுகொள்ளும் திருமண விழாவில்கலந்துமகிழ்ந்துசெல்லுமாறு சுற்றத்தார் நண்பர்களனைவரையும் இதனால் வேண்டிக்கொள்கிறேன்.

24-1-56 எம் இல்லத்தில் கொண்டாட்டம் நடைபெறும்.

வணக்கம்,
தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்
சா. மாணிக்கம் (டெயிலர்)
மைனியர் கிழக்கு வீதி,
மட்டக்களப்பு. 20-1-56.

பிளாஸ்டிக் இருதயம்

பிளாஸ்டிக்கில் ஒரு செயற்கை இருதயத்தை பிரெஞ்சு விஞ்ஞானிகள் சிருஷ்டித்துள்ளனர். இந்தச்செயற்கை இருதயத்தின் எடை 250 கிராம் அல்லது சுமார் அரை ராத்தல். 'விட்ட பிலியம்' என்னும் பொருளிலிருந்து இது செய்யப்படுகிறது. இந்த ரகத்தைச் சேர்ந்த பிளாஸ்டிக்கைத்தான் மனித உடலும், மிருகங்களின் உடலும் ஏற்கின்றன.

மிகச் சிறந்த சைக்கிள்மீது
உல்லாசச் சவாரி
செய்யுங்கள்



சவாரி செய்க NEW HUDSON

★ அதிக வசதிக்காக நீள மான பிரேம்.
★ முழு நீள செயின் கார்ட்
★ துருப்பிடிக்காத ஸ்போக்ஸ்
★ கனமான வெள்ளி பூசப்பட்ட பாகங்கள் கறுப்பிலோ வேறு நிற எனமலோ பூசப்பட்ட பாகங்கள்

★ நியு ஹட்சன் பைசிக்கிள்களிலுள்ள இந்த கம்பீரமான தொழில் நுணுக்க வளர்ச்சிகளையும், மற்றும் போற்றற்குரிய அம்சங்களையும் அனுபவிக்க தவறுதீர்கள். ஒரு பைசிக்கிள் உங்கள் வாழ்நாள் பூராவும் பாவிக்கலாம்.

லுயிஸ் பிரவுண் அன்கோ. லிமிட்.,
மக்கலம் ரோட், கொழும்பு.

அன்பழைப்பு

பேரன்புடையீர்,

எதிர்வரும்
26-1-56 வியாழன் காலை
எமது
"இளங்கோ அச்சகம்"
திறக்கும் விழாவில் கலந்து மகிழ்ந்து செல்லுமாறு அன்போடு அழைக்கின்றேன்.

வணக்கம்.

அன்பன்,
செ. இராசதுரை.

அலுவலகம்:
34, மெயின் ஸ்ரீட்,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9 ஓய்வு

மூர்த்தி சொல்லுகிறான்:

"எங்கே லாபகரமாகச் சுரண்ட முடியுமோ, எங்கே கேட்பாரற்றுச் சுரண்ட முடியுமோ அங்கே சுரண்டுவது தான் முதலாளித்துவத்தின் தர்மம். ஆகையால் தான் நாங்கள் பலஙக இருக்கவேண்டும்" 'புது அமைப்பு' என்ற திட்டத்தைப் பற்றிப் பேசுகையில் 1936 ம் ஆண்டில் ஹிட்லரின் இப்படிக் கூறினார். அனுபவத்தை ஒட்டி அவருடைய கூற்றை ஆராயும் போது அதன் ஆணித்தரமான கருத்து என் மனதை உறுத்தியது.

பலம் குறைந்தவர்களைச் சுரண்டி வயிறு வளர்ப்பது தான் முதலாளித்துவ தர்மம். இது நியாயமா அநியாயமா என்று ஆராய நான் விரும்பவில்லை. இன்றையஉலகில்நியாயஅநியாய ஆராய்ச்சி செய்பவர்களே ஓர் பயித்தியக்கார வர்க்கம். நான் விரும்புவது இந்த உண்மையை மக்கள் பட்டவர்த்தனமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான். விதியையும் சமயத்தையும் தர்மத்தையும் சாக்காக வைத்து தொழிலாளி வர்க்கத்தை நிரந்தரமான பலவீனராக்க எண்ணுகிறார்களே அவர்களையும் நான் குறை கூறவில்லை. இந்தக் கண்ணை மூச்சி வீளையாட்டில் ஏமாந்து தம்மை நிரந்தர மாகப் பலவீனர் ஆக்கிக் கொள்ளுகிறார்களே அந்தத் தொழிலாளி வர்க்கத்தை நினைக்கும் போது தான் மனங் கொதிக்கிறது. இவர்களை எண்ணித்தான் பாரதியும் "நெஞ்சு பொறுக்குதில்லையே"! என்று அங்கலாய்த்திருப்பார்.

முதலாளி வர்க்கத்தின் பலம் இன்று என்ன செய்திருக்கிறது? எந்தக் காரியம் நடக்கக் கூடாது என்று எனக்கு வரவிருந்த ஆபத்தை லட்சியம் செய்யாது முயன்றேனே அதே காரியத்தை நான் செய்ததாகக் குற்றஞ் சாட்டப் படுகிறேன். சட்டத்தின்படி மரணதண்டனை விதிப்பார்கள். சாகப் போகிறேனே யென்று நான் வருந்திபிருப்பேன். ஆனால் சாவு எனக்கு வரும் தன்மையை நினைக்கும் போது சிரிப்புத்தான் வருகிறது. ஒரு வேளை காலப் போக்கில் உண்மையை உலகம் அறிகிறது என்று வைத்துக் கொள்வோம். ' ஐயோ! அநியாயமாக அவனைத் தூக்கிலிட்டார்களே இது தர்மமா?" என்று இந்தப் பாழும் சமூகம் கொதித்தெழுவா போகிறது? "பாவம் அவன் தலை எழுத்து அப்படி" என்று சொல்லிவிட்டு அப்பாடா' என்று மன நிம்மதியடையும் சமூகம். இந்தச் சமூகத்தைப் பற்றி எண்ணி யெண்ணிச் சிரித்ததில் வயிற வலிகண்டு விட்டது

திறந்திருந்த ஜன்னலின் ஊடாக ஆகாய வெளியை நோக்கினேன். அப்போது தான் சூரிய உதயமாகிக் கொண்டிருந்தது. சூரியனின் ஒளியில் மங்கிப்போன நிலவு வானத்தின்ஓரத்தில்கசங்கிப் போயிருந்தது. கேட்பாரற்று அது தன்பாட்டில் மிதந்த தோற்றம் என்னை உறுத்தியது. இரவு முழுதும் எத்தனையோ இளம் உள்ளங்களின் காதல் லட்சியமாக இருந்த பூரணிக்கு இப்போது இந்தக் கதியா? இதன்விளைவும் விதியின் மர்மம்தானு? அல்லது குரங்கு மனம் படைத்த மனித வர்க்கத்தின் நன்றி கெட்டதனமா? சற்று முன்பு பூரணியில் ஜீவனிருந்தது. அதன் எழிலில ஆக்க சத்தியிருந்தது. துயரத்தின் தூபமும் அது பொழிந்த பால் நிலவில் மணம் வீசினது. இப்போது வெறிச் சென்று போய்விட்டது. இதில் தான் விதியின் விளையாட்டு இருக்கிறதா? குழந்தை போன்று ஏதோ ஒன்றை ஏட்டில் எழுதவும் அழிப்பதும் போன்று கால தேவனும் முயன்று கொண்டிருக்கிறதா? அல்லது யாவும் சடப் பொருளின் வெளித்தோற்றமா?

என்னுடைய நிலைமையை எண்ணினேன். நேற்று முன்தினம் என்னிடம் பலமிருந்தது. என் பலம் நம்பிக்கையையும் அவநம்பிக்கையையும் கொடுத்தது. என் செய்கைகள் ஆக்கத்தையும் அழிவையும் ஏற்படுத்தின. இன்று சிறகொடிந்த பறவைபோலச் சக்தியற்றுக் கிடக்கிறேன். என்னைப் பற்றிச் சிந்திப்பாரியாருமேயில்லை. [illegible] நேரமும் இல்லை.

நிமிர்ந்து எனக்கு முன்னால் பூதாகரமாக நின்ற பெரிய இரும்புக் கதவை நோக்கினேன். சில நாட்களுக்கு முன் நடந்த சர்வதேச 'அரசியல் கைதி' என்ற சிற்பப் போட்டி நினைவுக்கு வந்தது. நான் மாத்திரமா உலகமே இன்று ஓர் அரசியல் கைதி 'டால'ரின் கனதியில் நசுங்கிக் கொண்டிருக்கும் இந்நய உலகை நான் உருவகப் படுத்தியிருப்பேன்:

விசாரணையின்பின் எனக்கு ஆறு வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. தீர்ப்பு எனக்கு ஓர் வகையில் ஆச்சரியமாக இருந்தது. தண்டனை விதிக்கப் பட்டதும் என்னை ஓர் வண்டியிலேற்றக் கொண்டு சென்றனர். அப்போது "அத்தான்" என்று அலறிக் கொண்டு சரளா ஓடிவந்து என் மார்பின் மீது சாய்ந்தாள்

அவளுடைய தோற்றம் முற்றிலும் மாறியிருந்தது. தன்னை அலங்கரிப்பதில் சதா பொழுதைப் போக்கிய அதே சரளா தான் இவள் என்று என்னால் நம்ப முடியவில்லை. விதவிதமாக அவள் தேகத்தை அலங்கரித்த ஆபரணங்களில் ஒன்றையும் காணவில்லை. ஒரே தூய வெள்ளையுடையில் அவள் கம்பீரமான தோற்றம் என்னைப் புல்லரிக்க வைத்தது. அவளுடைய தலையை நிமிர்த்தி நேருக்கு நேர் நோக்கினேன். அவளுடைய கண்களில் வீசிய அறிவின்—தியாகத்தின்—ஒளி என் மனதைக் கவ்வியது. மறுபடியும் அவளுடைய தலையை மார்புடன் இறுக அணைத்துக் கொண்டேன். அப்போது என் மார்பின் அடியிலிருந்து ஓர் மூச்சு வெளிப்பட்டது. மனம் எவ்வளவோ ஆறுதலடைந்தது.

"அத்தான்! என்னை உங்கள் சரா என்று ஏற்றுக் கொள்ள மாட்டீர்களா?" என்று சரா என்னைக் கேட்டாள். பாவம்! அபலைப் பெண்! அவளுக்கு என்மன நிலை என்ன தெரியும்? எப்பவும் அவள் என்னுடையவள் தான். அவளிடமிருந்து நான் என்றுமே பிரிந்திருந்ததில்லை. அப்படி அவளுக்கு நான் சொன்னேன்.

அன்றுசராஎன்னிடமிருந்து தன்னைப் பிரித்தாள். இன்று என்னிடம் ஒட்டிக்கொள்ள விரும்புகிறாள். ஆனால் சட்டம் எங்களைப் பிரிக்கிறது. என்னைச் சராவிடமிருந்து வலுவந்தமாகப் பிரித்துச் சென்றார்கள். சரா என்னை நோக்கி இறுதியில் கூறிய வார்த்தை என் தேகத்தைச் சிலிர்க்க வைத்தது. "அத்தான்! உங்கள் புரட்சி உள்ளம் என்னையும் புரட்சிக்காரியாக்கி விட்டது. நீங்கள் விட்டுப் போகும் தொழிலை நான் தொடர்ந்து செய்வேன். இது தான் என் லட்சியம்" என்றாள். அவள் கண்களில் ஒளிர்ந்த வைராக்கியம் எனக்கு அவள் சொல்வதைச் செய்வாள் என்று உறுதி பேசின. என் சராவில் ஒளிந்திருந்த அந்த 'ஜான்சி' ராணியின் வீரத் தோற்றம் இன்னும் என் கண்முன் நிற்கிறது.

மறுநாள் காலையில் ராமமூர்த்தி என்னைப் பார்க்க வந்திருந்தான். அவன் சப்-இன்ஸ்பெக்டர் சேகரிடமிருந்து மீனுவைக் காப்பாற்றிய விபரத்தை என்னிடம் விளக்கமாகச் சொன்னான். சேகரின் நடத்தையைப் பற்றிக் கேள்விப்பட்டதும் என் உள்ளம்கொதித்தது. இவன் போன்ற அயோக்கியர்களால் எத்தனை பெண்கள் மானம் இழக்கிறார்கள். மனிதன்கூட மிருகமாகி விடுகிறான். இப்படி மிருகமாக்கப்பட்ட மனிதன் சட்டத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறான். வேலியே பயிரை மேய்கிறது; இல்லை; ஆட்டு மந்தைக்கு ஓநாய்களைக் காவல் வைக்கிறது அரசாங்கம். முதலாளித்துவ ஆட்சியில் இது அரசாங்க தர்மம்!

ராமமூர்த்தி என்னிடமிருந்து விடை பெற்றபோது அவனுடைய கண்கள் கலங்கியிருந்தன. கலக்கமே என்ன என்று அறிந்திராத அந்த நெஞ்சிலும் கலக்கத்தை ஏற்படுத்தி விட்டன என்னைச் சுற்றிலும் இருந்த இரும்புக் கம்பிகள். ராமமூர்த்தி போய் மறையும் வரையும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

அவன் சென்றதும் "அவன் வெற்றி பெறுவானு?" என்ற கேள்வி எழுந்தது. அவன் நினைத்ததைச் செய்யக் கூடிய மனோவலியும் ஆற்றலும் உள்ளவன் தான். ஆனாலும் அரசாங்கத்தின் எல்லாச்சலுகைகளையும் பிரயோகிக்கக் கூடிய சேகரிடம் அவன் கை வரிசை வெற்றி பெறுமா? இவைகளை அறியாமலா அவன் சபதம் செய்தான்?

சுகுமார் தப்பிப் பிழைத்தால் மீனுவைப் பற்றி நான் கவலைப்பட வேண்டியதில்லை; அவன் அவளைக் கண்ணுங் கருத்துமாய்ப் பார்த்துக் கொள்வான். சுகுமார் எவ்வளவு தூரம் மனம் உடைந்து போயிருப்பான். கஷ்டமே என்ன என்று அறியாத பிஞ்சு உள்ளம் அவனுக்கு; மற்றவர்களுடைய சிறு கவலைகளைக் கண்டே அவன் நெஞ்சு இளகி வாழ்வில் வெறுப் படைந்து விடுவான்; அப்பேற்பட்ட இதயத்தில் சில நாட்களாக எத்தனை பெரிய துன்பங்களின் அலைகள் மோதியிருக்கின்றன;

சபாஷ் தொண்டமான்!

திரு. வன்னியசிங்கம் பாராட்டு

சமீபத்தில் நடைபெற்ற இலங்கை ஜனநாயக காங்கிரஸ் மன்னார் கிளையின் முதலாவது ஆண்டு விழாவின்போது கோப்பாய் பாராளுமன்ற அங்கத்தவரும் தமிழரசுக் கட்சித் தலைவருமான திரு. வன்னியசிங்கம் மொழிப் பிரச்னையைப்பற்றிப் பேசுகையில் "சில காலத்திற்குமுன் இ. ஜ. கா.வைச் சேர்ந்த திரு. எஸ். தொண்டமான் ஒரு கூட்டத்தில் பேசியபோது தமிழ்ப் பேசும் மக்களிடம் சிங்களத்தை வற்புறுத்தி திணித்துவிட முடியாது. எங்களது தாய்மொழியாகிய தமிழ் மொழி இழிவு படுவதை ஒருபோதும் சகித்துக்கொண்டிருக்கப் போவதில்லை. தமிழ்ப் பேசும் மக்களிடம் பலாத்காரமாகச் சிங்களத்தைத் திணித்து அதைக் கற்கவேண்டுமென சட்டமியற்றினுல்கூட அதற்காக நாங்கள் அஞ்சப்போவதில்லை. இனிய தமிழ் மொழியாகிய எங்கள் தாய்மொழியைவிட்டு நாங்கள் ஏன் அந்நிய மொழியாகிய சிங்களத்தைக் கற்கவேண்டும் என்று கூறினாராம்." அதை எதிர்த்து திரு. தொண்டமான் எப்படி இவ்வாறு கூறமுடியுமென்று சில சிங்கள பாராளுமன்ற அங்கத்தவர்கள் தமிழ் பாராளுமன்ற அங்கத்தவரிகளிடையே சிறிது விழுந்தபோது தாமும் தமது சகாக்களும் திரு. தொண்டமான் கூறியது நூற்றுக்கு நூறு மறுக்க முடியாத உண்மை என்றும் யாராலும் எந்த அரசாங்கத்தாலும் தமிழ்ப் பேசும் மக்களிடத்தில் சிங்களத்தை திணித்து விடமுடியாதென்று ஏகோபித்த அபிப்பிராயத்தைத் தெரிவித்தோம். திருதொண்டமான் இனி தொண்டமான் என்று அழைக்காமல் சபாஷ் தொண்டமான்! என்றுதான் அழைக்கவேண்டுமென மன்னார் முற்றவெளி கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்;

"அருந்தமிழைக் காக்க ஆசிரியர்களே எழுங்கள்!"

"கபிலர்"

நாட்டினிலே தமிழ்த்தாயை நசுக்குதற்குப் பலமுயற்சி
நடக்கப் பார்த்து
வீட்டினிலே பேசாமல் விறிழந்தே இருந்திடுதல்
வீர வாழ்வோ?
ஏட்டினிலே கற்பிப்பீர்? எப்பணியும் செய்யாமல்
ஏங்கி நீர்உம்
பாட்டினிலே இருக்காதீர் பாங்காகத் தொண்டாற்றப்
பறந்து வாரீர்!

தமிழழிந்தால் இனம் அழியும் தன்மானம் சிதைந்துவிடும்
தமிழே! எங்கள்
அமிழ்தனைய தனித்தாயே அறிந்துகொண்டோம்எழுந்துவிட்டோம்
அவலம் எல்லாம்
உமிழ்ந்துதள்ளித் தளராமல் உன்னையரி ஆசனத்தில்
உயர்த்தி வைப்போம்
இமிழ்கடல் சூழ் வையத்தார் ஏத்திடவே உரிமைப்போர்
இன்றே செய்வோம்

தித்திக்கும் செந்தமிழே! திசையளந்த பைந்தமிழே!
தெய்வப் பண்பால
எத்திக்கும் புகழ்மணக்க எந்நாடும் தலைவணங்க
இருக்கும் தாயே!
புத்திக்கும் விருந்தளித்துப் புகழ்நிறுத்தும் பணிபுரிவோம்
புனிதப் போரில
சித்திக்கு வழிகண்டு செயலாற்றச் சேர்ந்தெழுவோம்
சிறிதும் அஞ்சோம்

என்றுதமிழ் ஆசிரியர் எழுப்புபெருங் குரலிலங்கை
எங்கும் கேட்க
நன்றறியா மக்களையும் நல்வீரர் ஆக்குதற்கு
நாலு திக்கும்
சென்றிடுவீர் மொழிப்பற்றைச் சிறந்தஇன உணர்ச்சியுடன்
செழிக்கச் செய்வீர்
இன்றிதுதான் குரவர்காள்! இன்றமிழைவாழவைக்க
ஏற்ற தென்றே

"ரெனி"

மூளைப் பலவீனம், நரம்புப் பலவீனம், மறதி, மயக்கம், நித்திரை பங்கம், இந்திரியஸ்கலிதம், மூலச்சூடு, திரேகவரட்சி, உஷ்ணம், ஊரல், தடிப்பு, சொரி, உடம்பு கைகால் நடுக்கம், இருதயத் துடிப்பு, பித்த மயக்கம், வயிற்று நோவு, இரத்தக் கொதிப்பு போன்ற நோய்களை நீக்கி இரத்தத்தையும் சுத்திசெய்து தாதுவையும் கட்டுப்படுத்தும்.

கிடைக்குமிடம்:

சென்ற் மேரி வைத்தியசாலை

801, செட்டியார் தெரு, கொழும்பு;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமை அகற்றிய ஆபிரகாம் லிங்கனுக்கு துப்பாக்கி ரவை பரிசு

இன்று அவர் நாமம் சொல்லி 500 பேர் பிழைக்கின்றார்கள்

லிங்கன் பற்றிய சுவையான தகவல்!

நா. மு. குமாரசிங்கன்

அமெரிக்காவின் சுதந்திரத் தந்தையும், அடிமை அகற்றிய அண்ணலுமாகிய ஆபிரகாம் லிங்கன் இறந்த பின்பு அவரைப்பற்றி வெளி வந்த நூல்களும், பேசப் பட்ட பேச்சுகளும் எண்ணி லடங்கா. இதுவரை எந்தப் பெரியாரும் இவ்வளவு கௌரவிக்கப் படவில்லை. அமெரிக்கர்கள் மட்டும் இவரைத் தங்கள் இதயக் கோவிலில்வைத்துப் பூஜிக்கவில்லை. இவரது புகழ் உலகெங்கணும் பரந்து வியாபித்திருக்கிறது.

இதுவரை எந்தப் பெரியாரின் மரணத்திற்கும் ஆபிரகாம் லிங்கனின் மரணச் சடங்கிற்கு வந்த ஜனத் தொகைபோல் வரவில்லையாம். உலகெங்கிலுமிருந்து வந்து குழுமினர்கள். உலகின் எந்தப் பகுதியிலிருந்து எவராவது அமெரிக்காவுக்கு வந்தால் இவரது ஞாபகார்த்தச் சிலையைப் பார்க்கத் தவறமாட்டார்கள். அவ்வளவு பிரசித்தம்.

வாஷிங்டனிலிருக்கும் இவரது ஸ்தூபியைத் தரிசிக்காதவர்கள் அமெரிக்காவில் இல்லையெனலாம். லிங்கன் சிறு வயதில் வசித்த கொக்டன்வில் (Cockdenwill) கிராமத்தை இப்பொழுது 'லிங்கன் நகர்'மாக மாற்றியிருக்கிறார்கள். இங்கு வருடா வருடம் எத்தனையோ யாத்திரிகர்கள் வந்து அவரது ஞாபகார்த்தச் சின்னங்களாகிய, அவர் பாவித்த பொருட்களைப் பார்த்துச் செல்கின்றனர்.

சிக்காகோ நகரிலுள்ள பிரமாண்டமான நூல் நிலையமாகிய 'ஆபிரகாம் லிங்கன் புத்தகசாலை' உடமையாளர் இப் பெரியாரின் புத்தகங்கள் விற்பனை செய்வதால் வருடா வருடம் அதில் மாத்திரம் 250,000 டாலர்கள் லாபமடைவதாகக் கூறினர்!

அதுவுமன்றி இன்று அமரிக்காவில் மட்டும் 500 பேர், லிங்கனின் நூல்கள், அவரைப் பற்றி வந்த நூல்கள், கையெழுத்துப் பிரதிகள், ஞாபகார்த்தச் சின்னங்கள் முதலிய வற்றால் ஜீவனம் நடத்துகிறார்கள்!

10 000 அமரிக்கர்கள் லிங்கனைப் பற்றி வெளி வந்துள்ள நூல்கள் முதலியன சேகரிப்பதை பொழுது போக்காகக் கொண்டுள்ளார்கள். இவர்களுக்கு அனுசரணையாக அமெரிக்க அரசாங்கம் லிங்கனைப் பற்றிய விபரங்கள் நல்குவதற்கென ஓர் தனி இலாகாவையே நியமித்திருக்கிறது. பலர் இந்தப் பொழுதுபோக்குக்காக எண்ணற்ற டாலர்கள் மூலதனம் விட்டிருக்கிறார்கள்!

காங்கிரஸ் வாசிகசாலையில் இவர் எழுதிய கையெழுத்துப் பிரதிகள் பலவிருக்கின்றன. அவர் பேசுவதற்குக் குறிப்புகள் எழுதிய கையெழுத்துப் பிரதிகளும் இருக்கின்றன. அவருடைய கையெழுத்துரொம்ப மோசமாம் (அதுதான் அறிஞர்களுக்கிருக்கு அறி குறிதானே!)

இவரின் கையெழுத்துப் பிரதியொன்றை யுத்தகாலத்தில் காயமடைந்த போர் வீரர்கள் நிதிக்காக ஏலத்திற்கு விட்டார்கள். சிக்காகோ நகரிலுள்ள ஓர் பிரபல வியாபாரி இதை 1929 ம் வருடம் 150,000 டாலர்கள் விலை கொடுத்து வாங்கினர். இத்தனவந்தர் தன் பெயரை அறிவிக்க விரும்பவில்லை புகழை வெறுத்தார். இன்று வரை அக்கனவான் பெயர் மர்மமாகவே இருக்கின்றது!

1944 ம் ஆண்டு இத்தனவந்தர் இயற்கை யெய்திய பின்பு இவரது மனைவி பிரதிகளை 60 000 டாலருக்கு விற்று விட்டார். இதற்கு இலினெயிஸ் பாடசாலை மாணவர்கள் 50,000 டாலர் நிதி திரட்டிக் கொடுத்தார்கள். மிகுதி 10,000 டாலர்களையும் மார்ஷல்பீல்ட் என்பவர் நன்கொடை அளித்தார். இந்தப் பிரதி இப்பொழுது மாணவர்களால் 'இலினெயிஸ் சரித்திர நூல் நிலையத்தில்' கண்காட்சிக்கு வைக்கப் பட்டிருக்கிறது.

மற்ற இரு கையெழுத்துப் பிரதிகளும் ஒன்று கோர்னல் சர்வகலாசாலையிலும் மற்றது கியூபன் நாட்டைச் சேர்ந்த ஒஸ்கார் சின்ராகிடமும் இருக்கிறது. ஒஸ்கார் இதை 54,000 டாலர்கள் கொடுத்து வாங்கினர்.

லிங்கனைப் பற்றி எழுதிய எழுத்தாளர்கள் சம்பாதித்த பணத்தொகை கணக்கிலடங்கா. இதுவரை அவரைப்பற்றி 6,000 நூல்கள் வெளி வந்துள்ளன. அப்பப்பா! எவ்வளவு தொகை!

அவரைப் பற்றிய எண்ணிறந்த நூல்கள் ஜெர்மன், ஸ்பானிஷ், நோர்வேஜியன், ரஷ்யன், தமிழ் முதலிய பாஷைகளிலும் வெளி வந்துள்ளன. ஆனால்இந்த6,000 நூல்களிலும் தலைசிறந்தது, மேம்பட்டது ஓர் ஆங்கிலேயர் எழுதியது. அவரின் பெயர் சார்ன்வுட் பிரபு. இரண்டாவது உலக மாகாயுத்தத்தில் பின்பு மூன்று ஜப்பானியர்கள் இவரைப் பற்றிய அழகான, கருத்தாழம் மிகுந்த நூல்கள் எழுதி வெளியிட்டனர்.

லிங்கனைப் பற்றிப் பல வால்யூம்களும் வெளி வந்துள்ளன. 1939 ல் காரில் சாண்ட்பேர்க்கி வால்யூம்களும், 1953 ல் ரோய் பாஸ்லர் 8 வால்யூம்களும் அவரைப்பற்றி வரைந்துள்ளார்கள்.

லிங்கனைப் பற்றி பல போலி எழுத்தாளர்கள் பொய் வதந்திகளையும் பரப்பியுள்ளார்கள். ஹோல்டன் என்பவர் லிங்கனுக்கும் மனைவி மேரிக்கும் பரஸ்பர ஒற்றுமை கிடையாதெனப் பொய் வதந்தி பரப்பினர்; பலர் ஒருமுகமாக இது வெறும் பித்தலாட்டமென நிருபித்தார்கள். எனவே இவர் எழுத்துலகிலிருந்து அஞ்ஞானவாசம் பெற்றுக் கொண்டார்.

இவையாவற்றிற்கும் பேம்பட்டதான ஏமாற்று 1928 ம் வருடம் நடந்தது.

மிஸ் வில்மா பிரான்சிஸ் என்னும் பெண்மணி 'அற்லான்ரிக் மன்திலி' என்னும் பத்திரிகையில் லிங்கனின் கடிதங்களென பொய்க் கடிதங்களை தொடராக எழுதினர்; இதில் அவர் மனைவிக் கெழுதியதாக இரு காதல் கடிதங்களும் பிரசுரிக்கப் பட்டன.

இதையறிந்த பிரபல சரித்திர ஆய்வாளர் போல் ஏங்கல் என்பவர் பல ஆராய்ச்சிகள் செய்து அதே பத்திரிகையில் இதைப் பொய்யென நிருபித்தார். அவர் காட்டிய காரணங்கள்:

1. கடிதமெழுதுவதற்கு பச்சைமை உபயோகிக்கப் பட்டது. பச்சைமையில் 'அளிசரின்' சேர்க்கப் பட்டிருக்கிறது. லிங்கன் வாழ்ந்த காலத்தில் இந்த உபகரணம் கண்டு பிடிக்கப்படவில்லை.

2 கடிதத்திலுள்ள எழுத்துக்கள் லிங்கனுடையதைப் போன்றிருந்தாலும் எக்காலமும் லிங்கன் முற்றுப் புள்ளிக்குப் பின்பு விறு எழுத்துக்கள் எழுதுவதில்லை.

3. லிங்கனின் மனைவி எழுதிய கடிதத்தில் "ஸ்பென்ஸர் கொப்பிப் புஸ்தகத்திற்கு நான் கடமைப் பட்டுள்ளேன்" எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. லிங்கனின் மனைவி 1835 ம் ஆண்டு இறந்து விட்டார். ஸ்பென்ஸர் புஸ்தகமோ 1848 ம் ஆண்டுதான் வெளி வந்தது.

ஏமாற்ற வெளிக்கிட்டவர் இக் குறைகளைத் தன்னையறியாமலேயே விட்டு விட்டார். குட்டு வெளிப்பட்டது! என்ன தான் அவரின் பெயரைக் கொண்டு ஏமாற்றுங்கள் நடந்தாலும் இன்று லிங்கனின் புகழ் கலங்கரை விளக்காய், மலைமேலிட்ட தீபமாய் மற்றவர்களுக்கு வழி காட்டுகின்றது; யதார்த்தவாதி லிங்கனின் புகழ் நாளொரு வண்ணம் பல்கிப் பெருகி வருவதே இதற்குத் தகுந்த அத்தாட்சி!

முஸ்லிம் சமூகத்தின் உயர்ச்சி

சிங்களப்பாஷைமூலம் என்பது பகற் கனவு

சில சுயநலமிகளின் பேராசைக்கு இஸ்லாமிய இனம் இரையாகுமா?

('தர்ஹாடவுன் சிந்தகி')

பழங்காலந்தொட்டு இலங்கைவாழ் முஸ்லிம்களிடம் சீர்சிறப்புடன் வழங்கிவரும் பாஷை—அவர்கள் பேசும் பாஷை தமிழ். அவர்களின் அதிகமான மதசம்பந்தமானவை தமிழிலேதான் அச்சிடப்பட்டுள்ளன.

இன்று எமது சமூகத்திலே எழுந்துள்ள பாஷைப் பிரச்னை தமிழரையும் சிங்களவரையும்கலக்கிக்கொண்டிருக்கிறது என்று நாம் கருதுவது தவறு. உண்மையிலே இப்பிரச்னை முஸ்லிம் மக்களை பெரும்பாலும் பாதிக்கிறது. ஏனெனில் சிங்களம் அல்லது தமிழ் இவையிரண்டில் ஒன்றை முஸ்லிம்கள் (தங்களின்விருப்பமான) அரசாங்க பாஷையாக தெரிந்து எடுக்கவேண்டிய கஷ்டமான நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆயினும் அதிகப்படியான முஸ்லிம் மக்கள் எந்தப் பாஷையை விரும்புகிறார்கள்? முஸ்லிம் சமூகம் எப்பாஷையைக் கைக்கொண்டால் முன்னேற்றமடையும்? என்பதையும் நன்கு கவனித்து ஒரு முடிவுக்கு வந்தால் பாஷைப் பிரச்னை முஸ்லிம் சமூகத்தை பாதிக்காது என்பது யாவருமறிந்த உண்மை.

சில சிங்களம் மாத்திரம் விரும்பும் பெரியார்கள் நினைக்கிறார்கள் சிங்களத்தை மாத்திரம் முஸ்லிம்கள் அரசாங்கமொழியாக ஏற்றுக் கொண்டால் சிங்களவரிடமிருந்து பெரும் சலுகைகள் பெற்றுவிடலாம், வேண்டியனவற்றைச் சாதித்துக் கொள்ளலாம், சுதந்திரத்துடன் வாழலாம் என்று.

ஆனால் இவையாவும் பகற் கனவு என்று இன்றைய மொழிப் பிரச்னை பல பகர்கிறது; ஏனெனில் இலங்கைத் தமிழ்ப் பெரியார்கள் இலங்கையின் சுதந்திரத்திற்காக அரும்பாடுபட்டும் இன்று தமிழ் மொழிக்கு ஆபத்து சூழ்ந்துவிட்டது. இந்த நிலையில் தமிழரிகளை விடச் சிறிய தொகையான முஸ்லிம்கள் எப்படி சிங்களவரை நம்ப முடியும்?

அதிகப்படியான இலங்கை வாழ் முஸ்லிம் வர்த்தகர்களின் வியாபார மொழி தான் சிங்களம். அதுவன்றி அவர்களின் மற்றைய சகல நெருங்கிய தொடர்புகளுக்கும் சிங்களம் உபயோகிக்கப்படுகிறதில்லையென்றே கூறலாம்.

சிங்களம் மாத்திரம் அரசாங்க மொழியானால் விளையும் தீமைகள் பலவுள. ஆயினும் முஸ்லிம் சமூகத்தை நோக்குமிடத்து பல பிரிவினைகள் ஏற்படக் கூடிய விதமான ஒரு சிக்கலான நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஒரு சில வியாபாரிகளுக்கும், சிங்களம் கற்றுத் தேர்ச்சியடைந்த சிலருக்கும், கவிபாடும் சக்தி படைத்த ஒரு சில முஸ்லிம் சிங்கள விரும்பிகளுக்கும் நன்மையளித்த போதிலும் மற்றைய பெரும் பான்மையான முஸ்லிம்கள் முன்னேற முடியாமல் சிங்களப் பாஷை என்ற முட்டுக்கட்டையால் தடுக்கப் படுவர். இப்பரிதாபத்துக்குரிய காட்சியையும் காண முடியாமலில்லை.

அதிகப்படியான முஸ்லிம்களுக்கு சிங்களம் வரிக்க ஆனால் அவர் குறையாகக் கற்பண்ணவோ, முடியுமோ?



சிங்களம் பேச அதிகப்படியானவர்களால் முடியும்! அதிகப்படியானோருக்கு தமிழ்மொழியைவிட அரை குறையாகத் தெரிந்த ஒரு பாஷைதான் சிங்களப் பாஷை என்பதை யாவரும் உணர்வர். பெரும்பான்மை முஸ்லிம்களின் அரைகுறைப் பாஷை ஒன்றை அரசாங்க மொழியாகுவதனால் அது சிறிது காலத்தில் முஸ்லிம்களுக்கு ஒரு பெரும் ஏமாற்றத்தையளிக்கும் என்பதில் ஐயமுண்டோ?

ஒரு சில முஸ்லிம்கள் சிங்களக் கவிபாடியும், கெம்பீரமான பிரசங்கம் பண்ணிய போதிலும் அதே முஸ்லிம் சமூகத்தில் சிங்களம் எழுத்து உச்சரிக்க முடியாத—ஒரு வாக்கியம் எழுதப் படிக்கத் தெரியாத—பெரும் பான்மையானோர் இருக்கிறார்கள் என்பதை ஒவ்வொரு சிங்களம் தெரிந்த முஸ்லிம்களும் சிந்தையில் கொண்டு அப்பெரும்பான்மை மக்களின் நலனைக் கருதி தமிழை ஆதரிப்பதில் என்ன பிழையிருக்கிறது?

சம அந்தஸ்து ஒன்றினால் தான் இலங்கைவாழ் முஸ்லிம்கள் நன்மையடையமுடியும். ஏனெனில் இன்று இலங்கையிலுள்ள ஆயிரக்கணக்கான பதினாங்கு வயதிற்குமேற்பட்ட மாணவர்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் கற்றுத் தேர்ச்சியடைந்தவர்களாக இருக்கிறார்கள். தமிழ் கற்றுத் தேர்ச்சியடைந்திருக்கும் தொகையான முஸ்லிம்களுக்கும் குறைவில்லை. இவர்களில் பெரும்பான்மையோர் வேலையில்லாத் திண்டாட்டத்தில் சிக்கியிருக்கிறார்கள்: மேலும் சிங்களம் மாத்திரம் அரசகரும மொழியானால் தமிழில் கற்றுத் தேர்ச்சியடைந்தவர்களுக்கு திரும்ப சிங்கள அச்சரம் கற்றுமுடிக்கக் காலந்தான் போதுமா? அவர்களின் நிலை நடைப்பிணத்திலும்விடக் கேவலமான நிலையை அடையாதா? இவர்களின் நிலையைப்பற்றி விவரிக்க வேண்டியதில்லை: இப்படிப்பட்ட சிக்கலான நிலைகளில்இருந்து முஸ்லிம் சமூகம் பாதுகாக்கப்பட வேண்டுமானால் கட்டாயம் முஸ்லிம்கள் அனைவரும் சம அந்தஸ்தை ஆதரிக்க வேண்டும். சம அந்தஸ்து ஒன்றினால் தான் இலங்கை போன்ற ஒரு நாட்டில் முஸ்லிம்கள் சுபீட்சமாகவும் சமாதானமாகவும் வாழ முடியும். ஆகவே சகல முஸ்லிம்களும் சம அந்தஸ்தை விரும்பி தமிழர்களோடு ஒத்துழைத்தல் மிகவும் அவசியமாகும். சம அந்தஸ்து ஒன்றினால்தான் முஸ்லிம் சமூகம் முன்னேற்றமடையவும் எளர்ச்சியடையவும் முடியும் என்பது சகலரும் அறிந்த உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1956 ஜனவரி மாதம் 22ந் திகதி

194 ஏ, தலீடா தெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183

சதியாலோசனை

இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களுக்கென்று இன்று ஒரு உருப்படியான அரசியல் கட்சி இருக்கிறதென்றால் அது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிதான். ஆறுண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட இக்கட்சி ஸ்திரமான கொள்கைகளின்மீது அமைக்கப்பட்டு முறையாகவும், ஒழுங்காகவும் இயங்கிவருகிறது அதன் அங்கத்தவர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற இலட்சியங்களை கண்ணுங்கருத்துமாகக் காப்பாற்றி நேர்மையும், நிதானமும் குன்றாது நடந்து வருகிறார்கள்.

தமிழ்த் தலைவர்கள் என்றிருந்தவர்கள் கடந்த காலத்தில் அரசாங்க பதவியென்ற மோகினியால் கவரப்பட்டு, பெற்ற தாயையும் பிறந்த பொன்னாட்டையும் மறந்து, தங்களைத் தேர்ந்தனுப்பிய தமிழ்ப் பொதுமக்களை நட்டாற்றில் தவிக்கவிட்டு, ஆளும் கட்சியோடு இரண்டறக் கலந்தபோது, திகைத்த தமிழ் மக்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாக நின்று சரியான வழிகாட்டிய பெருமை தமிழ் அரசுக் கட்சியைச் சார்ந்ததாகும்.

தமிழ் அரசுக் கட்சி தமிழ்ப் பேசும் மக்களிடையே இன்று பெருஞ் செல்வாக்குப் பெற்ற ஒரு ஸ்தாபனமாக விளங்குகிறது தமிழ்ப் பொதுமக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு கட்சியாக விளங்குகிறது. தமிழ் அரசுக் கட்சியின் வளர்ச்சியைக்கண்டு அசூசைப்படும் ஒரு சில சந்தர்ப்பவாதிகள் கட்சிக்குள்ளே இடம் பிடித்துக் கொண்டு கட்சியின் கட்டுக்கோட்பைக் கலைத்து விட சதியாலோசனைத் திட்டம் வகுத்து வருவதாகத் தெரிகிறது தமிழ் அரசுக் கட்சிக்கு இது ஒரு சோதனை காலமாகும். இந்த சோதனையில் தமிழ் அரசுக் கட்சியினர் தக்க விழிப்போடிருந்து வெற்றிபெற வேண்டும் என்று எச்சரிக்கை செய்கிறோம்.

தமிழ் மக்கள் ஒன்றுபட வேண்டும், தமிழ்த் தலைவர்கள் ஒன்றுபட வேண்டும் என்ற கருத்தை நாம் முழுமனதோடு வரவேற்கிறோம். ஆனால் அப்படி ஒன்றுபடுபவர்கள் ஸ்திரமான இலட்சியங்களை, கொள்கைகளை முன்னிறுத்தி ஒன்றுபடவேண்டும் ஒருமித்த கொள்கை, சுயநலமற்ற இலட்சியம் இல்லாதவர்கள் ஒன்றுபடுவதனால் எதுவித பயனுமில்லை. அப்படியானவர்களின் ஒற்றுமை சற்றில் வேற்றுமையிலும், பிளவிலுந்தான் முடிவுறும்.

ஐக்கிய முன்னணி அமைக்கவேண்டும் என்று ஒரு கோஷ்டியினர் இன்று துடியாய்த் துடிக்கிறார்கள். இப்படித் துடிப்பவர்கள் யார்? இவர்களுடைய பழைய வரலாறு என்ன? இப்படித் துடிப்பதற்கு காரணம் யாது? இவர்களுடைய நோக்கம் என்ன என்பனவற்றைத் தமிழ் மக்கள் நன்கு சிந்தித்துப் பார்க்க கடமைப்பட்டவர்களாவார்கள். அதேபோலவே அவர்களோடு உறவு கொண்டாடுமுன் நிலைமையை நன்கு அலசிப்பார்க்க வேண்டியது தமிழரசுக் கட்சியாருடைய கடமையுமாகும்.

ஐக்கிய முன்னணி என்று துடிப்பவர்களில் பெரும் பாலோர் ஒருகால் அரசாங்கத்தோடு ஒட்டிக் கொண்டு அரசாங்கத்தின் தாஸானுதாஸர்களாகக் கிடந்தவர்கள்தாம். இவர்களில் பலர் தமிழுக்கும், தமிழ்ப் பேசும் மக்களுக்கும் எதிராக அரசாங்கம் மேற்கொண்ட அத்தனை நடவடிக்கைகளையும் ஆதரித்து நின்றவர்கள் தாம். சிலருக்கு உலகத்திலேயே சிறந்த அரசியல் கட்சி யு. என். பி கட்சிதான் என்று சொன்னவர்களும், யு. என். பி ஆட்சியில் தமிழ் அழியவே அழியாது என்று அறுதியிட்டவர்களும், யு. என். பி கிளைகளை ஆங்காங்கு அங்குரார்ப்பணம் செய்தவர்களும், யு. என். பி. "பச்சைப் புத்த" சத்திக்கு மூலப் யு என். பிக்கு நிதி திரட்டிக் கொடுத்தவர்களும் இந்தக் கோஷ்டியில்தான் இருக்கின்றனர்.

யு. என். பி இவர்கள் அனைவருடைய முகத்திலும் கரி பூசிவிட்டது கரி பூசிய முகத்துடன் தமிழ் மக்கள் முன்பு போவதற்கு இவர்கள் நாணமுறுகிறார்கள், ஆத்திரமடைந்திருக்கும் தமிழ் மக்கள் முன் தலைகாட்ட அஞ்சுகிறார்கள். எனவே ஐக்கிய முன்னணியென்று ஒரு புதுவேஷத்தைப் போட்டு மீண்டும் தமிழ்ப் பேசும் மக்களை ஏமாற்றி திருப்பவும் பாராளுமன்றத்துள் புகுந்துகொள்வதுதான் இவர்களுடைய சதியாலோசனைத் திட்டமாகும். பாராளுமன்றத்தில் இடம் பிடித்துக்கொண்ட பின் "பழைய குருடி கதவைத் திறவடி" என்னும் பாவனையாக அரசாங்கத்தோடு ஐக்கியமாகி அரை மந்திரி கால் மந்திரிப் பதவிகளைப் பெற்றுக்கொள்வதுதான் இந்தப் பழம் பெருச்சாளிகளின் அந்தரங்கமாகும்.

தமிழ் மொழியையும், தமிழ் இனத்தையும் பாதுகாக்க வேண்டும் என்று அந்தரங்க சுத்தியோடு எண்ணுபவர்களைத் தமிழ் அரசுக் கட்சியார் சேர்த்துக்கொள்வதிலோ அன்றி அவர்களோடு சேர்ந்து ஐக்கிய முன்னணி அமைப்பதிலோ தவறில்லை. ஆனால் தமிழ் அரசுக் கட்சியார் கடந்த ஆறு ஆண்டுகளாகப் போட்டு வந்த கோஷத்தையும் செய்து வந்த பிரசாரத்தையும் தங்கள் சுயநலத்திற்காகப் பயன்படுத்திக்கொண்டு, அடுத்த பாராளுமன்றத்தில் இடம் பிடிக்கக்கபட நாடகம் ஆடும் சந்தர்ப்பவாதிகளுக்கு இடங் கொடுப்பது தற்கொலைக்கொப்பானதாகும். யு. என். பி. யுடனும், சேர் ஜோனுடனும் கள்ள நட்பு வைத்துக் கொண்டிருக்கும் அரசியல் வியாபாரிகள் சிலரும் திடீரென்று தமிழ்ப் பத்தினிகளாக வேஷம் போடுகிறார்கள். காட்டிக்கொடுக்கும் இந்தக் காலகை வன்னியன் கோஷ்டியிடத்தில் தமிழரசுக் கட்சியார் கவனமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

"அடிப்படை உரிமைக்கு அரோகரா"

அபேட்சகர் தெரிவில் யு. என். பிக்குள் குத்துப்பாடு

தமிழ் பேசும் மக்களை எதிர் நோக்கியுள்ள பயங்கரமான பிரச்சினைகளுக்கெல்லாம் அடிப்படை உரிமைச் சட்டத்தின் மூலம் தற்காப்பு செய்து கொள்ள போவதாக திரு சு. நடேசன் சண்டப் பிரசண்டம் செய்தாரல்லவா? இது வெறும் புஸ் வாணம் என்று ஆரம்பம் தொட்டே நாம் அம்பலப்படுத்தினோம்.

நடேசனரின் இந்த அடிப்படை உரிமை சாஸனத்தை யு. என் பி களனி மகாநாடு தயாரிப்பு கமிட்டி ஒரு தீர்மானமாகக் கூட ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டது. கொத்தலாவலைத் "தெய்வமும் அனுக்கிரகம்" செய்ய மறுத்துவிடும்.

★

அடுத்த பொதுத் தேர்தலில் பிரமாதமான வெற்றி பெறலாம் என்று யு. என். பி. எதிர்பார்த்துக்கொண்டிருந்தபோதிலும், உள் கட்சி நிலைமை சீர்கெட்டிருப்பதாக, ஆளும் கட்சியின் அந்தரங்கங்களை அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஒருமொழி வெறியைத் திட்ட மிட்டு கட்டவிழ்த்து விட்ட யு. என். பி. தலைமை இன்று அதாவேயே தன் கட்சி ஆதிக்கத்திற்கு ஆபத்தேற்பட்டிருக்கிறது என்று பயப்பட ஆரம்பித்துள்ளதாம். வகுப்பு வாத வெறியைமூட்டி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மற்றும் சிங்கள வகுப்பு வாதிகளும் கூடிய செல்வாக்குப் பெற்று வருவது யு என். பி. தலைமைக்கும் பேரிடையைஅளித்துள்ளது.

தனிச்சிங்களத்தை யு. என். பி. ஏற்றுக் கொள்வதால் மட்டும் நிலைமையைச் சமாளித்துவிட முடியாதென்றும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அதோடு கூட்டுச்சேர்ந்துள்ள வகுப்பு வாதிகளும் மேலும் பயங்கரமான வகுப்பு வாத கோஷங்களை எழுப்பிக் கொண்டே போவார்களென்றும் இந்த நிலைமையில் யு. என். பி செல்வாக்கிழப்பது தவிர்த்த முடியாததாகலாம் என்றும் அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள் வகுப்புவாத வெறியால் திருப்பப்பட்ட பொதுஜன அபிப்பிராயத்தை ஒரு குறிப்பிட்ட எல்லையில் கட்டுப்படுத்துவது முடியாத காரியம் என்றும் மேலும் அந்த அவதானிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். இதற்கிடையில் அபேட்சகர் தெரிவு பற்றி யு. என். பிக்குள் குத்துப்பாடு ஏற்கனவேயே ஆரம்பித்துவிட்டது என்று கூறப்படுகிறது.

வகுப்புவாத கூச்சலுக்கிளப்பிய ஆனந்ததிஸ்ஸ அல்விஸ் காலி வாரிவிடப் படுகிறார் என்று நம்பகமான வட்டாரங்கள்கருதுகின்றன. கோட்டே தொகுதிக்கு திரு அல்விஸ் நியமிக்கப்பட மாட்டார் என்றும் அதற்குப் பதிலாக சேர் ஜோனின் சகோதரரான ஜஸ்டினை கொத்தலாவலை நிறுத்தப் படலாமென்றும் கூறப்படுகிறது.

சுயபுகழ் சண்டப் பிரசண்டம் செய்யும் ஜே. ஆர். ஜெயவர்த்தனபெரும் சலிப்போடு காணப் படுகிறார் என்று சொல்லப்படுகிறது. வகுப்புவாத பிரச்சாரத்தில் ஜே. ஆரிலும் ஆர். ஜி. சேனநாயகா சக்தி வாய்ந்தவர் என்பது எல்லோரும் அறிந்ததே. சிங்களவர்களின் ஒப்பற்ற 'தலைவர்' என்று கருதப்படும் எப். ஆர். சேனநாயகாவின் மகனை ஆர். ஜி. நவரத்னவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் உரிமைப் போராட்ட நிதி

தமிழ் மொழி, தமிழ் இனம், தமிழ்ப் பேசும் மக்கள் வாழும்பிரதேசம் ஆகிய எல்லாம் அழிந்து தொழியுமோ என்னும்படி அபாயகரமான தாக்குதல்களுக்குள்ளாகியிருக்கின்றன. முதற்கண், உயிரினும் மேலான தாய்மொழியை—தமிழ் மொழியை—பாதுகாக்க வேண்டியிருக்கிறது. மொழி அழிந்தால் இனம் அழியும்; இனம் அழிந்தால் ஈழத் தமிழகம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும்;

மொழிப் போராட்டம், இனப் போராட்டம், நிலப் போராட்டம் யாவையும் நடத்தி வெற்றி காண வேண்டிய தவிர்க்க முடியாத கடமை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஒன்றைத்தான் சார்ந்திருக்கிறது. ஏனென்றால் தமிழ் அரசுக் கட்சியொன்றுதான் இந்த அபாயத்தை ஆறு ஆண்டுகளுக்கு முன்னரே எடுத்துரைத்து, அன்றுமுதல் இன்றுவரை நிலையான கொள்கையோடு குலையாத உறுதியோடு தமிழ் உரிமைக்காக போராடி வருகிறது.

1949ம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஸ்தாபித்தோம். கட்சியின் கொள்கைகளை தமிழ்ப் பேசும் மக்களாகிய உங்கள் திருமுன் படைத்தோம். அக்கொள்கைகளின்மீது 1952ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் போட்டியிட்டோம். எங்கள் கொள்கைகளை அப்போது தமிழ்ப் பொதுமக்களாகிய நீங்கள் ஏற்றுக்கொள்ளாமல் எங்களைத் தோற்கடித்தீர்கள். ஆயினும் நாங்கள் தளரவில்லை. காரணம் எங்கள் நோக்கம் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதல்ல. தமிழ் மொழியைத் தமிழ் இனத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதே எங்கள் இலட்சியமாக இருந்தது. எனவே எங்கள் கொள்கைகள் என்றுவது வெற்றி காணும் என்ற நம்பிக்கையோடும் உறுதியோடும் தமிழ்ப் பணியை ஆற்றி வந்தோம்.

இன்று நாங்கள் எடுத்துக் கூறிய கொள்கைகளையே மாற்றாரும் ஏற்றுக்கொள்ளும் நிலை ஏற்பட்டுவிட்டது. அரசாங்கத்தோடு ஒட்டியிருந்தவர்களும் ஆதரிக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. தமிழ்ப் பேசும் மக்களுக்கு வேறு வழி இல்லை என்ற உண்மை புலனாகிவிட்டது.

இந்த நிலையில் எங்கள் போராட்டத்தை மேலும் மும்முரமாகத் தொடர்ந்து நடத்த வேண்டியிருக்கிறது. இதற்கு வேண்டிய ஊழியர்களும், உழைப்பாளிகளும் இருக்கிறார்கள். திட்டமும் கொள்கையும் இருக்கின்றன. திறமையும் உறுதியும் இருக்கின்றன, வேண்டியிருப்பது நிதி ஒன்றுதான்.

வேண்டிய நிதியைத் தமிழ்ப் பேசும் மக்களாகிய நீங்கள்தான் தந்து தமிழ் உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவளிக்க வேண்டும்.

தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றத்தை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டியிருக்கிறது. சத்தியாக்கிரக அடிப்படையில் பலவிதமான போராட்டங்களை நடத்த நாம் திட்டமிட்டுள்ளோம். இதற்கு நிதி தேவை.

பெப்ரவரி 20ந்திகதி தமிழ்ப்பிரதேசங்களில் தமிழ்ப் பேசும் மக்கள் ஒரு சாத்வீக ஹர்த்தாலை நடத்த வேண்டும். தமிழுக்கு சமஉரிமை கோருவது சில அரசியல் தலைவர்களுடைய பித்தலாட்டமே தவிர அது தமிழ்ப்பேசும்பொதுமக்களின்ஏகோபித்தகோரிக்கையல்ல என்று சிங்கள அரசியல்வாதிகள் சொல்லிவருகிறார்கள். சமஅந்தஸ்துகோரிக்கைதமிழ்பேசும்மக்களின் ஒருமுகமான கோரிக்கைதான் என்பதை நிலைநாட்ட ஹர்த்தால்போன்ற ஆர்ப்பாட்டங்கள் அவசியம். ஹர்த்தாலை நடத்துவதற்கும் நிதி வேண்டியிருக்கிறது.

பொதுத் தேர்தல் எதிர்நோக்கி வருகிறது. தமிழ்ப் பேசும் மக்கள் இந்த நாட்டில் வாழ்வதா மாள்வதா என்பதைத் தீர்மானிக்கும் ஒரு பலப் பரீட்சையாக இந்தப் பொதுத் தேர்தல் அமையப் போகிறது. தேர்தலுக்கு முன்பு மக்களிடையே போதிய பிரசாரம் செய்ய வேண்டியிருக்கிறது. இதற்கும் நிதி தேவை.

எனவே தமிழ்ப் பேசும் பொதுமக்கள் தங்களால் இயன்ற நிதியுதவி அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். நிதியுதவி அளிப்பவர்கள் தங்கள் பெயர்களை பகிரங்கப்படுத்த விரும்பாவிட்டால் அவை இரகசியமாக வைக்கப்படும். நிதி அனுப்புபவர்கள் யாவருக்கும் பற்றுச்சீட்டுகள் அனுப்பப்படும்.

"நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்"

நிதி அனுப்பவேண்டிய முகவரி:
கௌரவ பொருளாளர்,
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி,
16, அல்பிரட் ஹவுஸ் கார்டன்,
கொழும்பு — 3

இங்ஙனம்,

ஜி. ஜி. பொன்னம்பலம், தலைவர். இ. த. அ. கட்சி.

எஸ். ஜே. வி. செல்வநாயகம், பொதுச செயலாளர். இ. த. அ. கட்சி.

20—1—56.

Advt.

ராஜிநாமா நாடகங்களால் தமிழ் மக்களை மேலும் ஏமாற்ற முடியாது

தமிழுக்கு ஒரு ஆட்சி வேண்டும் என்ற இயக்கம் பொன் அருணாலம் ஆரம்பித்த பரம்பரை

தமிழரசு வாலிப முன்னணியின் மகாநாட்டில் தலைவர்கள் முழக்கம்

(நமது நிருபர்)

"தீட்டமிட்டு இரகசிய ஒப்பந்தங்களுடன் ராஜினாமாச் செய்வதினாலோ, 'தமிழ் நாடு' வேண்டுமென்று கூச்சலிடுவதினாலோ தமிழ் மக்களை ஏமாற்றிவிட முடியாது. அவர்கள் இன்று தங்கள் உரிமைக்காகப் போராடத் தயாராகிவிட்டார்கள். தங்கள் இலட்சியத்தை அடைவதற்காக அவர்கள் இறுதி மூச்சுள்ளவரை போராடியே தீருவார்கள்" என்று இலங்கைத் தமிழரசுக்கட்சி வாலிப முன்னணித் தலைவரும், வழக்கறிஞருமான திரு எஸ் நடராசா மேற்படி முன்னணியின் நான்காவது வருடாந்த மகாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசும்பொழுது கூறினார்.

இம்மகாநாடு மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்துக்கு அருகாமையில் இருக்கும் மைதானத்தில் நடைபெற்றது. மகாநாட்டுக்கு முன்பு தலைவர்கள் ஆலைக் கோட்டை சந்தியிலிருந்து ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். வழி நெடுகிலும் மக்கள் தலைவர்களுக்கு மலர்மாலைகள்சூட்டி வரவேற்றனர். கூட்டத்திற்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டு வந்திருந்தனர்.

தலைவர் திரு நடராசா மேலும் தொடர்ந்து பேசுகையில் "இன்று சிலர் தனித் தமிழ்நாடு' வேண்டுமென்று கூச்சலிடுகின்றனர். இதனால் ஏற்படும் பலாபலன்களை அவர்கள் சற்றும் சிந்தித்துப் பார்க்கின்றார்களில்லை. இந்தியாவில் நாடு இரண்டாகப் பிரிந்ததால் அங்குதோன்றிய பிரச்னைகள் இன்னும் தீர்த்தபாடில்லை. அதிலும் அகதிப் பிரச்னைகள் முக்கிய நிலையை அடைந்திருந்தன. அந்த நிலை எங்கள் நாட்டிலும் ஏற்படக் கூடாது என்பதற்காகவே இன்று நாம் சமஷ்டிக் கட்சியின்கீழ் ஏற்படும் தமிழரசு வேண்டுமென்று கோருகின்றோம்" என்றார்.

அடுத்து கற்குடாப் பகுதியைச் சேர்ந்த திரு எவ். சுக் கட்சியின் கல்முனைக் கிளைத் தலைவரும், கல்முனை மேற்கண்டவாறு தமிழரசு பட்டினசபை தலைவருமான கேட்முதலியார் காரியப்பர் சென்ற 15ந் தேதி களுத்துவெலாவில் நடந்த ஒரு கூட்டத்தில் பேசும்போது கூறினார்:

அவர் தொடர்ந்து பேசுகையில் தமிழ்பேசும் பிரதிநிதிகள் யு. என். பியிலிருந்து வெளியேறுவதாக வெளியிட்டுள்ள தீர்மானத்தை குறிப்பிட்டு சிங்களம் மட்டுமே அரசியல் பாஷையாக இருக்கவேண்டும் என்று முஸ்லிம் லீக் தீர்மானம் நிறைவேற்றியுள்ளபோது அந்த ஸ்தாபனத்திலிருந்து விலகாமல் யு. என். பியிலிருந்து ஜனப் மிர்ஸா, முதலியார் இப்ராஹிம், புரக்டர் எம். ஏ. எல். காரியப்பர் முதலிய முஸ்லிம்கள் வெளிவருவதன் அர்த்தம் என்ன என்று கேட்டார்.

"இந்த கனவான்களுக்கு இரண்டு அந்தரங்க நோக்கங்கள் இருக்கவேண்டும். ஒன்று தமிழ்பேசும் மக்கள் வாழும் தொகுதிகளில் வாக்குகள் பெறுவது. இரண்டாவது முஸ்லிம் லீக்குடனும், யு. என். பியுடனும் உறவு வைத்திருப்பதன் மூலம் தேர்தல் முடிந்தபின் சலுகைகள் பெறுவது" என்று கேட் முதலியார் அம்பலப்படுத்தினார்.

கூட்டத்தில் பேசிய ராசமாணிக்கம் யு. என். பி. சிங்களதனை மட்டும் ஒப்புக் கொண்டால் தமிழ் பேசும் பிரதிநிதிகள் யு. என் பியிலிருந்து வெளியேறத் தீர்மானித்திருப்பதாக கூறினார்.

பிறப்புரிமையான தாய் மொழியின் உரிமை மறுக்கப்படும் வேளையில் சுதந்திரதினம் கொண்டாடுவது கேலிக்கூத்தென்றும், பெப்ரவரி 4ந் தேதி நடைபெறும் அந்த கொண்டாட்டத்தை பகிஷ்கரிக்குமாறும் திரு சே. டப்ள்யு. தேவசகாயம் கேட்டுக் கொண்டார்

பிரமாண்டமான ஜனத் தொகை குழுமியிருந்த இக் கூட்டத்தில் திரு கந்தசாமி, வே. ராசதுரை முதலிய வேறு பலரும் பேசினர்.

தமிழுக்கு சமத்துவமளிக்கப்பட வேண்டும் என்று கீழ்மாகாணம் புழுவதுபு பிரமாண்டமான ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், கூட்டங்கள் தினசரி நடைபெறுகின்றன.

சுதந்திர தினத்தை பகிஷ்கரிக்கக்கோரி தெருத் தெருவாக சென்று இயக்கம் நடத்தும் சாய்ந்தமருது தொழிற்சங்கத்தைச் சேர்ந்த ஒரு கோஷ்டியினரை படத்தில் காண்க.

'தூங்கும் அழகி' பிரதிநிதிகளால் நாடு பறிபோகிறது

தமிழ் மக்களுக்கு கிடைத்த சுதந்திரம் இதுவே

"நாம் ஒரு சுதந்திரத்தை, நமது தாயகப் பிரதேசமான கல்லோயாவை இழக்கும் சுதந்திரத்தை மட்டும்தான் பெற்றுள்ளோம். கல்முனைப் பகுதியிலிருந்து "தூங்கும் அழகிகளை" பிரதிநிதிகளாக பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாலேயே இந்த சுதந்திரம் நமக்குக் கிடைத்தது"

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 22

சரியான விடை

இடமிருந்து வலம்	மேலிருந்து கீழ்
1. ஆதித்தன்	1. ஆதாரம்
3. கப்பல்	2. தரளம்
5. உலக்கை	3. கலகம்
6. ரமை	4. பகை
7. சம்பளம்	5. உள்ளம்
10. சதி	7. சதிரம்
11. தம்	8. பதடி
12. இதழ்	9. பூழ்தி
14. சிலந்தி	10. சரம்
15. காலாவதி	12. இலவங்கம்
16. சவரி	13. தந்திரம்
17. இளங்கோ	14. சிலா
18. கம்பு	15. காரியம்
20. கடகம்	16. சகோட
	17. இரை
	19. புற

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 21

சரியான விடை

இடமிருந்து வலம்	மேலிருந்து கீழ்
1. தைப்பொங்கல்	1. தையல்
5. மறதி	2. பொதி
7. பசி	3. கபடி
8. பொடி	4. ல்சி
9. சம்மதி	5. மனம்
11. மடல்	6. தித்திப்பு
12. பஞ்	8. பொல்
13. மத்தாப்பு	9. சவித்தல்
15. தசமுகன்	10 மதிப்பு
16. தப்பு	11. மஞ்சல்
17. வல்லி	12. பதவல்
19. உமறு	14. தாப்பு
22. கைது	18. கூதிர்
23. யாதவர்	19. உகை
26. கூனி	20. மதுரை
27. மைதிலி	21. சினி
	23. யாமை
	24. ததி
	25. வலி

அடிப்படை உரிமைக்கு....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

செல்வாக்கால் களனியில் வெற்றியீட்டுவது நிச்சயம் என்று பல பகுதிகளிலும் நம்பப்படுகிறது. இந்த நிலையில் ஜே. ஆர். ஜெயவர்த்தனே களுத்துறைக்கு போகலாம் என்று அரசியல் வட்டாரங்களில் கூறப்படுவது தவறாக இருக்கமுடியாது.

இப்போதைய கண்டி அங்கத்தவர் திரு பிரட். டி சில்வாவுக்கு, தந்தைக்கு நேர்ந்த கதியே நேரும் என்று தெரிகிறது. இவ் எல். சேனநாயகாவையே கண்டித் தொகுதிக்கு யு. என். பி. நியமிக்கும் என்று அறிய வருகிறது.

அபேட்சகர் பிரச்னையில் ஏற்பட்டுள்ள இந்த குத்துப்பாடு வெட்டுப்பாடுகளால் பல யு. என். பி. அங்கத்தவர்கள் அக்கட்சியிலிருந்து வெளியேறலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தல் ஒத்திப்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றும் எதிர்க் சக்திகளையும் ஒழிப்பதற்கு சரியான சந்தர்ப்பம் என்றும், எப்படியாவது தேர்தல் நிச்சயமாக நடத்தியே தீர்வதென்றும் சேர் ஜோன் கொத்தலாவலையும், சேர் உக்வத்த ஜெயசுந்தராவும் அடம் பிடித்து வருகிறார்களாம்.

என்றாலும் புத்த பிக்குகளை யு. என். பிக்கு எதிராகத் தேர்தலில் போட்டியிட முடிவு செய்திருப்பது யு. என். பி. தலைமைப்பீடத்திலேயே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகவே கூறப்படுகிறது.

தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் நடந்து வருகிறதென்றாலும் நிலைமை தமக்கு சாதகமற்றதாகவிருந்தால் தேர்தலை ஒத்திப் போட யு. என். பி. தலைமைபீடம் முடிவு செய்யலாம் என்று கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை:

இருட்டுலகில்!

முருகேசு இராசதுரை

அந்தக் கிராமத்தில் முனுசாமிக்கு நல்ல மதிப்பிருந்தது. காரணம்; அவன் தானுண்டு தன் வேலையுண்டு என வாழ்பவன். மற்றவர்கள் விஷயத்தில் தலையிடமாட்டான். தந்திரம் பொய் களவு சூது வாது ஏதுமறியான். அந்த நல்ல பழக்கங்களே அவன் அறவே வெறுத்தான்! அவற்றின் அவசியமும் அவனுக்கில்லை. மற்றவர்கள் அவனை ஏமாற்றினால் அதைப்பற்றிக் கவலைப்படமாட்டான். ஆனால் மற்றவர்களை ஏமாற்றமாட்டான்.

இத்தியாதி நல்ல குணங்களினால்தான் அவன் கிராம மக்களின் மதிப்பைப் பெற்றிருந்தான். ஆனால் ஏழ்மையை அவன் வாழ்விலிருந்து விரட்ட முடியவில்லை. உண்ண ஏதாவது கஞ்சியோ கூழோ இருந்தால் சரி, இல்லாவிட்டால் சிவன் நாமத்தை உச்சரித்துக் கொண்டு வயிறார நீரை உண்பான்? ஆனால் ஒரு விருந்தாளி அவனைத் தேடிச் சென்றால்; எப்படியாவது அவரை தன்கு உபசரிப்பான். அதுவும் ஒரு மதகுரு அல்லது ஒரு சன்னியாசி வந்துவிட்டாலோ, கிராமத்தவர்களிடம் பிச்சை பெற்றாவது அவருக்கு உணவு படைப்பான். அவர்கள்மேல் அவனுக்குப் பலத்த நம்பிக்கை. அவர்களெல்லாம் கடவுளின் பிரதிநிதிகள் என்பது அவன் எண்ணம்.

ஒருநாள் மாலையில் ஒரு சன்யாசி அவனிடம் வந்தார். அன்றிரவை அவன் குடிசையில் கழிக்க விரும்புவதாகக் கூறினர். முனுசாமி அதைப் பெரும் பாக்கியமாகக் கருதி ஏற்றுக்கொண்டான்.

சன்யாசியாருக்கு இரவு போஜனம் படைக்க வேண்டிய பிரச்னை எழுந்தது முனிசாமியைக் கவலைக்குள்ளாக்கியது. அவன் வீட்டிலிருந்தது கொஞ்சம் குரக்கன் மாவுதான். சன்யாசி கடவுளின் பிரதிநிதியல்லவா? நெய் பழத்துடன் அரிசி மாவில் பலகாரம் தயாரித்துப் படைக்க வேண்டாமா? அதற்கு என்ன செய்வது? அக்கம் பக்கம் சென்று ஒரு படி பச்சை அரிசி பெற முயற்சித்தான். அவர்கள் என்ன கோடீஸ்வரர்களா? அவன் அலைந்ததே மீதி. கடைசியாக ஆலமரத்தடி வைரவ கோவில் பூசாரியாரிடம் சென்றான். பூசாரியார் ஒரு படி பச்சை அரிசி கொடுத்துதவினர்.

சன்யாசியாருக்கு நல்ல உணவு படைத்தான். அவரும் நன்றாகச் சாப்பிட்டு உறங்கி காலையில் முனிசாமி குடும்பத்தைக் கடவுளின் பெயரால் ஆசீர்வதித்துச் சென்றார்.

அந்தக் கிராமவாசிகளுக்கு வயிரவர்மேல் மிகுந்த பக்தி. அதனால் அவர் பேரில் நிறைந்த பயம். வருடத்தில் ஒருமுறை பலி விழா நடத்துவார்கள். எத்தனையோ அன்புடன் வளர்த்த ஆடுகளும் கோழிகளும் வயிரவருக்குப் பலியாகும் அந்நாளில். இதைவிடத் தேர் திருவிழா பொங்கல், வடமாலை என்று பலவித வைபவங்கள் வைரவருக்குச் செய்வார்கள். ஏறக்குறைய வைரவரின் பெயரால் மாசமொரு விழா நடைபெறுமலிருக்காது. இந்த விழாக்களுக்குச் செலவழிப்பதற்கென்று தம் வயிற்றை ஒட்டி வாயைக் கட்டி வருஷம் பூராவும் சேமிப்பார்கள்.

வைரவரைத் தினமும் குளிப்பாட்டி, பொங்கல் படைத்து, பூஜை செய்து பராமரித்து வரும் பூசாரியை வயிரவரின் ஒரு அவதாரம் எனக் கிராம மக்கள் கருதினர். அதனால் ஒவ்வொரு குடும்பத்தினரும் வருடந்தோறும் அறுவடை முடிந்த பின் பூசாரிக்கு ஒரு புசல் நெல்லு கொடுப்பார்கள். நிலத்தில் விளைச்சலில்லாதுபோனால் கடன்பட்டாவது அதைக் கொடுத்துவிடுவர். இல்லையானால் வயிரவர் தண்டித்துவிடுவார் என்ற பயம்!

இந்த வரும்படியைவைத்துக்கொண்டு பூசாரியார் தம் இரு மனைவியர், நான்கு பிள்ளைகள், வைப்பாட்டிகள் மூவர் இவ்வளவு பேரையும் காப்பாற்றினர்.

பூசாரியின் மனைவிப் பட்டியல் தொகையை கிராமத்தவர் ஒருவரும் ஆட்சேபிக்கவில்லை. காரணம் முருகக் கடவுள் சொந்த மனைவி தெய்வானை இருக்க வள்ளி மேல் காதல்கொண்டு கந்த புராணக் கதைக்கே கதாநாயகன் ஆகவில்லையா? கண்ணன்தான் எத்தனை லீலைகள் செய்தான்? அவன் காதலிகள் பட்டியலே பெரிது. இந்நிலையில் கடவுளின் பிரதிநிதி பூசாரியார் காமலீலை நடத்துவதில் என்ன தப்பிருக்கிறது என்ற எண்ணத்தினால் அவர்கள் பேசாதிருந்தார்கள். அதை மனமார வரவேற்கவும் செய்தார்கள். பூசாரியாரும் தம் கண்ணில் பட்டு கருத்தில் உறையும் அழகிகளை அடைவதில் கஷ்டப்படவில்லை. ஏன்? பூசாரிக்கு மறுத்தால் வயிரவருக்கு மறுத்த மாதிரிதானே? வயிரவரின் கோபத்திற்கு ஆளாக விரும்பவில்லை, அவர்கள்.

முனுசாமி பூசாரியாரிடம் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என நினைத்தான். "அறுவடை முடியக் கொடுக்கப்போகும் நெல்லுடன் இன்னுமொரு பத்துக் கொத்து நெல்லைக் கூடக் கொடுத்துவிடுவோம். வேறு யாருக்கு வயிரவருக்குத் தானே கொடுக்கிறோம்" என எண்ணினான்.

அறுவடை முடிந்தது. பூசாரியார் வந்தார். தன் வழக்கமான பங்கு ஒரு புசலுடன் இன்னும் அரைப் புசல் சேர்த்துக் கொடுத்தான். அதனால் தான் வாங்கிய கடனும் முடிந்தது என எண்ணினான். அதைப்பற்றி அவன் பூசாரியாரிடம் ஒன்றுமே சொல்லவில்லை. பூசாரியாரும் கடனைப்பற்றி எதுவும் பேசவில்லை; நெல்லைப் பெற்றுக்கொண்டு அவனை ஆசீர்வதித்துச் சென்றுவிட்டார்.

பத்து வருடங்கள் ஓடி மறைந்தன. யாவும் வழமைக்குப் பிசகாமல் நடந்து கொண்டிருந்தது. ஆனால் பூசாரியார் மட்டும் மாறியிருந்தார். கிராம வரும்படியில் அவர் சேமித்த தொகையை வட்டிக்குக் கொடுக்கலானார்.

முனுசாமியின் மனைவி வள்ளியம்மை மிகவும் அடக்க ஒடுக்கமானவள். அத்துடன் நல்ல அழகியும்கூட. கறுப்பி யென்றாலும் கண்ணுக்குக் கவர்ச்சியாயிருப்பாள். பூசாரியாரின் கண்களில் வள்ளியம்மை பட்டாள்; மனதைப் பறிகொடுத்தார். அவளை எப்படியும் தான் அனுபவிக்க வேண்டுமென்று விரும்பினார். இதுகாலவரையில் வயிரவரின் உதவியால் தன் விருப்பங்களும் அபிலாசைகளும் ஈடேறியது போன்று இதுவும் சுலபமாக முடியும் என எதிர்பார்த்தார். அதற்குத்தானே கருங்கல்லாயிருந்தாலும் வயிரவர் இருக்கிறாரே.

ஒருநாள் வயிரவரைத் தரிசிக்க வந்த வள்ளியம்மையிடம் தன் காமவெறியை வெளியிட்டார். அது வயிரவர் விருப்பம். கனவிலே தோன்றி 'முனுசாமியினால் வள்ளியம்மைக்குப் பிள்ளை பிறக்காது. ஆனதால் அவனுக்குப் புத்திரபாக்கியத்தை' மென்று வயிரவர் கூறியதாக ஒரு விடுகை விட்டார் பூசாரியார். அவள் திணறிப் போனாள். நல்ல வேளையாரோ அந்தப் பக்கம் வந்ததினால் வள்ளியம்மை தப்பினாள். அந்த எண்ணத்தை விட்டுவிடும்படி பூசாரியாரை எச்சரித்துவிட்டு வீட்டுக்குச் சென்றாள். முனுசாமியிடம் விஷயத்தைக் கூறினாள். முதலில் ஆத்திரப்பட்டான். பின்னர் வயிரவரின் விருப்பத்திற்கு எதிராகக் கோபித்து என்ன செய்வது என்று பேசாமல் விட்டுவிட்டான். பூசாரியாரோ தம் விருப்பத்தை ஈடேற்றாது விடுவதில்லை எனச் சங்கல்பம் செய்துகொண்டார்.

நாட்கள் நகர்ந்தன. காலமழை அவ்வருடம் பெய்யவில்லை. இதற்கிடையில்முனுசாமியும் அவன் சகோதரனும் கூட்டாகக் குத்தகைக்கு நிலம் பெற்று கமம் செய்தனர். ஒரு குடும்பத் தகராறினால் சகோதரர்களுக்குள் சண்டை வந்து இருவரும் பிரிந்தனர். முனுசாமியால் தனிமையில் குத்தகைக்கு நிலமெடுத்துக் கமம் செய்ய முடியவில்லை. அதனால் கூலிக்கு வேலை செய்தான். முன்பிருந்த அரை குறைச் சந்தோஷ வாழ்க்கையும் அவனிடமிருந்து விடைபெற்றுக்கொண்டது. சூரிய உதயம்தொட்டு அஸ்தமனம் மட்டில் வேலை செய்தால் அன்றையக் கஞ்சிக்குக் காணக்கூடிய வரும்படி கிடைக்கும். கஷ்டத்துடன் காலத்தை ஓட்டினான். அவன் மனதில் எங்கோ ஒரு மூலையில் இது வயிரவரின் கோபத்தால் விளைந்தது என்ற எண்ணம் இடையிடையே எழும். மனதை வேறு எண்ணத்தில் புகுத்தி அதை மறப்பான்.

ஒருநாள் எதிர்பாராதவிதமாகப் பூசாரியார் அவனைத் தேடி வந்தார். என்னவோ ஏதோவென்று பயந்தான் முனுசாமி.

"முனுசாமி! நாளைக்கு நீ எனக்குக் கொடுக்க வேண்டிய கடனைத் தீர்த்துவிடு. உன்னிடமிருந்து பத்துப் புசல் நெல்லு எனக்குச் சேர வேண்டியிருக்கிறது. இது வரையில் நீ அதைப்பற்றிக் கவனமெடுத்ததாகத் தெரியவில்லை....."

"நான் உங்களுக்குக் கடன்தர வேண்டுமா? நீங்கள் ஏதோ தவறுதலாக....."

"தவறுதலா.....? வயிரவர் விஷயத்திலேயே நீ கணக்குவிடுகிறாய்....." என்று கூறிவிட்டு பத்து வருடங்களின் முன்னால் அவன் தன்னிடம் வாங்கிய ஒரு படி பச்சை அரிசிக் கடனை ஞாபகமூட்டினார். அந்தக் கடன் இன்றுவரை வட்டியுடன் வளர்ந்து பத்துப் புசலாக மாறிவிட்டது என கூறினார்.

முனுசாமி ஏங்கி மலைத்து விட்டான். பூசாரியார் இவ்வளவு கொடுமை படைத்தவர் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை.

"நான் வழமையாகத் தரும் நெல்லுடன் கூடவே அரைப் புசல் கொடுத்தேனே"

"கடன் கணக்கு வேறு. நன்கொடை வேறு நீ எனக்குத் தந்ததெல்லாம் நன்கொடைகள். நன்கொடையைப்பற்றி நான் கணக்கு வைப்பதில்லை. அன்று கணக்குப் புஸ்தகத்தில் உன் பெயருக்கு பத்துப் புசல் நெல்லு வரவிருக்கிறது? அதைக் கொடுத்து முடித்துவிடு. இல்லை கணக்கு வளர்ந்து கொண்டே போகும். பின்னால் அவஸ்தைப்படுவாய்"

முனுசாமிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவன் கமம் செய்தபொழுது சொல்லியிருந்தால் கொடுத்திருப்பான். ஆனால் இன்றோ கூலிக்கு வேலை செய்கிறான். நெல்லிற்கு எங்கே போவது? அதுவும் பத்துப் புசல். ஒரு நாளை ஜீவியம் அன்றைக்கே போதவில்லை. இந்நிலையில் அவன் என்ன செய்வான்?

"சாமி ஒரு ஏழையை ஏன் இப்படிக் கஷ்டப்படுத்த வேண்டும். வயிறார உண்பதற்கே வழியற்ற என்னிடம்....."

"அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. பத்துப் புசல் நெல்லிலிருந்து ஒரு மணி அரிசிகூட நான் கழிக்கப் போவதில்லை. நீ இப்பிறப்பில் எனது கடனைத் திருப்பிக் கொடுக்காவிட்டால், மறு பிறப்பில் வயிரவர் உனக்கு என்ன தண்டனை கொடுப்பாரோ நானறியேன்....."

வைரவர் என்றவார்த்தை முனுசாமியைக் கலங்க வைத்தது.

கடவுளையும் சமயத்தையும் தம் வாழ்க்கை வசதிக்கு ஏற்ற முறையில் அமைத்துக் கொண்ட மத குருக்களின் பயமுறுத்தலுக்குப் பயந்து வாழும் அவன் நடுங்கினான்.

"சாமி உங்களைக் கும்பிடுறேனுங்க. என்னை மன்னிச்சுடுங்க. நான் என்ன செய்ய. என் நிலை உங்களுக்குத் தெரியாததா; நான் என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்....."

"வயிரவர் கட்டளைப்படியே நான் நடக்கிறேன். அதனால் உன்னால் நெல்லைக் கொடுக்க முடியாதுவிட்டால் அதன் விலையைக் கொடுத்துவிடு....."

"அதற்கும் என்னிடம் பணமில்லையே சாமி....."

"சரி அப்படியென்றால் ஒரு கடன் பத்திரம் எழுதிக் கொடு. இன்றிலிருந்து ஒரு வருஷம் மட்டில் தவணை தருகிறேன். அதற்குள் கட்டிவிடு. வட்டி இப்பொழுது ஊரில் ரூபாவிற்கு மாதம் 5 சதம் நடக்கிறது. ஆனால் இது வயிரவர் விஷயமான படியால் இரட்டி மடங்கு வாங்க வேண்டும். உனக்காக ஒன்பது சதமாக்குகிறேன்"

முனுசாமி ஒத்துக்கொண்டான். பத்திரமும் எழுதி முடிந்தது பத்துப் புசல்நெல்லிற்கும் 100 ரூபாய் பெற்றுக் கணக்கு முடிந்தது.

உயிரை உடலைப் பராது இராப் பகலாக உழைத்தான் முனுசாமி. வள்ளியம்மையும் சேர்ந்து உழைத்தாள். பகலில் வயலிலே வேலை. இரவில் வீட்டில் பெட்டி பாய் பின்னுவார்கள். ஊண் உறக்கமின்றி பணத்தைக் குறிக்கோளாக வைத்து உழைத்தார்கள்.

அன்று நல்ல நிலாக்காய்ந்துகொண்டிருந்தது. முற்றத்தில் முனுசாமி பாய் இழைத்துக்கொண்டிருந்தான். கிழிய இடமின்றிப் போயிருந்த சேலைக்குப் பொத்தல் போட்டுக்கொண்டிருந்தாள், வள்ளியம்மை.

அவர்கள் கலியாணமாகி ஆறு வருடங்கள் ஓடி மறைந்துவிட்டன, ஆனால் பிள்ளைப் பாக்கியம் கிட்டவில்லை. அதையிட்டு வயிரவருக்கு ஒரு நேர்த்திக்கடனும் செய்திருந்தனர்.

அப்பொழுது பக்கத்து வீட்டுப் பொள்ளாச்சி கலியாணமான 12வது மாதம் ஒரு ஆண் மகவுக்குத் தாயாயிருந்தாள். அது வள்ளியம்மையின் மனதில் பெரும் ஆசையை மூட்டி வைத்திருந்தது. ஆனால் பணமே நோக்காக உழைத்ததால் அதை மறந்திருந்தாள்.

அந்த நேரத்தில் பொள்ளாச்சியின் குழந்தை வீரிட்டு அழும் சப்தம் கேட்டது. வள்ளியம்மையிடம் உறைந்து மறைந்திருந்த ஆசை தலை நீட்டியது. தாய்மை வேகம் அவளைச் சுட்டது. கணவனையே பார்த்தாள். குழந்தையின் அழுகை அவன் கவனத்தையும் கவர்ந்திருந்தது. மனவிளையப்

(12-ம் பக்கம் பார்க்க)

தமிழில் தபாற் கல்வி

★ ஆங்கிலம்
★ சிங்களம்
★ ஹிந்தி

ஆகியன ஆறு மாதங்களில் போதிக்கப்படுகின்றன.

G. C. E.-கு உரிய
56 ஆங்கிலக் கட்டுரைகள் ரூ: 3-00
50 தமிழ்க் கட்டுரைகள் ரூ. 3-00

விவரங்களுக்கு எழுதுக:

S. KUMARASWAMY, B. A. (Cey.),
SHANTI COLLEGE,
7 - 18th Lane, Colpetty,
COLOMBO - 3.

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்துகொள்ளலாம்

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை, என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில்வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சுவலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால் கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும்; சிலகாலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்துபோகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை' தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்த மயக்கம், கைகால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இலவசமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50 சிறியது ரூ. 3-00
வி. பி. பி. செலவு வேறு.

புரொப்ரைட்டர்: எம். பொன்னையா

ஆனந்தா வைத்தியசாலை
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்பெயினில் பிறந்தும் திராவிடராய் வாழ்ந்த ஹீராஸ் பாதிரியார்

திராவிட நாகரிகத்தை உலகறியச் செய்த அகழ் பொருள் ஆராய்ச்சி மேதை

(இரா-நெடுஞ்செழியன்)

உலகு அறியாவண்ணம், பல்லெடுங்காலமாக அறியாமை இருளிலே புதையுண்டு கிடந்த திராவிட வரலாறு—நாகரிகம்—பண்பாடு—மொழி ஆகியவற்றைத் தக்க ஆராய்ச்சியொளி மூலம் அவனி முழுவதற்கும் விளக்கிக் காட்டி, அவற்றின் முதன்மை—தொன்மை—பெருமை—புகழ் ஆகியவற்றை உலகுக்கு எடுத்து விளம்பிய அறிஞர் பெருமக்களின் முன்வரிசையில் முதல்வராக வைத்து எண்ணப்படத்தக்கவர் ஈராசுப் பாதிரியார் ஆவார்.

ஈராசுப் பாதிரியார் சுபெயின் (Spain) நாட்டில் பிறந்து, வளர்ந்து, பாதிரியார் கோலம் பூண்டு, சமயத் தொண்டு புரிய இந்தியத் துணைக்கண்டம் வந்தவராவார். அவர் சமயத் துறையைக் காட்டிலும், வரலாற்றுத் துறையில்தான் மிகவாக இறங்கிப் பணிபுரிந்தார். அவரது தொண்டுகள் வரலாற்றுத் துறையில்தான் சிறந்து ஓங்கி உயர்ந்து காணப்பட்டன.

அவர் சமயக் கருத்துக்களைப் பரப்பிடும் பாதிரியாராக, அமைந்திருந்தபோதிலும், பொதுவாக இந்தியத் துணைக்கண்ட வரலாற்றில்—குறிப்பாகத் திராவிடர் வரலாற்றில், புதிய ஆராய்ச்சிக் கருத்துக்களோடு ஒளி நிறைந்த பக்கங்களைச் சேர்ந்தவர் என்ற முறையில், ஈராசுப் பாதிரியார், திராவிட இன மக்களால் என்றென்றும் போற்றிப் புகழத்தக்கவரேவாவார். "மாற்றூன் தோட்டத்து மல்லிகைப்பூ ஆனாலும், அதன் மணத்தைப் போற்ற நாம் மறுக்க மாட்டோம்" என்று அறிஞர் அண்ணா அவர்கள் அறிவுரை கூறியுள்ளதற்கு ஒப்ப, ஈராசுப் பாதிரியாரின் சமயக் கருத்துக்கள் சிலவற்றிலே மாறுபாடுடைய போக்கைக் கொண்டுள்ள நாம், அவரது மணங்கமழும் வரலாற்று ஆராய்ச்சிக் கருத்துக்களைப் போற்றிப் புகழவே செய்கிறோம்.

அவர் பம்பாயிலுள்ள 'இந்திய வரலாற்று ஆராய்ச்சிக் கூடத்தோடு (Indian Historical Research Institute) பல்லாண்டு காலம் தொடர்பு பூண்டு வரலாற்றுத் துறைப் பணி பல புரிந்தார். அவர் செய்த ஆராய்ச்சிகளிலேதலை சிறந்ததாக வைத்து எண்ணப்படுவது, மொகெஞ்சொதரோ—அரப்பா போன்ற மறைந்த சிந்துவெளி நகரங்களின் நாகரிகம், எத்தகைய நாகரிகம் என்பதை உலகுக்கு எடுத்து விளக்கிக் காட்டியதாகும்.

1921-ம் ஆண்டுக்குப் பிறகு சிந்துவெளியில் மொகெஞ்சொதரோ—அரப்பா—சான்குதரோ போன்ற பல மண்மேடிட்ட நகரங்கள், இந்தியப் புதைபொருள் ஆராய்ச்சித்துறை வினரால் அகழ்ந்து காணப்பட்டன. அகழ்ந்து காணப்பட்ட நகரமைப்பு—கட்டிட அமைப்பு—சாலை அமைப்பு—பழக்கத்தில் கொண்டிருந்த பொருள்கள்—பதுமைகள்—விளையாட்டுப் பொருள்கள்—கல்வெட்டுக்கள்—முத்திரைகள்—எலும்புக் கூடுகள் போன்ற பலவற்றையும் வைத்துக்கொண்டு பல்வேறு வரலாற்று அறிஞர்களும் ஆராய்ச்சி நடத்தினர். அவர்களில் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியவர் இந்தியப் புதைபொருள் ஆராய்ச்சித்துறைத் தலைவராக விளங்கிய சர் ஜோன் மார்சல் (Sir John Marshall) என்பவர் ஆவார்; அவர் 1931-ம் ஆண்டில் மொகெஞ்சோ தரோவும் சிந்துநாகரிகமும்' (Mohenjo Daro and the Indus Civilization) என்னும் ஒரு நூலை விரிவாகவும் விளக்கமாகவும் எழுதி வெளியிட்டார்; அந்த நாட்களில் இந்திய வரலாற்றுத்துறை, ஆரிய நாகரிகத்திற்கு எல்லாவகையிலும் உயர்வளிக்க வேண்டும் என்னும் விருப்பமுடையோர் கைகளில் பெரும்பாலும் சிக்கிக் கிடந்ததால், இந்தியாவைச் சேர்ந்த வரலாற்று அறிஞர்களும், அவர் சொல்வழி மயங்கி நின்ற மேனாட்டைச் சேர்ந்த வரலாற்று அறிஞர்களும், மறைந்த சிந்துவெளி நாகரிகம் ஆரிய நாகரிகமே என்று நிலைநாட்ட அரும்பாடுபட்டனர். அவர்கள் பொருந்தாத சான்றுகளை வைத்துக்கொண்டு போலித் தன்மையில் பொருத்திப் பார்த்தார்கள். எல்லாம் நிலைநிற்க முடியாமல் சரிந்து வீழ்ந்தன. ஆராய்ச்சித் திறனும், கூர்மதியும், நடுநிலைத் தன்மையும்கொண்ட சர் ஜோண் மார்சல். "மறைந்த சிந்துவெளி நாகரிகத்தின் அடிப்படையாளர்கள் அறவே ஆரியர்களாக இருக்க முடியாது" என்னும் கருத்தை அசைக்க முடியாத தக்க காரணங்களோடு தம் நூலில் விளக்கிக் காட்டினார். சிந்துவெளி நாகரிகம் ஆரிய நாகரிகமாக இருக்க முடியாது என்னும்போது, அது வேறு எந்த நாகரிகத்தைச் சேர்ந்ததாக இருக்க முடியும் என்ற ஆராய்ச்சியில் ஈராசுப் பாதிரியார் நெடுநாள் இறங்கித் தக்க சான்றுகளைத் துருவித் துருவி எடுத்து, இறுதியில் அது திராவிட நாகரிகமே என்ற முடிவுக்கு வந்து, 1936-ஆம் ஆண்டில் அந்தக் கருத்தைக் காரண காரிய விளக்கத்தோடு வெளியிட்டார் அவரது அந்தக் கருத்து திராவிடரின் வரலாற்றுக்குப் புதிய தொரு ஒளியையும், பொலிவையும் தருவதாக அமைந்தது. ஈராசுப் பாதிரியாரின் அந்தக் கருத்தை எவராலும் அவ்வளவு எளிதாக எதிர்க்க முடியவில்லை. அவரது கருத்துக்கு ஆதரவு தரும் ஆராய்ச்சிக் கருத்துக்களே பல்வேறு வரலாற்று அறிஞர்களிடத்திருந்தும் மென்மேலும் வரத் தொடங்கின. திராவிட நாகரிகத்திற்கு உயர்வு ஏற்படுவதைக் காணப் பெறுத, சில நடுநிலைமை தவறிய, அழுக்காறு எண்ணங்கொண்ட வரலாற்றாசிரியர்கள் ஏதேதோ மறுப்புக் காரணங்களைச் சொல்லி, ஈராசுப் பாதிரியாருக்கு எதிராக மழுப்பிப் பார்த்தனர். அவர்களது கூற்றுக்கள் இறுதியில் வலிவிழந்து வீழ்ந்தன; ஈராசுப் பாதிரியாரின் கருத்தே நிலை நின்றது:

சிந்துவெளி நாகரிகம் ஆரிய நாகரிகம் அல்லாத ஒரு நாகரிகம் என்பது மட்டுமல்லாமல், அது முழுக்க முழுக்கத் திராவிட நாகரிகமே ஆகும் என்பதையும், அத்தகைய திராவிட நாகரிகமே இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலும் ஒருகாலத்தில் பரவியிருந்தது என்பதையும், அந்த நாகரிகந்தான் மேற்கே பரவிய எல்லா நாகரிகங்களுக்கும் அடிப்படையாகவிளங்கிற்று என்பதையும், இந்தியத் துணைக்கண்ட நாகரிகத்திற்கும் சரி, உலக நாகரிகத்திற்கும் சரி திராவிடந்தான் தொட்டிலாகக் காட்சியளித்தது என்பதையும் தெள்ளத் தெளிய உலகுக்கு எடுத்துக் காட்டிய, பெருமை அவரையே சாரும். அவர் தம்முடைய கருத்தை வலியுறுத்திச் சொற்பொழிவுகள் வாயிலாகவும், இதழ்கள் வாயிலாகவும் நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்து வந்தார்.

அவரை நேரில் காணும் வாய்ப்பும், அவருடைய அரிய சொற்பொழிவைக் கேட்கும் வாய்ப்பும் எனக்கு ஒருமுறை ஏற்பட்டது. நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மூன்றாவது ஆண்டு வகுப்பில் பயின்றுகொண்டிருக்குங்காலை, 1942-ம் ஆண்டில், ஈராசுப் பாதிரியார் சிறப்புச் சொற்பொழிவு ஆற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கு வந்தார். அவர் மூன்று நாட்கள் தொடர்ந்து சொற்பொழிவு ஆற்றினார். அவர் சொற்பொழிவு ஆற்ற எடுத்துக்கொண்ட தலைப்பு "சிந்துவெளி நாகரிகம்" என்பதாகும்.

அவரது தோற்றமே கவர்ச்சிகரமாக இருந்தது; அவரது சொற்பொழிவு அதைவிடக் கவர்ச்சிகரமாக இருந்தது. குள்ள உருவம், பருத்த உடல், பரந்த முகம், விரிந்த நெற்றி, வெண்மை நிறம், பெரிய கண்கள், எடுப்பான மூக்கு, அதன்மேல் கண்ணாடி, வெள்ளை அங்கி, வெளளிய நீண்ட அழகான தாடி ஆகிய இவற்றோடு கூடியதுதான் அவரது தோற்றம். ஆராய்ச்சியில் ஈடுபட்டு அப்பொழுது அவரது கண்கள் பார்வை மழுங்கிக் காணப்பட்டன. அவருடன் எப்பொழுதும் உதவிக்கு என்று இருந்த மாணவர்கள் இருவர் அவரைமெல்ல அழைத்து வந்து மேடை ஏற்றுவித்தனர்.

அவர் யாவருக்கும் புரியும் வண்ணம் தெளிவான சொற்களால், அழுத்தந்திருத்தமாகக் கவர்ச்சிகரமான குரலில் பேசினார். அவர் பேசத் துவங்கியவுடன் உலகமுதன் மொழிப் பரம்பரையைச் சேர்ந்ததும், திராவிடக் குழு மொழிகளில் தலை சிறந்து விளங்குவதும், தொன்மை—சிறப்பு—அழகு—இனிமை ஆகிய பண்புகள் வாய்ந்ததும் ஆன தமிழ் மொழியில் தாம் பேச முடியாமல் இருப்பதற்குப் பெரிதும் வருந்தத் தெரிவித்துக்கொண்டார். மற்று மொரு முறை பேசும்படியான வாய்ப்பு சில ஆண்டுகள் கழித்துத் தமக்குக் கிடைக்குமாயின் அப்பொழுது கட்டாயம் தமிழில் பேசுவேன் என்றும் தம் விழைவைத் தெரிவித்துக் கொண்டார். சிந்துவெளி நாகரிகம் ஆரிய நாகரிகம் என்று சொலலுவதற்கு எவ்விதச் சான்றும் கிடைக்கப் பெறுததால், அது ஆரியமல்லாத ஒரு நாகரிகமாகத்தான் இருக்கக்கூடும் என்பதையும், அங்கு அகழ்ந்து காணப்பட்ட பொருள்கள் திராவிட இனமக்கள் புழங்கும் பொருள்களோடு ஒத்திருப்பதால், அது திராவிட நாகரிகமாகத்தான் இருக்க முடியும் எனபதையும் அவர் விளக்கிக் காட்டினார். சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களிலும், முத்திரைகளிலும் காணப்படும் [illegible] இந்தியத் துணைக்கண்டத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிகளிலிருந்து சான்றுகள் காட்டி விளக்கினார். ஈராசுப் பாதிரியார் கீழை நாட்டு—மேலை நாட்டு மொழிகளில் பதினாறு மொழிகளில் நன்றாக எழுதவும் படிக்கவும் கற்றுக் கொண்டிருந்தார்.

அவர் தமது மூன்றாம் நாள் சொற்பொழிவை ஆற்றி விட்டு, மூன்றாவது நாள் பேசி உட்காரும்போது, "Hitherto Father Heras was not Speaking to you, but a Dravidian from Spain" [இதுவரையில் உங்களிடம் பேசிக்கொண்டிருந்தது ஈராசுப் பாதிரியார் அல்லர்; சுபெயின் நாட்டிலிருந்து வந்த ஒரு திராவிடரே பேசிக்கொண்டிருந்தார்] என்று பேசிவிட்டு உட்கார்ந்தார். நானும் என்னைப் போன்ற மாணவர்களும் அவரது இறுதிச் சொற்பொழிவு கேட்டு மண்டபம் அதிரக் கைகையொலி முழக்கினோம்.

மறுநாள் காலை நானும், எனது இளவல் இரா. செழியனும், பிற நண்பர்களும் ஈராசுப் பாதிரியார் தங்கியிருந்த விருந்தினர் விடுதிக்குச் சென்றோம். அவர் அன்போடு எங்களை வரவேற்று இனிமையாக ஒரு இரண்டு மணி நேரகாலம் உரையாடிக் கொண்டிருந்தார். 'தங்களுக்குத்தான் கண்கள் இரண்டும் மங்கி மழுங்கி விட்டனவே! எப்படிப் படிக்கிறீர்கள்? எப்படி எழுதுகிறீர்கள்?' என்று கேட்டேன். அவர் தம்முடன் இருந்த இரண்டு மாணவர்களையும் அழைத்து அவர்கள் இருவரையும் இரண்டு பக்கத்திலும் இரண்டு கைகளால் பிடித்துக்கொண்டு "இந்த இருவருந்தான் எனது இரண்டு கண்கள்" என்று சொல்லிவிட்டுப் புன்னகை புரிந்தார். நாங்கள் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு எழுந்திருக்கும் போது "தாங்கள் நேற்றைய சொற்பொழிவின் இறுதியில் குறிப்பிட்ட சொற்றொடரை அப்படியே எழுதித் தாங்கள் கையெழுத்துப்போட்டுத் தரவேண்டும்" என்று நான் அவரிடம் விரும்பிக் கேட்டுக்கொண்டேன். அவரும் அன்புடன் அப்படியே கையெழுத்துப் போட்டுத்தர இசைந்தார். நான் என் கையிலிருந்த பெரிய சங்க இலக்கிய நூலை விரித்து நீட்டினேன். அவருடன் இருந்த மாணவர் ஒருவர் பேனாவை உறை நீக்கி அவரிடம் கொடுத்து அவர் கையைப் பிடித்து ஏட்டில் வைத்தார். ஈராசுப் பாதிரியார் எழுதத் தொடங்கினார். ஒருவரி எழுதி முடிந்ததும் "போதும் நிறுத்துங்கள்; அடுத்த வரிக்கு வாருங்கள்!" என்று அந்த மாணவர் சொல்லி, பாதிரியாரின் கையைப் பிடித்து அடுத்த வரி எழுத வைத்தார். இப்படியாகவே ஒவ்வொரு வரியையும் அவர் எழுதினார்; அவர் எழுதியது' "I, the undersigned, am a Dravidian from Spain. 14th III' 42, H. Hears S. J. [கீழ்கை

(4-ம் பக்கம் பார்க்க)

'சுதந்திரன்'
சந்தா விபரம்
1--1--1956 முதல்

வருட சந்தா ரூபா 8:00
ஆறு மாத சந்தா ரூபா 4:50

விபரங்களுக்கு எழுதவும்:-
சர்குலேஷன் மானேஜர்,
'சுதந்திரன்'
194ஏ, தட்டாதெரு, கொழும்பு-12

இருட்டுலகில்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்த்தான். அவன் கண்களில் தேங்கி நின்ற தாபத்தைக் கண்டான். நிலவொளியின் குளிர்மையும் சேர்ந்து சதி செய்தது இருவரும் ஒன்றுயினர்.

அந்த நிலவிரவில் ஏற்பட்ட பிரமையின் கூட்டு அவள் வயிற்றில் ஒரு சிசுவை விட்டுச் சென்றது. அவர்கள் நல்லாயிருந்த பொழுது வராத குழந்தைச் செல்வம், இந்நேரம் வந்துவிட்டது: கஷ்டம் சேர்ந்து வரும் என்ற உலக வழக்கிற்கு அவர்கள் எப்படி விதிவிலக்காக முடியும்.

வருஷம் ஒன்றாகியது. பணமும் 90 ரூபாய் சேர்ந்தது. முனுசாமி சந்தோஷப்பட்டான், ஆனால் வள்ளியம்மை அந்தச் சந்தோஷத்திற்குப் பேரிடி போட்டாள்.

"என்னுங்க பணம் சேர்ந்துட்டுது: ஆனா நமக்குக் குழந்தை பிறந்தா வயிரவருக்குக் கும்பாபிஷேகம் செய்வதாக நேர்த்திக் கடன் செஞ்சோமல்லவா: இந்தப் பணத்திலே அதையும் செஞ்சிடவேணும்....."

முனுசாமி திகைத்தான். அவள் கூறியதும் உண்மை என்றுபட்டது. அதோடு கடன் பணம் சேர்க்க வயிரவர் உதவியை வேண்டி அதற்காக வடமாலை செய்வேனென்று தான் போட்ட நேர்த்திக் கடனும் ஞாபகத்திற்கு வந்தது. இரண்டையும் செய்யவேண்டும். கையில் பூசாரியார் கடனுக்குக் கொடுக்கவேண்டிய தொகைக்குப் பத்து ரூபாய் குறைய இருந்தது. என்ன செய்வதென்று தெரியாது விழித்தான்.

"பூசாரியாருக்கு முதலை மட்டும் கொடுத்து வட்டியை பின்பு தரலாமென்று கூறுங்கள்....." என்று புத்தி சொன்னாள் வள்ளி.

அது சரியாகப்பட்டது. நேர்த்திக்கடனை முடிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். எப்படியோ ஒருவாறு 15 ரூபாய்க்குள் நேர்த்திக் கடன் முடிந்தது.

குறித்த நாளில் பணத்துடன் பூசாரியாரிடம் சென்றான். தனது திட்டத்தைக் கூறினான்.

பூசாரி மறுத்துவிட்டார். வட்டியும் முதலுமாகச் சேர்த்துக் கட்டவேண்டும். இல்லாவிட்டால் முதலை மட்டும் கொடுத்தாலும், பழையபடியே வட்டி கட்டு மட்டும் முதல் தொகைக்கும் வட்டி வளரும் என்று கூறினார். அதோடு வட்டியின் வீதமும் மாதம் இருபது சதமாக மாறிவிடும் என்றார்.

முனுசாமியின் இருதயமே நின்றுவிடும் போலிருந்தது. பூசாரியின் கல்நெஞ்சை அவன் உணர்ந்து கொண்டான்: சரியென்று கூறி விட்டு வீட்டுக்கு வந்தான்.

கிழிந்த சேலை ஒரு நிலைக்கு மேல் பொத்தல் போட்டுத் தைக்க முடியாத நிலைக்கு வந்துவிடுமல்லவா: அதே போல முனுசாமியும் மாறினான். வாழ்க்கையே கசந்து விட்டது. பூசாரிக்குத் தான் பணம் கொடுக்க வேண்டுமென்பதை மறந்தான். சேமிப்பைவிட்டு செலவழிக்கத் தொடங்கினான்.

வள்ளியம்மையும் ஒரு ஆண் மகவை ஈன்றெடுத்தாள். குடும்பம் சந்தோஷமாக ஓடியது.

நான்கு வருடங்கள் ஓடி மறைந்தன. பூசாரியார் தம் கடனைப்பற்றி இவ்வளவு நாளும் ஒருமுறையேனும் முனுசாமியைக் கேட்டது கிடையாது. பணம்தான் வளருகிறதே. அதுதானே அவருக்கு வேண்டும். முனுசாமி உணம் தர மறுத்தால் வயிரவர் நாமம் இருக்கவே இருக்கிறது என்ற நம்பிக்கையில் அவர் இவ்வளவு நாட்களும் பேசாதிருந்தார்.

முனுசாமியும் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. முன்பெல்லாம் வயிரவ அவனுரைத் தினமும் தரிசிக்கத் தவறுவதில்லை. இப்பொழுது அதை மாற்றிக் கொண்டான். ஆனால் வயிரவரை மறந்துவிடவில்லை. கோயிலுக்குப் போவதை மட்டும் நிறுத்திவிட்டான். தினமும் காலையில் தன் வீட்டிலேயே சில நிமிஷநேரம் வயிரவரைத் தியானம் பண்ணுவான். பின்புதான் மறுகாரியங்கள். பூசாரியாருக்கு இது சிறிது ஆச்சரியத்தை அளிக்கத்தான் செய்தது: இருந்தும் இரத்தத்துடன் ஊறிக் கலந்த ஒரு படிக்கத்தை லேசில் அகற்ற முடியாது என்று அவருக்குத் தெரியும். அதனால் சாந்தியடைந்தார்.

அன்று பூசாரியார் முனுசாமியைக் கூப்பிட்டு அவன் கணக்கைக் காட்டினார். எல்லாமாகக் கூடி 250 ரூபாயாகக் கடன் வளர்ந்திருந்தது.

"என்னால் இப்பிறப்பில் அவ்வளவு பணம் கட்ட முடியாது. மறுபிறப்பில்தான் முடியும்....." என்றான் முனுசாமி.

"மறுபிறப்பு மட்டும் பொறுத்திருக்கமாட்டேன். உன்பேரில் வயிரவர் மிகவும் கோபமாயுள்ளார். மறுபிறப்பு எப்படியோ. ஆனபடியால் எப்படியும் நீ இப்பிறப்பிலேயே கட்ட வேண்டும்"

"அப்படியானால் என்வசம் உள்ள மாட்டையும் குடிசையையும் எடுத்துக்கொள்ளுங்கள். இவைக்குமேல் என்னிடம் எதுவுமே கிடையாது"

"ஏன் உன்னால் இன்னும் வேலை செய்ய முடியுமே. உன் கடனுக்காக என் வயலில் கூலி வேலை செய்து தீர்த்துக்கொள்"

"நான் உங்களுக்கு வேலை செய்துவிட்டு, என்னத்தைக் கொண்டு என் குடும்பத்தைக் காப்பாற்றுவது?"

"உனது சாப்பாட்டுக்குத் தினமும் ஒரு படி அரிசி தருகிறேன்: உன் மனைவி தனக்கும் பிள்ளைக்குமாகச் சம்பாதிக்கட்டுமே"

"என்னை ஏன் இப்படி உயிருடன் சித்ரவதை செய்கிறீர்"

"நீ எப்படி வேண்டுமானாலும் கூறு. எதுவரினும் சரி, என் கடனைத் தீர்க்கு மட்டும் உன்னை நான் விடப்போவதில்லை. நீ தப்பிக்கொண்டால், உன் மனைவி, மகனையாவது பிடித்துக்கொள்வேன். அதுவுமில்லை. வயிரவர் மேல்தான் பழிபோடுவேன். அதனால் என்ன நடக்குமென்று நான் கூற வேண்டியதில்லை....."

முனுசாமி பயந்தான். வேறு வழியின்றி ஒப்புக் கொண்டான். ஒரு பீடி அரிசிக்காக பால் பன்னிரண்டு மணித்தியாலமும் மாடாக உழைத்தான். வள்ளியம்மை தனக்கும் மகனுக்கும் கூலி வேலை செய்து கஞ்சி ஊற்றினாள்.

ஒருநாள் முனுசாமிக்கு வீட்டிலே வேலை கொடுத்து அன்று இரவு அங்கு தங்கும்படி செய்தார் பூசாரியார். அன்றிரவு எப்படியும் தன் அபிலாசையை நிறைவேற்ற வேண்டுமென்ற திட்டம் அவருக்கு. நன்றாக இருட்டியதும் வள்ளியம்மை பிடம் சென்றார். தன் இஷ்டத்திற்கு இசைந்தால் முனுசாமியை விட்டுவிடுவதாகக் கூறினார்: மசிந்தாளில்லை அவள். கூக்குரலிட்டு ஊர்ச் சனங்களைக் கூப்பிடுமுன் குடிசையை விட்டு வெளியேறும்படி கூறினாள். பூசாரியார் விபரீதம் விளையுமுன் வெளியேறினார். தம் திட்டம் பலிக்காதுபோகவே முனுசாமியை எவ்வளவு கஷ்டப்படுத்த முடியுமோ அவ்வளவும் செய்தார். அதனால் சிறிது சாந்தியடைந்தார்.

நாட்கள் உருண்டன. பதினைந்து வருடங்கள் மறைந்தது. கடுமையான வேலையாலும், போதிய உணவில்லாமையாலும் வள்ளியம்மையின் உடல் கட்டுக் கலைந்து ஆளே உருமாறிவிட்டாள். ஒருநாள் இருதயம் வேலை செய்ய மறந்துவிட்டதோ என்னவோ கண்ணை மூடிவிட்டாள். முனுசாமியும் மகனும் துடித்தனர். கதறினர். வேறு என்னதான் செய்ய முடியும்: முனுசாமிக்கு இது வயிரவரின் வேலை என்றுமட்டும் பட்டது. இவ்வளவு கஷ்டத்தின் பின்பும் வயிரவர்மேல் அவனுக்கிருந்த நம்பிக்கை தளர்ந்துவிடவில்லை.

முனுசாமியும் இரு வருடங்கள் வாழ்ந்துவிட்டு பூசாரியார் பயமுறுத்திய அந்த மறுபிறப்பைக்காணச் சென்றான்.

பூசாரியாரின் கடனில் அரைப் பங்கைத்தான் அவனால் அடைக்க முடிந்தது. அதுதான் தினம்வரும் கடனையிற்றே.

பூசாரியார் தம் மீதிக்கடனுக்காக முனுசாமியை மறுபிறப்பில் தொந்தரவுசெய்ய விரும்பவில்லை: அவர் அவ்வளவு கொடுமை வாய்ந்தவரில்லை. பதிலுக்கு அவன் மகனைப் பிடித்துக்கொண்டார். தன் தகப்பன் விட்டுச் சென்ற இடத்திலிருந்து மகன் தொடர்ந்தான். இன்றுவரை தொடர்கிறான்: என்றுதான் அவனுக்கு விமோசனமோ!

(இந்திக்கதை ஒன்றைத் தழுவியது)

'டோக்கியோவில் விலை மாதர் சங்கம்'

தங்கள் தொழிலை நடத்தும் உரிமைக்குப் போராடுவதற்காக ஒரு தொழிற் சங்கம் அமைத்திருப்பதாக 15 ஆயிரம் டோக்கியோ விபசாரிகள் இன்று அறிவித்தனர்:

இந்தப் புதுத் தொழிற் சங்கத்தை ஜப்பானிய பார்லிமெண்டில் உள்ள ஒரு சோஷலிஸ்ட் மெம்பர் ஆதரிக்கிறார். விபசாரமும் ஒரு தொழில்தான் என்று அவர் கூறுகிறார்.

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டிவிதிகள்

1 சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகள் யாவும் சுதந்திரனில் வெளியாகும் கூப்பன்களில் அல்லது சுதந்திரன் ஸ்தாபனத்தார் அச்சிட்டுஇலவசமாக வினியோகிக்கும் கூப்பன்களில் மட்டுமே எழுதப்படவேண்டும்.

2 விடைகள் தெளிவாக மையினால் எழுதப்படவேண்டும். எழுத்துக்கள் அழித்தெழுதப்படலாகாது. மாற்றங்கள் செய்யப்படலாகாது. எல்லாக் கட்டங்களும் பூரணமாக நிரப்பப்பட்டிருக்கவேண்டும்.

3 ஒவ்வொரு கூப்பனிலும் போட்டியில் கலந்து கொள்பவரின் பெயரும் விலாசமும் தெளிவாக எழுதப்படவேண்டும்.

4 (அ) ஒரே கவரினுள் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்கள் அனுப்பப்படுவதானால் அவை அனைத்தும் ஒரு போட்டி நேயருடைய கூப்பன்களாகவே இருக்கவேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்கள் அனுப்பப்படும்போது எல்லாக் கூப்பன்களுக்குமுரிய கட்டணமும் ஒன்றாக அனுப்பப்படவேண்டும். அத்தோடு கூப்பன்கள் அனுப்பப்படும் எல்லாக் கவர்களின் பின்புறத்திலும் போட்டியில் கலந்துகொள்ளும் நேயருடைய பெயரும் விலாசமும் தெளிவாக எழுதப்பட்டிருக்கவேண்டும்.

(ஆ) இப்போட்டிக்குரிய பிரவேசக் கட்டணம் விடை ஒன்றிற்கு சதம் 50. மூன்று விடைகளுக்கு ரூபா 1-00.

5 எல்லாக் கட்டணமும் இலங்கைப் போஸ்டல் ஆடர் அல்லது சுதந்திரன் போட்டி வவுச்சர் மூலம் சுதந்திரன் என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும். போஸ்டல் ஆடர்கள் "குரோஸ்" செய்யப்படுதல் அவசியம். சுதந்திரன் போட்டி வவுச்சர் கதந்திரன் காரியாலயத்தில் கிடைக்கும். மனி ஆடர்கள், தபால் பில்லைகள், செக்குகள் முதலியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

6 தபால் மூலம் அனுப்பப்படும் எல்லா விடைகளும் சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 194 ஏ, தட்டாதெரு கொழும்பு—12 என்ற விலாசத்திற்கே அனுப்பப்படவேண்டும் விடைகளை சுதந்திரன் காரியாலயத்தில் நேரில் கொண்டுவந்து சேர்ப்பிக்க விரும்புபவர்கள் அப்படிச் செய்யலாம். உரிய பிரவேசக் கட்டணத்தை காரியாலயத்தில் செலுத்தி அதற்குரிய போட்டி வவுச்சரைப் பெற்று, அதை விடைக் கூப்பன்களுடன் இணைத்து காரியாலயத்தில் இதற்கென வைத்திருக்கும் கூப்பன் பெட்டியில் போடவேண்டும். காரியாலயத்தில் வேலை செய்யும் எந்த சிப்பந்திகளிடமும் விடைகளைக் கையளிக்கலாகாது. கைபிழையாக தவறிவிடும் அல்லது காணுமற் போய்விடும் விடைகளுக்கு போட்டிக் காரியாலயத்தார் பொறுப்பேற்க முடியாது. முடிவு தேதிக்குமுன் விடைகள் கிடைக்க வேண்டும். விடைகளைத் தபாலில்சேர்த்த அத்தாட்சி, தபால் உரிய காலத்தில் அதாவது முடிவு தேதிக்குமுன் வினியோகம் செய்யப்பட்டதென்பதற்கு அத்தாட்சியாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7 போட்டி ஆசிரியரின் விடைக்குசரியான விடை அல்லது குறைந்தபட்ச பிழைகளோடு கூடிய விடை அனுப்பியவருக்கு முதற் பரிசும், முதற்பரிசு பெறும் விடைக்கு அடுத்தபடியாயுள்ள விடை அனுப்பியவருக்குஇரண்டாவதுபரிசும் வழங்கப்படும். பரிசுக்குரிய வர்கள் ஒன்றுக்கு மேற்பட்டோராயிருப்பின் அவர்களிடையே பரிசுகள் பகிர்ந்தளிக்கப்படும். ஒருவர் ஒரு போட்டியில் ஒன்றுக்கு மேற்பட்ட பரிசுகளைப் பெறமுடியாது.

(அ) உரிய கட்டணங்கள் அவ்வளவும் செலுத்தியார் ஒருவர் அதிகப்படியான விடைகள் அனுப்புகிறாரோ அவருக்கு ரூ. 100 விசேஷப் பரிசாக வழங்கப்படும். ஒரே பெயரில் ஒரு கவரினுள் ஒரே சமயத்தில் அதிகப்படியான விடைகளை உரிய கட்டணத்துடன் அனுப்புவரே இப்பரிசுக்கு உரியவராவர். வெவ்வேறு கவருக்குள் வெவ்வேறு காலங்களில் அனுப்பப்படும் விடைகள் இப்பரிசுக்கு உரிமையுடையவையாக ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஒரே தொகையான விடைகள் அனுப்பினால் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படும் 7ம்விதியில் காட்டப்பட்ட குறிப்புக்கு மாறுக முதல் அல்லது இரண்டாவது பரிசு பெறும் நபரும் இந்த விசேஷ பரிசைப் பெற உரிமையுடையவராவர்.

8 இங்கு தரப்பட்டிருக்கும் போட்டி விதிகளுக்கு உட்படாத எந்த ஒரு கூப்பனும் போட்டியில் கலந்து கொள்ளத் தகுதியற்றதாகவே கணிக்கப்படும். இத்தகைய தகுதியற்ற கூப்பன்களோடு அனுப்பப்படும் கட்டணங்கள் திருப்பிக் கொடுக்கப்படமாட்டா.

9 இப்போட்டி சம்பந்தமாக லிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டட்கம்பனியாரின் தீர்ப்பே முடிவானதும் சட்டபூர்வமாகக் கருதப்படுவதுமாகும்.

10 இப்போட்டி விதிகள் இப்போட்டியை நடத்தும் லிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டட் கம்பனியாருக்கும் போட்டியில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவருக்குமிடையே தனித்தனி ஒப்பந்தத்தை ஏற்படுத்துகின்றன. இந்த ஒப்பந்தம் கொழும்பில் செய்யப்பட்டதாகவும் கொழும்பிலேயே முற்றுக நிறைவேற்றப்படுவதாகவும் கருதப்படவேண்டும்.

11 சம்பந்தப்பட்ட போட்டியில் பரிசுபெற தாங்கள் தகுதியும் உரிமையும் உடையவர்களெனக் கருதும் நேயர்கள் அப்போட்டி முடிவும் பரிசுபெற்றவர்கள் விவரமும் வெளியான மூன்று நாட்களுக்குள் தங்கள் கோரிக்கைகளை ரூ. 25 பிணைப் பணத்துடன் பதிவுத்தபால் மூலம் சமர்ப்பிக்கவேண்டும். அத்தோடு போஸ்டல் ஆடர், அல்லது போட்டி வவுச்சர் இலக்கத்தையும், விடைகளைத் தபாலில் அல்லது நேரில் சேர்த்த தேதியையும் எழுதி அனுப்பவேண்டும். தகுதியும் உரிமையும் நிரூபிக்கப் படாதபட்சத்தில் பிரஸ்தாப பிணைப்பணத்தை அவர்கள் இழந்துவிடுவார்கள்.

12 இப்போட்டி சம்பந்தமாக வேறு எந்தவித மானகடிதப் போக்குவரத்தும் நேர்முகமான பேட்டியும் வைத்துக்கொள்ளப்படமாட்டாது. லிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டட் கம்பனியில் வேலைபார்க்கும் சிப்பந்திகளும் அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

இந்தியாவிலிருந்து இப்போட்டியில் பங்கு பற்றும் நேயர்கள் அவர்கள் அனுப்பும் கூப்பன்களுக்குரிய பிரவேசக் கட்டணத்தை இந்தியாவிலிருந்து மணியாடர் மூலமாக மட்டுமே அனுப்பவேண்டும். மணியாடர்மூலம் அனுப்பியதற்குரிய ரசீதும் மேற்படி கூப்பன்களுடன் அனுப்பப்படவேண்டும். இந்திய போஸ்டல் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மணியாடர்கள், மானேஜர், சுதந்திரன், கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

போட்டிக் கூப்பன்கள் அனுமதிக்கப்படும் கவரின்மேல் சம்பந்தப்பட்டபோட்டி இலக்கம் தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன் பிரிவினால்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டாள். நித்திரை மட்டும் வரவில்லை:

தன் மனைவியைப் பிரிந்து அத்தனை நாளாகியும் அன்றைய மனநிலை அவனுக்கேற்பட்டதில்லை! எங்கு பார்த்தாலும் அவளைப்பற்றிய உருவமே தோன்றியது. மண்ணைப் பார்க்கிலும் அதை வெட்டிவரம்பு வைக்கினும் அங்கு அவளது சோகநிலை தோன்றுவதைக் கண்டான். தன் தந்தையைப்பற்றி என்னமோ எண்ணினான். அவரது செய்கைகள் அவனுக்கு எனனவோபோன்றிருந்தது. கட்டிய பெண்ணைக் கதறவிட்டு, தந்தையின் பரிவுக்காய் அவளைப் பிரிந்திருக்கும் கயமைத்தனத்தையெண்ணி உள்ளுக்குள் நொந்துகொண்டான். படுக்கைக்குச் சென்றான். நித்திரை வரவில்லை. கொஞ்சம் மொழியாளுடன் கூடப் படுத்த நினைவு அவனைப் பகிஷ்கரித்தது. தன் மனைவியைக் காணச் செல்ல வேண்டும்போன்றிருந்தது அவனுக்கு! "வருகிறது வரட்டும், எப்படியாவது வீட்டுக்குப் போயே ஆக வேண்டும்" என்று திடசங்கற்பம் செய்துகொண்டான். அவனுக்குப் புதிய தொரு தென்பு பிறந்தது. நவமான சக்தி உண்டாயிற்று. சுருங்கக்கூறின் தன் மானம் என்ற கோவையில் அவனுக்குச் சுயமரியாதை உண்டாயிற்று. அப்படியே வாரிச் சுருட்டி எழுந்தான் நமது கதாநாயகன். எவ்வித சந்தடியுமின்றி வீட்டை விட்டு வெளியேறினான். நேராக நடந்தான். அவன் கால்கள் விரைந்தன:

படுக்கையிற் புரண்ட அவளுக்குச் சிறிது தூக்கமேற்பட்டது. கண்களை இறுக மூடிக்கொண்டாள். தூக்கம் வந்ததும் வராததுமாக இருந்தது: அச்சமயத்தில் கதவு தெறிக்கும் சத்தம் இலேசாகக் கேட்டது. ஏதும் காற்றினசைவுகளாயிருக்கலாமென்றெண்ணினாள். மீண்டும் தெறி சத்தம் அதிகமாயிற்று. அவளுக்குக் கோபமுண்டாயிற்று, வேசி வீட்டுக் கதவுகள்தான் நடுநிசியில் தெறிக்கப்படும். அவள் கற்புடை நங்கை. அதிலும் புதுமணப் பெண்ணூர். அவளுக்குப் பயமும் கோபமுமுண்டாகிறது. அனைத்தையும் ஒன்றுகூட்டி,

அர்த்தராத்திரியினிலே
அரைத் தூக்க வேளையிலே
கதவைத் தெறிக்கும்
கள்ளனவன் யார் தாத்தா

என்று தனது சகோதரியினிடம் கேட்பதுபோல் பாட்டாகக் கேட்டுவிடுகிறாள். நடுச்சாம நேரத்தில் அதுவும் அலுத்துத் தூங்கும் சந்தர்ப்பத்தில் கதவு தெறிக்கப்படுவதை எந்தக் கற்புடை மங்கைதான் விரும்புவாள். வெளியே நின்ற அவனுக்கு உள்ளுக்குள்ளே சந்தோஷம். தனது பண்புடை மனைவியைப் பரீட்சித்தும் விட்டதாக எண்ணினான். அவன் தன்னை வெளிப்படுத்துகின்றான்.

கதவைத் தெறிக்கும்
கள்ளனல்ல, உந்தனுக்கு
தாலிகட்டி விட்டுப்போன
சண்டாளன் நான் கதவுதிற

என்று பாடுகிறான். நடுயாமத்தில் கள்ளன் வரவில்லை கதவு தெறிப்பதற்கு. உன்னைத் தொட்டுத் தாலி கட்டிய கணவன்தான் வந்திருக்கின்றேன். அந்தக் கயமைமிகு கைக்கூலியின் சார்பில் உன்னைக் கைவிட்ட சண்டாளன் நான்தான் என்று கூறுகிறான் அவன். இத்தகையகவித்துவமும்கவியின்பமும் நோக்கத் தக்கது. அவளும் தன்னைச் சரிசெய்துகொண்டு மிகவும் மெள்ளமாகக் கதவைத் திறந்தாள் அப்பெண்பேதை. அவள் கண்கள் அகல விரிந்தன. விட்டு விளக்கொளியில் கணவனின் அன்புருவத்தைக் கண்டாள். அதிசயித்தாள். அதிர்ச்சியுற்றாள்..... ... இத்தனைக்கும் சும்மா நிற்க அவனென்ன மடையனா? அப்படியே தன் மனைவியைத் தாங்கி, கட்டியணைத்து முத்தம்பலவீந்தான். அப்பாடா பிரிந்தவர் கூடினால் எம்மால் பேசத்தான் முடியுமா என்ன!

சமூக சேவையாளர்களுக்கு வரவேற்பு

கொழும்பு சமூக சேவை நிலைய பயிற்சியாளர்கள் 9-1-56 பண்ணுகம் வடக்கு அப்பாள் சன சமூக நிலைய கிராம முன்னேற்றச் சங்கத்தைத் தரிசித்தனர்: 20 பேர் கொண்ட பயிற்சியாளர்களை மேற்படி நிலையத் தலைவர் சமய உபசாரத்தோடு வரவேற்றார். காரிய தரிசியால் வரவேற்புரை கூறப்பட்டது. மாதர் முன்னேற்றச் சங்கத்தினர்களால் சங்கீத நடனவிருந்து அளிக்கப்பட்டது. ஈற்றில் க. தியாகராசா என்பவரால் அன்னார்களுக்கு நன்றியுரை கூறப்பட்டது. பயிற்சி நிலைய போதனையாளரின் நல்லுரையோடு உபசாரக் கூட்டம் மாலை 7 மணியளவில் முடிவுற்றது.

வாசிகசாலை

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

நேரத்தை வீணாகக் கழிக்காமல் வாசிப்பதிலே கழிக்கலாம். வாசிப்பதினால் பல பெரிய தொண்டர்களைப் பற்றி நன்கு அறியலாம்.

வாசிக சாலைகள் கிராமங்களிலும், நகரங்களிலும், மாத்திரம் அல்ல பாடசாலைகளிலும் இருக்கவேண்டும்.

"கண்டதும் கற்கப் பண்டிதன் ஆவான்". எனவே மாணவர்கள் வாசினையை நாளாந்தக் கடமையாகக் கொண்டு வாசகசாலையில் அல்லது வீட்டில் நேரத்தை வீணாக்காமல் வாசித்தல் அவசியம்

-செல்வி செல்வராணி ஜோன்.

ராஜினாமா . . .

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசு வாலிப முன்னணி பொதுச் செயலாளர் திரு. அமிர் தலிங்கம் பேசும் போது கூறினார்.

அடுத்து மட்டக்களப்பு மருதமுனையைச் சேர்ந்த ஜனப் எஸ் இஸட். எம் மஷஹர் மவ்லானா பேச எழுந்ததும் இடையிடையே கரகோஷம் வானைப் பிளந்தது.

அவர் பேசுகையில் "தமிழ் பேசும் மக்களாகிய எங்களுக்கு இன்று எதிரிகள் வெளவர்களல்ல. எங்களது முதல் எதிரி சோல்பரி அரசியல் திட்டம்தான். அதை நாம் முதலில் ஒழித்துக் கட்டவேண்டும். கொழும்பு கூட்டு மகாநாடு செய்த முடிவு முஸ்லிம் மக்களின் ஏகோபித்த முடிவல்ல. அதைக் கண்டு தமிழ்ப் பேசும் மக்கள் வெருண்டு விடக்கூடாது. பட்டம்பதவிகளுக்காக இனத்தைக் காட்டிக்கொடுக்கும் அந்தத் துரோகிகளுக்கு முஸ்லிம் மக்கள் தகுந்த பாடம் கற்பிப்பார்கள்" என்றார்.

அடுத்து தமிழரசுக் கட்சித் தலைவர் திரு சி. வன்னியசிங்கம் பேசுகையில் பெப்ரவரி 20ம்திகதி தமிழ் பேசும் மக்கள் நடாத்த வேண்டிய ஹர்த்தாலைப்பற்றியும், அதன் அவயசித்தையும் வற்புறுத்திக் கூறினார். எவராவது தமிழரசுக் கட்சியில் இப்பொழுது சேரவந்தாலும் அவர்களின் குற்றத்தை மன்னித்து தங்கள் கட்சியில் சேர்த்துக்கொள்ளத் தயாராய் இருப்பதாகவும் கூறினார்.

இன்னும் சாவசச்சேரிக் கிராமச் சங்கத் தலைவரும், தென்மராட்சித் தமிழரசு வாலிப முன்னணித் தலைவருமான திரு எம். பரராஜசிங்கம், தமிழரசு வாலிப முன்னணிச் செயலாளர் திரு கே. துரைரத்தினம், ஆசிரியர் எம். சத்தியமூர்த்தி, வவுனியா தமிழரசு வாலிப முன்னணிச் செயலாளர் திரு வி. சிற்றம்பலம், செல்வி பத்மாவதி வேலுப்பிள்ளை முதலியோரும் பேசினர்.

அரசாங்க சேவையில் தமிழர்களுக்கு இனி இடமில்லை

ஆட்சியாளர் தமிழ் மக்களை ஒழித்துக்கட்டி உத்தியோகங்கள் யாவற்றையும் சர்வ சிங்களமயமாக்க எப்படித் திட்டம் போட்டிருக்கின்றனரென்பதற்குச் சமீபத்தில் மீன்பிடி இலாக்காவில் நடந்த ஊழல் ஒன்றும் உதாரணமாக அமைந்துள்ளது. புதிய மீன்பிடிப் பகுதிப் பரிசோதகர்களை நியமிப்பதிற் சையாளப்பட்ட வஞ்சகத்தையெண்ணி அப்பதவிக்கு மனுச்செய்து ஏமாந்த யாழ்ப்பாணத்து வாலிபர்கள் மத்தியில் மிகுந்த அதிருப்தி நிலவுகிறது.

மேற்கண்ட பதவிக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்குத் தோன்றிய வர்களில் சுமார் அரைவாசிப்பேர் தமிழராயிருந்தும் ஒரு தமிழர்கூட இறுதியிற் தெரிவு செய்யப்படவில்லையாம். தேர்ந்தெடுக்கப்பட்ட மூவரும் சிங்களவரென்றும், அவர்கள் மூன்று பேரும் பிரபல ஏ. பி. எம். பி. ஒருவரின் தேர்தல் தொகுதியைச் சேர்ந்தவர்களெனவும் நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து அறியப் படுகிறது:

அந்த மூன்று பேருக்கும் சிபார்சுக் கடிதம் கொடுத்தவர் நிதியமைச்சர் திரு எம். டி. எச். ஜயவர்த்தனை என்று நம்பப்படுகிறது:

இவ்விதமெல்லாம் அந்தரங்கத்தில் நடத்திக் கொண்டு வீண்கண் துடைப்பு வேலைகள் செய்து தமிழ் மக்களை ஏமாற்றுவது குறித்து இங்கு மிகுந்த வெறுப்புக் காணப்படுகிறது.

வெற்றி முரசுகொட்டும் 3வது வாரம்!

எல்பின்ஸ்டன் ரொக்ஸி

காலை 10-00, பிற்பகல் 2-00, மாலை 6-00, இரவு 9-30

சிவாஜி கணேசன், பி. பானுமதி

நடித்த

"கல்வனின் காதலி"

மகத்தான 3-வது மாதம்!

செல்லமஹால்

காலை 10-00, பிற்பகல் 2-00, மாலை 6-00, இரவு 9-30

குலேபகாவலி

வெற்றிகரமான 2-வது வாரம்!

கெயிட்டி

பிற்பகல் 2-00, மாலை 6-00, இரவு 9-30

"சந்திரலேகா"

(புத்தம் புதிய கொப்பி)

இரண்டாவது மகத்தான வாரம்!

சிந்தை உருக்கும் காதற் சித்திரம்!

பணக்காரனின் மகன் ஏழையின் மகளைக் காதலிக்கிறான். கையேற்பதாக சத்தியம் செய்கிறான். ஆனால்? எதிர்ப்பு. கோரமான எதிர்ப்பு. காதலி கைவிடப்படுகிறாளா?

காதலை எதிர்க்கும் வஞ்சக சமூகத்தை வஞ்சக யுக்தியால் முறியடிக்கும் சாகஸம்!

ஆரம்பம்முதல் கடைசிவரை வயிறு குலுங்கவைக்கும் குணமுள்ள ஹாஸ்யம்! தந்தையாக நடிக்கும் தங்கவேலுவின் திறமையான நடிப்பு.

"கோடீஸ்வரன்"

சிவாஜிகணேசன், பத்மினி,

தங்கவேலு, எஸ். பாலசந்தர், ஸ்ரீராம்,

ராகினி நடித்தது.

சென்ட்ரல் ராணி போகம்பரை ஜோதி அலைஜா

கொழும்பு காலை 10, பிற்பகல் 2, மாலை 6, இரவு 9-30 மணிக்கும்

யாழ்ப்பாணம் கண்டி திருகோணமலை மட்டக்களப்பு மாலை 6-30, இரவு 9-30

டைரக்ஷன்: சுந்தரராவ் நட்கர்ணி.

தயாரிப்பாளர்: ஸ்ரீ கணேஷ் மூவிடோன்.

(எல்லா விதமான இலவச டிக்கட்டுகளும் சலுகைகளும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.)

சென்ட்ரல் (நாவலப்பிட்டி)

சென்ட்ரல் (பருத்தித்துறை)

ஸ்டார் (பதுளை)

பிற்பகல் 2-30 மணி, மாலை 6-00 மணி, இரவு 9-30 மணிக்கும்

மாலை 6-30, இரவு 9-30 மணி

ஜெமினி ஸ்டூடியோவின், சாவித்திரி, சந்திரபாபு நடித்த "மாமன் மகள்"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நீங்களும் கேட்கலாம்

மாணவர்களாகிய உங்களுக்கு எத்தனையோ விஷயங்களுக்கு விடை தெரியாமலிருக்கலாம். நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு 'சுதந்திரன்' மாமாவினூல் இப் பகுதியில் விடையளிக்கப்படும். ஆனூல் கேள்விகள் பெயர் விலாசத்துடன் போஸ்ட் கார்ட்டில் மட்டும் எழுதப்பட வேண்டும். 'வளர்மதி' சுதந்திரன் மாணவர் மன்றம், C/o சுதந்திரன், தபால் பெட்டி இல: 1183, கொழும்பு—12 என்ற விலாசத்திற்கு கேள்விகளை அனுப்பி வைக்க வேண்டும்.

கேள்வி:

செல்வி லீலா கணபதிப்பிள்ளை

எந்த நோயினூல் மக்கள் அதிகமாகப் பீடிக்கப்பட்டு இறக்கிறூர்கள்?

பதில்:

மலேரியாவினூல் தான் என்று சொல்லலாம். முப்பத்தாறு கோடி மக்கள் தொகை கொண்ட இந்திய நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் மூன்று கோடிக்கும் அதிகமான மக்கள் பலியாகின்றூர்கள்!

கேள்வி:

செல்வன் அகமது லெவ்வை

பாரசீகக் கவிஞர் உமர் கய்யாமின் பாடல்களைத் தமிழில் தந்தவர் யார்?

பதில்:

அந்தக் காரியத்தை கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை செய்திருக்கின்றூர். அழகான மொழிபெயர்ப்பு.

கேள்வி:

செல்வன் பற்றிக் டேவிட்

ஒலி அலைகளுக்கும் வானொலி அலைகளுக்கும் உள்ள வேக வித்தியாசம் என்ன?

பதில்:

வானொலி அலைகள் ஒரு வினாடிக்கு 1,86,000 மைல்கள் வீதமும், ஒலி அலைகள் மணிக்கு 700 மைல் வேகத்திலும் செல்லுகின்றன. லண்டனிலுள்ள மக்கள் ஒரு கடிகாரத்தின் ஒலியைக் கேட்கு முன்னரே ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலிருக்கும் ஆஸ்திரேலிய மக்கள் வானொலி அலைகள் உதவியால் கேட்டுவிடுகின்றனர்!

கேள்வி:

செல்வி நீட்டா
செபஸ்தியாம்பிள்ளை

சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோ அடிகளின் சமயம் என்ன?

பதில்:

அவர் சமண சமயத்தைச் சேர்ந்தவர்.

கேள்வி:

செல்வி றஹிலா அலி

1955ம் ஆண்டு சிறுவர்களுக்குப் பயன்படும் வகையில் வெளிவந்த தமிழ்ப் படம் எது?

பதில்:

வள்ளியின் செல்வன் என்று சொல்லலாம். மங்கையர் திலகமும் பரவாயில்லை.

கேள்வி:

செல்வன் கே. இரத்தினசபாபதி

சிலந்தி கூடு கட்டுகிறதே, அது எதைப் போதிக்கின்றது?

பதில்:

கீழ் வகுப்புகளில் படிக்கும் ஒரு கதையுண்டு; வெற்றி கிட்டும் வரை மேலும் மேலும் முயல வேண்டும்! எத்தனை தடவை தோல்வி ஏற்பட்டாலும் சிலந்தி முயற்சியைக் கைவிடுவதேயில்லை.

வளர் மதி

சுதந்திரன் மாணவர் மன்றம்.

அன்பான மருமக்களே!

மாமாவுக்குக் கடிதம் எழுதினேமே, இன்னும் பதிலைக் காணேமே என்று பல மருமக்கள் எழுதியிருக்கிறூர்கள். அவர்கள் எழுதியவைகளுக்கான பதிலை இவ்வாரம் 'மாமா பதி'லில் வெளியிட்டுள்ளேன். அவைகளைக் கவனித்து மருமக்கள் 'வளர் மதி'யின் வளர்ச்சிக்காக உழைக்க வேண்டுமென்பதுதான் மாமாவின் ஆசை.

சென்ற வாரம் ஏராளமான கட்டுரைகளும், கேள்விகளும் மருமக்களிடமிருந்து வந்து குவிந்திருக்கின்றன. எல்லா மருமக்களின் விஷயங்களையும் 'வளர்மதி'யில் வெளியிட முடியுமா என்ன? சிறந்தவைகளை வெளியிடுவேன்.

ஏராளமான மருமக்கள் மாமாவுக்கு பொங்கல் வாழ்த்துக்கள் அனுபியிருக்கிறூர்கள். அவர்கள் அனைவருக்கும் மாமாவின் இதயம்கலந்த நன்றி.

மொழிப் பிரச்சனைபற்றி உங்கள் முடிவு என்ன என்றும் பல மருமக்கள் எழுதியிருக்கிறூர்கள். தமிழுக்கும், சிங்களத்திற்கும் சம அந்தஸ்து கிடைக்கவேண்டுமென்பதுதான் மாமாவின அபிப்பிராயம்! இந்தப் பெரிய விஷயங்களில் எல்லாம் நாம் தலையிடுவானேன்.....தமிழ்த் தலைவர்களின் கடமை அது; அவர்கள் சுகமாகத் தீர்த்துவைப்பார்கள் இல்லையா?

சென்ற வாரம் வெளியிட்டிருந்தேனே, 'திருகோணமலையின் சிறப்பு' என்ற கட்டுரை; அதைப் பாராட்டி திருகோணமலையிலிருந்து மருமகள் டி. அரியராஜா எழுதியிருக்கிறூர். "செல்வி றஹிலா அலி நன்றாக எழுதியிருக்கிறூர் மாமா அதைப்போன்ற கட்டுரைகளை வெளியிடுங்களேன்" என்று அவர் எழுயிருக்கிறூர். இன்னும் பலரும் செல்வி றஹிலா அலியின் கட்டுரையைப் பாராட்டி எழுதியிருக்கிறூர்கள்.

மிக்க அன்புள்ள,
சுதந்திரன் மாமா.

எனது பாட்டி

இப்பரந்த உலகில் முற்காலந்தொட்டு கதைகள் சொல்பவர்களில் முதன்மை பெற்றுத் திகழ்பவர்களுள் பாட்டிமார்களே சிறந்தவர்களாகக் கருதப்படுகின்றனர்.

அதே போன்று எனது பாட்டியாரும் கதைகள் சொல்வதில் தேர்ந்தவர். அவர் சொல்லும் கதைகள் பெரும்பாலும் புராணங்களிலும், இதிகாசங்களிலும், பழைய வரலாறுகளிலும் இருப்பனவாகவே இருக்கும். அன்றியும் அவர் கூறும் விடுகதைகள் புரியாத புதிராயும், கிராமக் கவிதைகள் சந்தோஷத்தை ஊட்டும் வகையில் இனிமையாகவும் இருக்கும். அவர் கூறும் பேய்க் கதைகளைக் கேட்கக்கேட்க மயிர்க்கூச்செறியும்.

இவ்வகையாக எனது பாட்டியார் கூறும் கதைகளும், கவிதைகளும், விடுகதைகளும் தெவிட்டாதனவாய், என்றும் மனதைவிட்டகலா. அவர் தன் பொக்கைவாய் தெரியச் சிரித்தால் என் சிறிய தங்கையும் அழுகையை மறந்துவிட்டுக் கலகலென்று சிரிப்பாள்.

இத்தகைய எனது பாட்டியாரைப் போன்ற பாட்டிமார்கள் இவ்வுலகில் நீடூழி வாழக் கடவுள் அருள் புரிவாராக.

செல்வி கு. சிவலோஜினி,

அஞ்சல் செய்வோம்!

தென்னை சூழ் மீனும் நங்கை
சேர்ந்திசை நாட்டில் தோன்றி
அன்னையாம் தமிழில் தேறி
ஆங்கிலமதையும் கற்று
தொன்மையை உணர்த்தும் யாழை
தொகுத்தொரு 'யாழ்நூல்' தன்னை
அண்மையில் தந்துபோன
அறிஞனை அஞ்சல் செய்வோம்

—'மூனுக்கானு'

'வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூர்த்தி செய்து அனுப்பவேண்டும் மனுப்பத்திரங்கள்தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலங்கங்களைக் கொண்ட மூன்று மனுப்பத்திரங்களை 'வளர்மதி''யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து 'வளர்மதி'' C/o சுதந்திரன், தபால் பெட்டி இல. 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சி பத்திரமும் வழங்கப்படும்.

வளர் மதி

சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 2

பெயர்.....வயது.....

பாடசாலை.....

விலாசம்.....

.....

.....
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம்

.....
கையொப்பம்

விஞ்ஞான அறிவு:

அணுவும் ஆற்றலும்

நாம் ஒரு பொருளைப் பார்ப்பதாய் இருந்தால் அப் பொருளிலிருந்து ஒளி எம் கண்களில் படிந்தாக வேண்டும். பொருள்கள் கதிரவனிடமிருந்தோ, அன்றி செயற்கையாக ஒளி உமிழும் வேறெவ்வித சாதனங்களிடமிருந்தோ ஒளியைப் பெற்று அதனை எங்கும் சிதறடிப்பதினூற்றூன் நாம் அவற்றைக் காண்கிறோம். ஆனூல் யுரேனியம் அத் தன்மையதன்று. அது தானுகவே ஒளியைச் சிதறடிக்கவல்லது. இதனைப் போன்றே ரேடியமும் ஒளியை வெளிப்படுத்துகின்றது. அதனூற்றூன்—இரவு வேளைகளில் சுலபமாக நேரம் அறிய

இளம்பூரணன்

லாம் என்னும் நோக்கோடு-மக்களில் பெரும்பாலானேர் ரேடியம் பதித்த கைக்கடிகாரத்தை வாங்கி மகிழ்கின்றனர்.

இந்த யுரேனியத்திலிருந்து வெளிப்படும் ஒளி வகையில் அல்பா கிரணங்களும் ஒன்று. இது அணுக்களினூடே ஊடுருவிச் சென்று, அவற்றைப் பிளக்கும் தன்மைத்து. ஆனூல் இதனினும் மிக எளிதாக அலியுரு அணுவைப் பிளப்பதை ஆராய்ச்சி வல்லுநர்கள் கண்டறிந்தனர். ஒரு அணுவைப் பிளப்பதாயின். வெளிப்புரத்தாக்கம். பெருமளவினதாய் வேண்டும். இத்தகைய தாக்கத்தை அணு அலியுருவிடமிருந்து பெருகின்றது. இச் செய்கையால் அலியுரு மின்னுரு, பரமாணு ஆகியவற்றின் பிணைப்புப் பிளவுபெறவே அணு சிதைகிறது. அணுக்குண்டை வெடிக்கச் செய்வதற்கும். உபயோகப்படுவது இம்முறைதான் என்பதை நீங்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அணுக்குண்டும் விளைவும்

பிளவு முறையில் அணுக்குண்டு எவ்வாறு வெடிக்கின்ற தென்பதை நோக்குவோம். ஒரு யுரேனிய அணுக்குண்டு வீசப்படுகின்ற தென்று வையுங்கள். அப்போது அலியுருவின் தாக்கலால் குண்டு இரு பிரிவுகளாகப் பிளக்கின்றது. பின்னர் அப்பிரிவின் போது விடுதலை பெற்ற அலியுருக்கள் பிளவுபட்ட அந்த இருயுரேனியத்தையும் தாக்குகின்றன. உடனே அவையிரண்டும் நான்கு கூறுகளாகப் பிரிகின்றன. இப் பிரிவின்போது விடுதலை பெற்ற அலியுருக்கள் நான்கையும் தாக்க, அவை எட்டாகப் பாகப்படுத்தப்படுகின்றன: பின் பதினறு, முப்பத்திரண்டு... இங்ஙனம் சங்கிலித் தொடர் போல் இயக்கம் நீள்கின்றது அதைப் பற்றி நாம் கூறத்தான் அதிக நேரம் பிடிக்கின்றது; ஆனூல் நிகழ்ச்சி அவ்வாறன்று. எல்லாம் பொறி பறக்கும் நேரத்திற்குள் சம்பவித்து விடுகின்றன. இவ்வாறு ஒன்று இரண்டாகப் பகுக்கப் படும் போது, அபார சக்தி பேரிடியோடு வெளிப்படுகின்றது. அச் சக்தியின் விளைவுதான் உயிரினத்தின் நாசமும், பொருட்களின் நிர் மூலமும் அந்தச் சக்தி தான் பின் கோர வெப்பமாகப் பரிணமிக்கின்றது. அவ்வெப்பம் சாமானியப்பட்டதன்று. சூரியன் வெளிப் பாகத்தில் உள்ள உஷ்ணத்திற்கு அது ஒப்பாகுமாம்! அதனூல் கணக்கற்ற உயிர்கள் சுட்டுப் பொசுக்கப்படுகின்றன. தேசம் பிணக் காடாகின்றது. சென்ற இரண்டாவது உலக யுத்தத்தில் ஜப்பானில் அணுக்குண்டு வீசப்பட்ட போது சுமார் கால் லட்சம் பேர் இருந்த சுவடு தெரியாமல் மறைந்துவிட்டனராம்! குண்டு வீழ்ச்சியின்போது உண்டான வெப்பம் உயிரைக் குடித்ததோடமையாது உடலையும் - எலும்பு உட்பட குடித்து ஆவியாக ஏப்பம் விட்டுவிட்டதாம்!!

இயற்கையில் ஏற்படும் மாறுபாடுகளை முதலில் பார்ப்போம். குண்டு விழுந்த இடத்தை மையமாகக்கொண்டு சுற்றிவர ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு பூமியின் நிலப்பரப்பில் ஆழமான ஒரு குழி உண்டாகி, நிலமே கண்ணூடிப் பாறையாக மாறுகின்றது. அப்போது உயரே வீசப்படும்வஸ்துக்கள்பகலவனின் ஒளிக்கதிர்களை பூமியில் படியவொட்டாது தடுத்து வைத்திருப்பதோடு நில்லாமல், அதனில் கலந்திருக்கும் அணுச்சாம்பரையும் உலகெங்ஙணும் பரப்பிப் பல கேடுகளையும் விளைக்கும்; சூரியனின் ஒளி துண்டிக்கப்படுகிறமையால் நீராவி குளிர்ச்சியடைந்து பிரளயகாலம் போன்று மழை பொழியுமாம்! குண்டு வீழ்ச்சியின்போது உண்டாகும் நைட்ரிக் அமிலம் தரையை அடையுங்கால் அங்குள்ள பயிர் பச்சைகளெல்லாம் சர்வ நாசமாகும். அண்டக் கதிர்கள் உயிரினத்திற்கு ஊறு விளைப்பன. குண்டு விழும்போது அண்டக் கதிரணுக்களின் தொகையும் மிகுதியாகுமாம். இவற்றைத் தவிர மனுக்குலத்திற்கு மறைமுகமாக விளையும் கேடுகளோ அனந்தம்; அவற்றில் சில உற்பத்தி உறுப்புகள் பாதிக்கப்படுவதே அதி பயங்கரமான தொன்றுகும்;

இனி நேரிடை விளைவுகளை நோக்குவோம். இதற்கு 1945-ம் ஆண்டு ஆவணி மாதம் ஆறும் தேதி ஹிரோஷிமாவில் (Hiroshima) குண்டு வீசப்பட்டபோது நிகழ்ந்தவற்றைக் கூறுவதே சாலவும் பொருத்தமாகும். அன்றைய நிகழ்ச்சியை நான் விவரிக்கவில்லை. குண்டு வீழ்ச்சியின்போது ஹிரோஷிமாவில் இருந்து தெய்வாதீனமாக உயிர்தப்பிய இருவர் தங்கள் அனுபவத்தைத் தெரிவிக்கின்றூர்கள். இவ்வாறு செய்வதால் இரு நன்மைகள் உண்டு. ஒன்று, உங்களால் தெட்டத்தெளிய அறிய முடிகின்றது; இரண்டாவது அவர்களின் அனுபவம் உங்கள் சிந்தனைக்கு உயிர் கொடுக்கும்;

(தொடரும்)

வாசிக சாலை

இன்றைய உலகில் அறிவு வளர்ச்சிக்காக இருக்கும் சாதனங்கள் பல உண்டு; அவற்றில் வாசிகசாலையும் ஒன்றுகும்;

ஒரு கிராமத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் நூற்கூடம் இன்றியமையாதது இப்படி நூற்கூடம் இல்லாவிட்டால் அது நம் வீழ்ச்சியை காட்டுகிறது; ஒரு வாசிகசாலையைப் புதிதாய்க் கட்டுவதாலே, அங்கே ஒரு பெரியாரின் சிலையோடும் பேரோடும், அதைக் கட்டி எழுப்புவதே தமிழராகிய நாம் செய்யும் ஒரு பெரிய தொண்டு.

நூற் கூடத்தினூல் பல நன்மைகள் ஏற்படும். "வாசிப்பே ஒருவனைப் பூரண மனிதனாக்கும்." ஆகையால் வாசிகசாலை எத்தனை அத்தியாவசியம் என விளங்குகிறது. வாசகசாலையில் போய் வாசிப்பதனூல் பணம் கொடுத்து பெறமுடியாத அறிவை வளர்க்கிறோம்.

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகச் செய்திகள்

தமிழர்களின் மொழிக்கும் மத பண்பாட்டிற்கும் பேராபத்து

—!o!—

ஒத்துழைத்து பல்டியடித்தோரே இதை மெய்ப்பிக்கிறார்கள்

—o—

ஊர்காவற்துறை பிரதிநிதிக்கு தொகுதியைச் சேர்ந்தவர்களின் கூடு

"இன்று ஈழத்தில் வாழும் தமிழர்களாகிய எம்மை நிலைகுலைய வைக்கிறது ஓர் பிரச்னை. ஆம் அப்பிரச்னை தமிழர்களின் உயிர்போன்ற பிரச்னை. எந்த மொழியால், நாகரிகத்தால், பண்பாட்டால் உலகின் உன்னதமான இனமாக வாழ்ந்து வந்தோமோ அந்த மொழிக்கு, பண்பாட்டிற்கு, நாகரிகத்திற்கு எம் மதத்திற்குக்கூட ஆபத்து விரைந்து கொண்டிருக்கிறது. இத்தனை காலமும் யு. என். பி. கட்சியாருடன் ஒத்துழைத்து திடீரென்று "தனிநாடு" கோரும் எங்கள் பிரதிநிதியின்போக்கே இதைமெய்ப்பிக்கும். எனவே இனியும் நாம் அமைதியாகக் காரியமாற்ற முடியாது. எதிர்காலத்தில் நமது தமிழர்களின், தமிழ்மொழியின் சேம நலன்களுக்காகப் பாடுபடும் தலைவர்களோடு நாமும் ஒன்றித்துழைக்க வேண்டும்"

இவ்வாறு கொழும்பில் நடைபெற்ற ஊர்காவற்றுறை தமிழர் முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் சங்கத்தலைவர் திரு வி. ஏ. பரிஞ்து பேசுகையில் கூறினார்.

ஊர்காவற்றுறைத் தமிழர் முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கொழும்பு ஜெம்பட்டா வீதியிலுள்ள சங்கப் பணிமனையில் திரு வி. ஏ. பரிஞ்து தலைமையில் 2-1-56ல் கூடியது. திருவாளர்கள் சின்னராசா, எம். செல்லராசா, எம். சின்னத்துரை ஆகியோரும் பேசினர். செயலாளரின் அறிக்கை படிக்கப்பட்டபின் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

(1) இலங்கையின் அரசகரும மொழிகளாகச் சிங்களத்துடன் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்குமாறு இச்சங்கம் பிரதமரைக் கேட்டுக் கொள்கிறது. (2) ஊர்காவற்றுறை துறைமுகத்திலுள்ள பாலம் பிரயாணிகள் போக்குவரத்துக்கேற்ற தாக இல்லையாகையால் அப்பாலத்தைத் திருத்தி அமைக்கும்படி சம்பந்தப்பட்டவர்களை இச்சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது. (3) அடுத்த சங்கத்தின் கூட்டம் காவலூரில் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

பின்வருபவர்கள் சங்கத்தின் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்: தலைவர்: திரு பரிஞ்து, செயலாளர்: திரு க. அ. பிள்ளை, உப செயலாளர்: க. சின்னராசா, பொருளாளர்: எம். சின்னத்துரை, பரிசோதகர்: திரு. எஸ். எம்மனுவல். ஏழுபேர் கொண்ட ஓர் நிர்வாகக் குழுவும் சபையோரால் தெரிவு செய்யப்பட்டது.

—

திருவள்ளுவர் நெசவாளர் சங்கம்

வாழைச்சேனை திருவள்ளுவர் நெசவாளர் சங்கத்தின் 13 வது கூட்டம் சென்ற 31-12-55ல் வாழைச்சேனைக் கனிஷ்ட பாடசாலை மண்டபத்தில் புதிய தலைவி எஸ். சிவகாமலெட்சுமி தலைமையில் கூடியது.

கூட்டத்திற்குச் சமூகமளித்திருந்த அங்கத்தவர்கள் நெசவாலை கட்டுவது பற்றியும் அதற்குத் தேவையான பணம் பெறும் வழியைப் பற்றியும், நெசவுத் தொழிலைச் சிறந்த முறையில் பயின்று அதன் மூலம் பயனடைவது பற்றியும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைக் கூறினர்.

பின்னர் "ஆண்களைப் போல் பெண்களும் சங்க முன்னேற்றத்திற்காகப் பாடுபடவேண்டும். பழந்தமிழ் மாதரின் பண்புகளை உயர்த்தவேண்டும். முன்னேற்ற மனப்பான்மையில்லாத மக்களின் எதிர்ப்புகளுக்கு அஞ்சக்கூடாது. மக்களிடையே நிரம்பியிருக்கும் மூடக் கொள்கைகள் என்ற அஜைக்கட்டை நம் பகுத்தறிவு என்ற வெள்ளத்தால் முறிக்கவேண்டும். ஆகவே அனைவரும் ஆதரவு தாரீர்" என்ற தலைவரின் பேச்சுடன் கூட்டம் இனிது கலைந்தது.

—

"ஜின்னு மன்றம்" அங்குரார்ப்பணம்

நாவலப்பிட்டி ஜின்னு மன்ற அங்குரார்ப்பணம் 28-12-55ல் நடைபெற்றது.

கூட்டத் தலைவர் தமது உரையில்; "தொழுகையில் நாம்" என்பது பற்றியும், உப தலைவர்; "மன்றமும் சேவையும்" என்பது பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். முடிவில் நிரந்தர செயற்குழு நியமிக்கப்பட்டது. பொதுச் செயலாளர்: ஜனாப் எம். ஏ. வாஹீத், உதவி பொதுச்செயலாளர்: ஏ. அப்துல் கபூர், தனாதிகாரி: ஜனாப், ஏ. எம். ஸி. அப்துல் கரீம், காரிய தரிசி: ஜனாப் ஸீ. எம். பீ. மொஹிதீன், (டின்மன்னன்) உப காரியதரிசி: ஏ. ரஸாக் ஆகியோர்கள் தெரிவு செய்யப்பட்டனர்: போஷகராக; கௌரவ ஓ. எல். டாக்டர் எம். ஸீ. எம். கலீல், கௌரவ ஓ. எல். ஏ. காதர், கௌரவ எம். டி. ஜவுபர், அல்ஹாஜ் எம். காசீம் ஆகியோர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, கூட்டம் இனிதுமுடிந்தது.

—

ஹரிஜன மாணவருக்கு சகாய நிதி

கொக்குவில் மகாத்மா காந்தி ஞாபகார்த்த ஹரிஜன மாணவ சகாய நிதிச் சபையாரால் 8-1-56ல்நடத்தப்பட்ட எழுத்துப் பரீட்சை நேர்முகப் பரீட்சை என்பவற்றின்பேரில் 1956ம் ஆண்டுக்குப் பின்வரும் ஹரிஜன மாணவர்கள் சகாயநிதி உதவிபெறத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்கள். இம் மாணவர்கள் தங்களுக்குக் கிட்டவுள்ளஇந்துக் கல்லூரிகளில் தமது கல்வியைத் தொடர்ந்து கற்பார்கள். (சென்ற வருடம் தெரிவு செய்யப்பட்ட ஆறு பேரும் தொடர்ந்து உதவிபெற்று வருகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.)

(1) கோபாலன் தில்லை நாயகம் சிவியாதெரு யாழ்ப்பாணம்.

(2) பொன்னையா அரியமலர், சந்தனவளவு, அளவெட்டி.

(3) சின்னத்தம்பி தம்பிமுத்தன், கட்டுடை, மானிப்பாய்

(4) சின்னவன் மயில்வாகனம், கட்டுடை, மானிப்பாய்.

(5) சரவணை மாணிக்கவாசகர், கேணியடி, சண்டிலிப்பாய்.

(6) வெற்றிவேலு இராசமணி, வியாபாரிமூலை, பருத்தித்துறை

இளைஞர் முன்னேற்றக் கழகம்

களிபுரம் இளைஞர் முன்னேற்றக் கழகம் சென்ற 7-1-56ல் இங்குள்ள 'தமிழகம்' என்னுமில்லத்தில் செல்வன் இ. செங்கார பிள்ளையின் தலைமையின்கீழ் நிறுவப்பெற்றது. திரு எஸ். முருகரத்தினம் கழகத்தின் குறிக்கோள்பற்றிச் சிறிது சொற்பொழிவாற்றினார். அதன் பின்பு திரு சி. சிவலிங்கம் 'இளைஞர் ஒற்றுமை'பற்றிச் சிறிது குறிப்பிட்டார்.

பின்னர் கீழ்க்கண்ட நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர் இ: செங்கார பிள்ளை, உபதலைவர்: ச. பெரியதம்பி, காரியதரிசி ம. செல்வச் சிவபாதம் உப காரியதரிசி த. குமாரசாமி, தனாதிகாரி வ சங்கரநாதன், உபதனாதிகாரி த: திசநாயகம், பத்திராதிபர் ச.பெரியதம்பி. ஈற்றில் செல்வன் ம. செல்வச்சிவபாதம், ச. பெரியதம்பி அவர்களது நன்றியுரையுடனும், தலைவரது முடிவுரையுடனும் கூட்டம் இனிது முடிவுற்றது.

—

கலையமுதக் கழகம்

கலையமுதக் கழகத்தின் கூட்டம் சென்ற 6-1-56ல் திரு இ சதாசிவம் (அர்ச். செபஸ்தியார் பாடசாலை முன்னாள் தலைமையாசிரியர்) தலைமையில் நடந்தேறியது.

மேற்படி கூட்டத்தில் உத்தியோகஸ்தர்களாக கீழ்க் காணப்படுவோர்களைக் கழகம் தேர்ந்தெடுத்தது:

ஆலோசனைத் தலைவர் திரு இ. சதாசிவம், தலைவர்: திரு இ. நல்லதம்பி, உப தலைவர் திரு. பொ. நல்லரெத்தினம், செயலாளர் திரு. பூ. கணபதிப்பிள்ளை, உதவிச் செயலாளர் திரு. செ. சூசைப்பிள்ளை, பொருளாளர் திரு. எஸ். தர்மசேனை.

மேற்படி கழகம் கலையமுதம் என்னும் பத்திரிகையை வெளியிடும் பொருட்டு நிதி திரட்டும் நோக்கமாக "நிரபராதி" என்னும் நாடகத்தை நடாத்த கழகம் ஏகமனதாகத் நீர்மானித்தது.

—

தமிழ் வளர்ச்சிச் சங்கம்

தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபடும் நோக்கத்துடன் கொடப்பிட்டியாவில் சென்ற 8-1-56ல் "தமிழ் வளர்ச்சிச் சங்க"மொன்று ஆரம்பிக்கப்பட்டது. கூட்டத்திற்கு ஜனாப் ஏ. ஐ. எம். மஹ்றூப் தலைமை வகித்தார்.

இன்றைய நிலையில் இஸ்லாமிய இளைஞர்களிடையே தமிழ் வளர்ச்சிச் சங்கங்கள் இருக்கவேண்டியதன் அவசியத்தையிட்டு ஜனாப்களான எம். யூ. எம். ஜிப்ரி, எம். எஸ். முகம்மது, ஏ. ஸி. நிளாமுத்தீன், எம். ஏ. ஹபீள் உட்பட இன்னும் பலர் பேசினர். உத்தியோகத்தர்களாக பின்வருபவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர் ஏ. ஐ. எம். மஹ்ரூபு, காரியதரிசி எம். எச். ஏ. பாரி, தனாதிகாரி எஸ். ஐ. முகம்மது.

—

கொம்பன்குளம் கி மு. கழகம்

நெல்லை மாவட்டம் கொம்பன்குளம் கிராம முன்னேற்றக் கழக இலங்கை கிளையின் சார்பாக, தமிழகப் புயல், வெள்ளக் கொடுமைகளுக்கு ஆளாகித் தவிக்கும் மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக, இக்கிளையின் சார்பாக நிதிதிரட்டிய ரூபா 75/- ம் "உரிமைக் குரல்" ஆசிரியர் தோழர் வி. எஸ் முருகன் அவர்களிடம் கொடுக்கப்பட்டதுடன் தாமதியாது தமிழகத்திற்கு அனுப்பிவைக்கவும் அரசை கேட்டுக்கொண்டது.

எலிக்ஸ்ரைன்

இரத்தசுத்திக்கும், இரத்த விருத்திக்கும், தசை வளர்சிக்கும், இராஜ உறுப்புக்களுக்கு முறுக்கு ஏற்றுவதிலும் முதன்மைபெற்றது.

நிகரற்ற தேகவலிமை, புதிய இரத்த ஒட்டம், அபாரமான ஜீவசக்தி, ஆனந்தமயமான இன்பம் கொடுக்கவல்லது.

உடம்பு மெலிந்து சக்தியற்று வாடும் ஒவ்வொருவரும் எலிக்ஸ்ரைன் சாப்பிட்டால், சதை புஷ்டியுண்டாக்கி நரம்புகளுக்கு பலமும் முறுக்கேற்றி, எலும்புகளை வளர்த்து ஜீரணக் கருவிகள் உறுதிப்பெற்று, ஜீரண சக்தியும் தேகத்திற்குப் பலமும் வசீகரமும் ஊட்டி, வீரிய சக்தியைப் பெருக்கி யௌவனத்தைத் தரும்.

20 நாள் 40 வேளை மருந்து

விலை ரூ. 3-00. தபால் செலவு 50 தனி.

வாதரோகா

அடிக்கடி ஏற்படும் விரை வீக்கம், விரை ஏறி இறங்குதல், பீஜத்தில் அடிக்கடி ஜலம் சேர்ந்து பருத்துப்போதல், விரையால் பொறுக்க முடியாத குத்தல், குடைச்சல், குடலில் வாய்வு தங்கி குடுகுடுவென்று சப்தம் உண்டாகுதல், அடிக்கடி குடலில் வாய்வு சுழறுதல் முதலிய விரையைச் சார்ந்த எல்லா வியாதிகளுக்கும் நிச்சயம் குணம் கிடைக்கும்.

புட்டி ரூ. 3-25. தபால் செலவு சதம் 50

ஜீவா ஸ்டாமக் பவுடர்

வயிற்றிலுண்டாகும் வியாதியையும் வயிற்றிலேற்படும் புண்களையும் குணப்படுத்தி, வயிற்று வலியை நிறுத்திப் பசியையும் ஜீரண சக்தியையும் கொடுத்துப் புண்களை ஆற்றவல்லது. 20 நாள் 40 வேளை மருந்து விலை ரூ. 3-25-

தபால் செலவு சதம் 50 தனி.

இன்பன்

துர்சசெய்கைகளாலும், வயது தளர்ந்ததாலும் ஏற்பட்ட ஜீவ நரம்புகளின் பலஹீனத்தைப் போக்கி ஆண்மையையும், புஷ்டியையும் கொடுக்கவல்ல அதிசய மருந்து. உள்ளுக்கு "எலிக்ஸ்ரைன்" சாப்பிட்டு இதை மேலே உபயோகிப்பது நல்லது.

புட்டி 1க்கு ரூ, 2-25. தபால் செலவு சதம் 50 தனி.

ஹிப்பிலினே

மேகப்படைகள், மேகரணம், மேக வாய்வு, மேக ஜுரம், கிரந்தி, கண்டமாலை, யோனிப்புற்று, லிங்கப்புற்று, சொறி, தேமல், சிறங்கு, குதிக்கால் வாதம், தடிப்புகள், உடம்பு ஊரல், குஷ்டரோகங்கள், ஸ்திரி சம்பந்தப்பட்ட சகல ரோகங்களையும் உத்திரவாதத்துடன் குணப்படுத்தும். ஆண்-பெண் இரு பாலாரும் சாப்பிடவல்லது. 20 வேளை மருந்து

ரூ 4-50. தபால் செலவு சதம் 50 தனி

பாலதி தைலம்

ஒற்றைத் தலைவலி, கண்ணெரிச்சல், மூளைக் கொதிப்பு, தலைமயிர் நரைத்தல், தலைமயிர் உதிர்தல், ஞாபகக் குறைவு, உஷ்ணக் கொதிப்பு, தலையில் உண்டாகும் பலவித மண்டை ரோகங்களைக் குணப்படுத்தி தலைமயிர் மிக மேனியுள்ளவையாகவும், அடர்ந்து அதிவிரைவில் வளரச் செய்யும். கண்ணிற்குக் குளிர்ச்சியையும், முகத்திற்கு வசீகரமும், மனத்திற்கு உல்லாசமும், தேகத்திற்கு காந்தியும் தரும். இதைத் தலைக்குத் தேய்த்து ஸ்நானம் செய்யலாம்.

டின் 1க்கு ரூ. 3-25. தபால் செலவு சதம் 50 தனி.

கசாசா

(ஆஸ்த்மா நிவாரணி)

காசம், இருமல், ஈளை இருமல், ஆஸ்த்மா எனப்படும் கொடூர நோயையும், கோழை, கபக்கட்டு, கண்டகுவாசம், இளைப்பு, குரலடைப்பு, தொண்டைக்கம்மல், தொண்டைவலி, மார்துடிப்பு முதலிய வியாதிகளைக் குணப்படுத்தி, இரவில் தூக்கத்தை உண்டாக்கும். 20 நாள் 40 வேளை மருந்து ரூ. 3-25

தபால் செலவு சதம் 50 தனி.

பிமோனை

ஸ்திரிகளின் கர்ப்ப சம்பந்தமான சகல வியாதிகளுக்கும் கைகண்ட ஔஷதம். மாதாமாதம் விலக்கு ஏற்படும் காலங்களில் உண்டாகும் வயிற்று வலியையும், இரத்தம் கட்டியாகவும், கருத்தும், படுதல், சூதகம் முழுவதும் வெளியாகாமலும், சிறிது உள்ளே தங்குதலும், குத்தல், கைகால் சோர்வு, இடுப்பு நோவு, வாந்தி, ஆயாசம், கர்ப்பசிதைவு, அஜீர்ணம், தலைவலி முதலிய வியாதிகளை சூரியனைக் கண்ட பனிபோல பறக்கச் செய்யும்.

விலை ரூ 3-25. தபால் செலவு சதம் 50 தனி.

நில் பெயின் பாம்

ஜலதோஷம், தலைவலி, தலைபாரம், புறங்கழுத்து பிடிப்பு வேதனை, முழங்கால், முழங்கை வலி முதலியனவற்றிற்கும் மருந்து பூசி, சூடுவரும்படி கையால் தேய்க்க உடனே வலி முதலியன நீங்கும். இருமல் முதலிய கபநோய், சுவாச இழுப்பு, மந்தாரகாசம் முதலியவைகளுக்கு, தொண்டை, நெஞ்சு முதலிய இடங்களில் பூசிவர கபம் வெளிப்பட்டு நோய் தீரும்.

மேகவாய்வு, பாரிச வாய்வு, திமிர்வாதம், கைகால் நீட்டவும், மடக்கவும் முடியாமல் நரம்பு பிடித்தல் முதலியவைகளுக்கு உபயோகிக்க உடனே சுகப்படும்.

பல்வலி, பல்வீக்கம், மற்றும் பல இடங்களில் காணும் நோய்கள், பூரான், தேள், பாம்பு, வண்டு இவைகளின் விஷக்கடி, சரீரத்தில் உள்ள எல்லா வேதனை முதலியவைகளுக்கும் இது விசேஷமானது.

புட்டி 1க்கு ரூ. 1-00. தபால் செலவு சதம் 50 தனி.

நவலட்சுமி புத்தகசாலை, 136, செட்டியார் தெரு, கொழும்பு.
தபால் பெட்டி: 442. போன்: 5942.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தார்
திரை ரசிகர்களுக்கு அளிக்கும்
சிறந்த பொங்கல் பரிசு
விஜயாவின்
குணசுந்தரி

நடிக பாத்திரங்கள்:
ஜெமினி கணேசன்,
சாவித்திரி, நம்பியார்
முதலியோர்.

இத்தீவகத்தில் ஓடும்
சிறந்த சித்திரம்!

இப்பொழுது ஏககாலத்தில் ஏழு திரைகளில்
காட்சி அளிக்கிறாள் அழகுசுந்தரி!

கிங்ஸ்லி
கொழும்பு

சபையர்
வெள்ளவத்தை

விஜயா
மட்டக்களப்பு

வெம்பிளி
கண்டி

வெலிங்டன்
யாழ்ப்பாணம் & நிருகோணமலை

மோடர்ன்
பதுளை

இப்பத்திரிகை கொழும்பு தட்டாதெரு 196-ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டாதெரு, யாழ்ப்பாணத்தில் இருந்து 1954 ஜனவரி 22-ந் திகதி பிரசுரம்செய்யப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org